# பெரியஎழுத்து

# மஞ்ஜிகாதல்

விலை அணா

B.R.N. & SONS.
MADRAS.

உ

கடவுள் துணை

ஆரைமாநகர் சுவாமிநாதப் பிள்ளை என்னும்

தெய்வச்சிலையா பிள்ளை அவர்கள் இயற்றிய

# மநுநீதி காதல்




## B. இரத்தின நாயகர் ஸன்ஸ்

திருமகள் விலாச அச்சகம்

சென்னை-1.

இதன் விலை] 1955. [அணா 12.

# விண்ணப்பம்

அன்பார்ந்த நண்பர்காள்!

"மநுநீதி காதல்" என்னும் இந்நூல் முன்னோர்கள் இயற்றிய பல அரிய பெரிய நீதி நூல்களிலுள்ள விஷயங்களையெல்லாம் தெரிந்தெடுத்து செய்யுள் ரூபமாக இயற்றப்பட்டுள்ளது. இதனை இந்நாட்டிலும், தென்னாட்டிலுமுள்ள பாடசாலைகளின் உபாத்தியாயர்கள் சிறுவர்களுக்குப் பாடமாக வைத்துக் கற்பித்துக் கொடுத்தால் பிள்ளைகள் அநேக நீதிகளை எளிதில் அறிந்துகொள்வார்கள் என்பதற்குச் சற்றும் ஐயமில்லை. தவிர, கற்றோர்களும் மற்றோர்களும் இந்நூலை ஒருமுறை வாசித்தால் எண்ணமற்ற மநுதர்ம விஷயங்களைத் திண்ணமாய் அறியலாம்.

உ

கடவுள் துணை

# மநுநீதி காதல்

விநாயகர் துதி

யானைமுகவானையுமை யாளனூர்பாலகனே
ஞானமுதலானகுரு நாதனே—மானிலத்தில்
ஆதிமநுநூலிலுரை யாததனையானுமொரு
காதலெனுமோத வருள்காண்.

புத்திவருமெய்ஞ்ஞானப் போதமுறும்புண்ணியமுஞ்
சத்தியமாமேன்மைமிகத் தங்குமே—நித்தநித்தம்
சாதனையதாய்ப்புவியில் சாமிநாதன்சொல்மநு
நீதிநூல்பார்த்தால் நிதம்.

வாணி துதி

பூமேவுலோகம் புகழுமநுநீதிநூல்
பாமேவுசெஞ்சொற் பயனறிந்துயான்பாட
மூலகணேசன் மூளறிபதம்போற்றி
வாலைசரஸ்வதியென் வாக்கிலிருந்தருள்வீர்.

அவையடக்கம்

வேதமுறைசொன்னதிந்த மேதினியிலுள்ளமநு
நீதிமுறைதன்னை நிகழ்த்தினூர்முன்னோர்கள்
வள்ளுவனுரெளவைமுதல் வழுத்துமநுநீதி
தெள்ளுதமிழ்க்கடலிற் சிற்றகப்பைமுகந்தாற்போல்
மாலைசதகமநு நீதிசாரமெனனும்
ஞாலமதிற்கவிஞர் நவின்றூர்பலநூலால்
பண்ணும்பலநூலிற் பாடும்பொருளதனை
எண்ணியெந்தன்சிந்தைக் கிசைந்ததேயறிந்தமட்டும்
ஞாலமதிலுதிரும் நவமணியெல்லாம்பொறுக்கி
மாலையாய்க்கோர்த்த வகையாகவிந்நூலை
காதலுடனியானுமொரு காதலெனப்பாடிவைத்தேன்
மாதவத்தோர்முத்தமிழின் வல்லோர்மனமகிழ

ஆக்கியோன் பெயர்

மாவிளஞ்சேர்செம்பி வளநாடன்மிக்கான
பூவைசியனென்னும் புகள்படைத்தநங்கைகுலன்
ஆதிவையைசங்குமுக மாறைந்தானராம
நாதவேள்பாலன் நளினகவிரஞ்சிதவான்
சீலமிகுமமூர்தச் செந்தமிழின்பாவினஞ்சொல்
மாலோனருள்சிறந்த மாபாரதப்ரசங்கன்
கையுற்றநெல்லிக் கனிபோலறியவென்று
தெய்வச்சிலையா னுரைத்த தெள்ளமிர்தாமாமிதுவே
உற்றதொருகாவேரி யொன்ருய்ப்பெருகிவர
சிற்ருரல்நீருமதிற் சேர்ந்தங்கேயோடுதல்போல்
சந்திரனேடம்பரத்திற் ருரகைகள்வாழ்வதுபோல்
செந்தமிழோர்முன்னே சிறியேனுரைத்ததமிழ்
புன்சொற்குதலையுங்கள் பிள்ளைமொழிபோலமகிழ்ந்து
என்சொல்லிதனை நீங்க ளின்பமெனக்கொண்டருள்வீர்

நூற்பயன்

சாத்தியாசத்தியமும் சாதிமுறைமார்க்கங்கள்
உற்றதொருதர்மங்க ளுதவியுதவாமை
தன்மனைவிமைந்தரொடு தகமையுடன்வாழ்வதுவும்
பின்மனைவிவேசையர்கள் பேதத்துள்ளாவதுவும்
மானமீனம்வாழ்வு மகிழ்ச்சியுடன்வஞ்சகங்கள்
தானுமுயர்கீர்த்திப்ர தாபம்பரிமளித்தல்
துற்பிறவிசற்சனர்கள் சோரமுடனுக்கினைகள்
நற்பிறவியாயுள்விர்த்தி நற்பதங்கள்நல்லறிவு
கற்பனைகளொப்பனைகள் கயவர்குணவிலக்கம்
எப்போதுந்தாளாண்மை யென்றுங்கடவாமை
காலத்தின்கற்பனைகள் கடவுளால்நிர்ணயங்கள்
ஞாலமதில்நன்றியுட னற்றவர்பத்திமுத்தி
சீதேவிமூதேவி சேரிடங்கள்தானுமது
நீதிமுறைவறுமை நிச்சயமாய்ச்சேரிடங்கள்
சேராவிடம்லோபி சின்னத்தின்பாங்குகளும்
பேரானமாதா பிதாவவர்களாவதுவும்
இருந்துமிறந்தோர்க ளிறந்துமிறவாதார்
மிருந்ததுவும்பண்டிதத்தின் மார்க்கமனத்தூக்க

சுத்தமசுத்தங்கள் தோஷகயாதிலட்சணங்கள்
மெத்தப்பெரிதரிது மெலியதானங்கொடிது
மிஞ்சுங்கொடுமையினால் மின்னார்களாசையினால்
வஞ்சகத்தினாலிறந்தோர் மாருதபேறுபெற்றோர்
இத்தகைமையாவதுட னின்னமின்னம்பலவாய்
சித்தமுடன்முந்நூலோர் சொன்னபடியேயுரைத்தே
நன்னயஞ்சேரிந்நூலை ஞாலமெல்லாந்தானறிய
சொன்னதொருபாடற் றொகையுமோராயிரமாம்
பாடினேனிந்நூலை பயனறிந்தவுத்தமர்க்கு
ஈடுண்டோநல்லறிவுக் கின்னதொருநூலுளதோ

[வேதியரொழுக்கம்]

ஆரணங்களோதுவதும் யாகாதிசெய்வதுவும்
மீதுகாயத்திரியால் வினையெல்லாந்தீர்ப்பதுவும்
கல்லும்பிருதிவின் கானமாந்தாம்பூலம்
எல்லாச்சிலையுருவுக ளெய்தும்படிமுடித்தால்
நன்னயமாய்மாரிபெய்து நாடுசெழிப்பதுவும்
மன்னர்செங்கோலு மறையோர்மகிமையன்றோ

[அரசரொழுக்கம்]

தேசத்தியற்கை தெரிந்தமநுநீதி
வாசற்பிரதானி வாய்மைகுறிப்பறிதல் [மாம்
தன்னுயிரைப்போல்மன்னுயிரைத் தற்காத்தல்சத்திய
மன்னுங்குடிதனிலே மாறுவபிமானம்
வங்கிஷத்திலுள்ளோர் மகிமைகுறையாமல்
தங்கள்குலத்தைத் தராதரமாய்க்காப்பதுவும்
காலமிடமறிதல்மிகத் தானதர்மசிந்தனைகள்
தாலமிசைகீர்த்திப்ர தாபம்பரிமளித்தல்
தேவபக்தியுடன் சிட்டர்பரிபாலனம்
மேலவராந்துட்டர்களை விரைந்தடக்குமாக்கினையும்
மாசனங்கள்மீதிலபி மானமதுபன்றுன்கும்
ராஜநீதத்தி னலமென்றுரைத்திடுமோம்

[வர்த்தகரொழுக்கம்]

தானறிந்தவாணிபமுந் தப்பாநிறைவசன
மானவரோதயத்துக் கதிகஞ்சிலவழியார்

கணக்கிலணுவும்விடார் காரியத்திலேசெலவும்
இணக்கமுடன்செய்வா ரிசைவார்க்கிசைவார்கள்
பொய்யுரையும்பேசார் போற்றிப்பொருள்சேர்ப்பார்
வையகத்தில்மிக்கான வணிகர்குலமாக்குமிதாம்
மறையோர்க்குமங்களமு மன்னவர்க்குவல்லபமும்
குறையாதவர்த்தகர்கள் கொள்வினையும்விற்பனையும்

[வேளாளரொழுக்கம்]

ஆகமவேதங்கள் தேவாலயம்விளங்குவதும்
மேகம்வருஷிப்பதும் வேந்தர்கள்செங்கோல்முறையும்
பாரிலேதர்மபரி பாலனங்கள்மேலுமுயர்
சூரவலியுந் தொழிலாளர்சீவனமும்
தாளாதகீர்த்தியுடன் றரணியில்வாழ்வெல்லாம்
வேளாளர்தங்களது மேழிப்பெருமையன்றோ

[தருமநீதி]

அறத்திற்பெரிதுமில்லை யதனையணுவளவும்
மறப்பதுவேகேடன்றி மற்றுமுயர்கேடுளதோ
தர்மாதர்மமிரண்டுஞ் சதகோடிநாட்செயினும்
அம்மாத்திரமு மனுபவித்துத்தீருமன்றோ
எண்ணும்பலபொருளு மிகத்திற்குவாராது
புண்ணியபாவங்களிரண்டும் போவதில்லையுன்னைவிட்டு
பொன்னாடையாபரணம் பூதானமீந்தாலும்
அன்னதானத்துக் கதிகமுறுதானமுண்டோ
தன்னாற்சுயமாயோர் தர்மந்துடங்குவதில்
முன்னோர்செய்தர்மத்தை முக்கியஞ்செய்தலுத்தமமாம்
பாவபுண்ணியமிரண்டும் பல்லக்கின்கீழ்மேலும்
போவதுவேசெய்த புண்ணியமும்பாவமுமாம்
கோணாதணுவளவும் குறையாதுவாழ்வதற்கு
ஆணிவேரென்பதுவு மறமென்றுசொல்லுவதாம்
உண்ணரிற்வாழ்வு மெய்தும்பெருந்தவமாம்
புண்ணியமொன்றில்லாதேல் புனல்நிறைந்தகாட கும்
ஏதாகிலுந்தர்ம மெவருந்தான்செய்யவென்றால்
ஏதாகிலுமனதுக் கிசைந்தபடியேகொடுத்து
வாக்குசரீர மதனாற்சகாயங்கள்
ஏற்கவேசெய்வோர்க் கிகபரம்வந்திடுமே

எத்தர்மமானதற்கு மிடையூறுசெய்தவர்கள்
புத்திரருமத்திபமாய்ப் போவார்நரகமதில்
மன்னருள நீத மதனிற்பதின்மூன்றும்
முன்னமேசொன்ன முண்டுபதின்மூன்றுரைப்பார்
சேனைகுடியுஞ் சினேகமும்மந்திரியும்
ஆனபலவேளாண்மை யதனுடனேயிவ்வாறும்
மிச்சமறிவீகை மேலுந்தயிரியமும்
உச்சாகமென்ப துடனேயிவைநான்கும்
தூங்காண்மைகல்வி யுடனேயிம்மூன்றும்
நீங்காமல்வேணும் நிலமாளரசருக்கு
யானைகுதிரைபடை யாளுடனேயாலயங்கள்
ஆனதல்லதர்மமதி னினைவுடனேயிம்மூன்றும்
ஏழைக்கிரங்கி யெப்பிழைகளும்பொறுத்தால்
மீளவேதீர விசாரித்துத்தெண்டனையுந்
தக்கமரியாதை தயவுங்குடியினிலே
இக்குணங்களெல்லா மிருக்குமந்தராசாவை
ராசசிங்கமென்பரிவர் நாட்டினிற்பசிபிணியும்
மாசிலையாம்வறுமை வாராதென்றேயுரைத்தார்
தான்செய்யுந்தர்மந் தனக்காகமுன்னோர்க
ளானபேர்தர்மத்தை யபகரித்துக்கொண்டாக்கால்
துன்னடக்கைஎன்றுமகா தோஷம்வந்துசூழுமென்று
நின்மலமாமென்று நிகழ்த்தினார்மநுநூலை
ஆலரசுவேம்பிதுமூன் றானதிலேயொவ்வொன்று
மேலும்விளாநெல்லி வில்மதில்மும்மூன்றும்
அன்பாகதெங்கு மாயைந்துமாபுளியில்
ஒன்பதுடனொன்றுமி தொன்பதையும்வைத்தவர்க்குத்
தரணியிலேயெந்நாளும் தக்கபுகழ்விளங்கும்
நரகமிவர்க்கில்லையென்று நவின்றார்மநுநூலில்
அன்னைதந்தைசுற்றங்க ளாதியிலேநம்பினவர்
முன்னுதவிசெய்தவர்கள் மிடிமையுற்றுவந்தவர்கள்
தக்கபெரியோரைச் சரணமென்றடைந்தவர்கள்
மிக்கவெளியோர்கள் மேனாளிற்சேவகரை
கைநழுவச்செய்யாமற் காப்பாற்றுமுத்தமர்க்கு [ம்
வையகத்தில்வாழ்வெய்தும் வம்மிசமும்விர்த்தியுண்டா
தன்னுயிர்போல்மன்னுயிரைத் தற்காத்தவுத்தமர்க்கு

என்னென்னபாவம்போ மிகபரம்வந்தெய்திடுமே
மாமறையோர்முதலாய் மற்றுமுள்ளோர்தங்களுக்கும்
சேமமுடனெண்ணெய் தேய்ப்பவர்தங்களுக்கும் [போர்
மறையோர்க்குதொண்டுசெய்து மாதாவைதெய்வமென்
கறவைதனைக்கண்டவுடன் கையாற்சொரிபவர்க்கு
எண்ணுமற்கோடி எக்கியங்கள்செய்தவெகு
புண்ணியம்வந்தெய்துமென்று புகன்ருர்மநுநூலில்
துன்மார்க்கர்தங்குடியைச் சுத்தமாகக்கெடுத்து
நன்மார்க்கமுள்ளசில நற்குடியைக்காத்திடலாம்
அறக்குடிபத்தானுலும் அவர்கடனைக்கொடுத்து
சிறப்புற்றபட்டணத்தைச் சீர்திருத்திக்காத்திடலாம்
வீடானபட்டணத்தை மிகவுமங்கேகெடுத்து
நாடானதைவைக்க லாகுமதிற்பாவமில்லை
என்றுமுன்னுள்மாயவனுமே யாவானைப்பலியாய்க்
கொண்டிடப்பாண்டவர்க்குக் கூடியதிவ்வாருகும்
தீபமொன்றுலட்சந் திரிகொளுத்தினுலுமந்தத்
தீபங்குறையாத செய்கைபோலெந்நாளும்
தன்மீதிலோயாத் தானதருமஞ்செய்வதற்கு
மண்மீதிலுண்டாகும் வாழ்வெதுவுங்குன்ரு
நம்மையேதர்மமதி னுலேவரும்தாழ்வு
துன்பம்வருவதில்லை தூயமனேகுன்ருது
துன்மைதர்மத்தாற் றுலங்கும்பெருவாழ்வு
நன்மைதரமாட்டாது நலவிர்த்தியாகாது
தர்மம்பொருள்கிடைத்த தற்காலஞ்செய்யவென்று
வறுமைவந்தால்தர்ம மதுசெய்யக்கூடாதே
காய்பழங்கள்பூவிலைகள் பதித்தமரங்களிலே
வாழ்வுசென்ருல்நற்கனிகள் மட்டுமுதிராமல்
தக்கபழம்காய்பூ தளிர்முதலாயுதிரும்
பக்குவம்போற்கெற்பமுதற் பயந்தமனுக்களிலே
சாலக்கிழவர்மட்டுஞ் சாவதன்றிமற்றெவரும் [ஞ
ஞாலமிசைச்சாவதில்லை யாக்குமென்றெண்ணவொண்
என்னவயதானுலு மியல்புவரும்வேளையிலே
நன்னயஞ்சேர்தர்மஞ்செய் தாலிதுவேயுத்தமமாம்
பண்டுசெய்தபுண்ணியமும் பாவமென்றுஞ்சொல்லும்
இரண்டுமனுபவிப்பா ரெக்காலமானுலும் [விதம்

நமக்குள்ளதைச்சமைத்து நாமுண்டுவந்தபிறர்
தமக்குங்கொடுக்கின்ற தர்மமேமுக்கியமாம்
வாசற்கதவடைத்து வைத்துண்பார்க்குச்சொர்க்க
வாசற்கதவு மாறுதடைத்திருக்கும்
உப்பில்லாக்கூழு முள கிழ்ந்துதான்கொடுத்தால்
ஒப்பில்லாப்பாலமிர்த மொக்குமென்றூர்முன்னோர்கள்
பகைவன்கொடுங்கோபி பாலமிர்தமீந்தாலும்
மிகவானநஞ்சுக்கு மெட்டிக்குமொப்பிடலாம்
ஓட்டைக்குடத்திலிட்ட வுதகம்போனாற்போலே
நாட்டுமவர்வாழ்வு நாளுக்குநாள்குறையும்
கூடிவருங்காலங் குறிப்பறிந்துதம்மாலே
கூடுமட்டுந்தர்மங் கொடுத்தாரேயாமாகில்
வாளுளேபோகும் வழியடைக்குங்கல்லென்று
கோனுதவாய்மை குறளிலேசொன்னரே
ஆறிலொருகடமை யரசர்க்காமைந்துபங்கு
சேரும்விருந்துசுற்ற தெய்வம்பிதிர்தமக்காம்
இல்லறத்தில்வாழ்ந்தா லிவ்வாறுசெய்யவென்று
வல்லமைசேர்வேதமுறை வள்ளுவருஞ்சொன்னரே
பாவத்தாற்பொன்தேடிப் பலதர்மஞ்செய்தாலு
மேவற்றபுண்ணியங்க ளெள்ளளவும்வாராதே
தர்மத்தாற்தேடித் தராதரமுங்கண்டறிந்து
தன்மையுடனேவந்தோர் தமக்குவிருந்தளித்து
இன்னம்வருவிருந்துக் கெதிர்பார்த்திருக்கின்ற
நன்னயவான்வீடந்த லட்சுமியின்வீடாகும்
பூமியிலேவித்தேறும் போட்டதேயுண்டானல்
தாமேதானைஸ்வரியந் தன்னலேகூடிவரும்
ஏற்போர்களாரேனு மெவ்வேளைவந்தாலும்
கூர்ப்பாகத்தம்மாலே கூடுமட்டுமீந்தாக்கால்
இறந்தாலிருந்தாலு மெந்நாளுங்கீர்த்தியுண்டாம்
பிறந்தாலுமேலாம் புகழதிகவாழ்வுண்டாம்
தர்மங்களாவதுதான் தர்மவான்செய்வதல்லால்
கர்மிகளுக்கெய்தாதெக் காலமுந்தான்செய்யானும்
எத்தர்மமானலு மீகைக்கிணையில்லை
மற்றெல்லாரின்னென்று மநுநீதியிலுரைத்தார்

[மாரிச் சிறப்பு]

மண்ணிலுறுதவங்கள் மாதானமற்றுளதும்
விண்ணின்றுபோனுல் விழலாகும்மாரிமுதல்
மாரிவளமு மானிலத்திற்புற்பூடும்
சீர்பெருந்தானந்தவந் தேவாலயச்சிறப்பும்
மன்னர்முதலானவர்கள் வாழ்வுமவர்வாழ்வும்
மன்னுமுயர்வானமதில் மாரிவளமாமன்றே

[இல்லறம்]

வெல்லறங்கள்செய்துகன வேள்விமுடித்தாலும்
இல்லறத்தின்வாழ்வுக் கிணையாவதொன்றுமில்லை
மூர்த்தியென்றமூவருக்கும் முன்னுளிறந்தவர்க்கும்
பார்த்திபர்க்குந்துறந்தார் பலமுயற்சியாளருக்கும்
இயல்பினுலில்லா ரிவர்க்குத்துணையெனவாகும்
நயமாகுமென்றுகூற ளானதினுலேசொல்லினரே
மட்டில்லாவாழ்வருந்தென் மனைதனக்குமுக்கியமாம்
இட்டமுறுபெண்சாதி யென்பவளேமுக்கியமாம்
சற்குணமுந்தெய்வபக்தி தர்மசிந்தைகற்புடைமை
இக்குணங்களுள்ளா ளிருக்குமந்தவீட்டினிலே
வற்ருதுசெல்வமவள் வாயால்மாரிபெய்யென்று
உத்திரஞ்சொன்னு லுலகமெல்லாமாரிபெய்யும்
தானுமனையாளுமொரு தர்மமதுசெய்யநன்று
தானவர்கள்வேறுபட்ட தர்மமதுதர்மமல்ல

[செல்வ நிலையாமை]

நினைத்தபொருணீங்கி நினையாப்பொருளென்று
மனைத்துமதுதானே யப்படியும்வந்துவிடும்
நிலையாகத்தோற்றுகின்ற நிலவதும்போயிருளாம்
கனஞ்சேரிருணில்வாய்க் காட்டுதற்கப்பாலும்
இரவும்பகலாகும் பகலுமிரவாகும்
பெரிதானமேடங்கே பேராருயாகிவிடும்
ஆறதுவுமேடாகும் மணல்நிலத்திலோடம்வரும்
வாரியசுவறியதில் மணலுமிகச்சூடாகும்
வேண்டும்நிதியோ ரெளியோருமாவார்கள்
மீண்டுமெளியொரு மேலோருமாவார்கள்

தகமைசெறிவாழ்வுந் தாழ்வுஞ்சதமல்ல
சகடுபோற்சுற்றிவருந் தாழ்வதுவும்வாழ்வதுவும்

[தெய்வச்செயல்]

பேராசையாலே பிரயாசைப்பட்டாலும்
வாராதுவாராது வருவதும்போகாது
எங்கெங்கேபோனாலும் மியாவரிடஞ்சென்றாலும்
பங்கமுரைத்துப் பலரைமிகநொந்தாலும்
அழுதுதொழுதாலும் அநேகநாள்தெய்வத்தை
பழுதாயுரைத்தாலும் பயனேதுமெய்தானே
ஆழக்கடலி லமுக்கிமுகந்தாலும்
நாழிவரும்நாளையிலே நானாழிநீர்வருமோ
பூர்க்குமரஞ்செடிகள் பூவாநாட்பூவாது
ஆர்க்கும்விதியையன்றி யாசையினால்வாராதே
ஆலிற்புறாவிரண் டங்கிருக்கவோர்வேடன்
சீலமுடனெய்வதற்குச் சிலையிற்கணைதொடுக்க
பாயவந்தராசாளிப் பட்சியதுமேலுலவ
தூயபுறாவின்மேற் றொடுத்தகணைவிலகி
ராசாளிப்பட்சியுட லானதிலேதைத்துவிழ
பாசமுறுவேடன் பாதத்தில்விஷந்தீண்ட
வேடனும்ராசாளியுமாய் வீழ்ந்துவிடவேயொரு
ஜோடாய்ப்புறாவிரண்டுந் துன்பமற்றுவாழ்ந்ததுவே
இத்தகைமையாய்முடிவு மீசன்செயலாவதற்கு
அத்தாட்சியாமென் றருளினார்முந்நூலோர்
அண்டரமுதுண்ண வரனுமேநஞ்சையுண்டான்
கொண்டல்வண்ணர்காடுறைந்துக் கோதைதனைப்பிரிந்
வேதன்சிரமிழந்து மிப்பாற்சிறையிருந்தான் [தார்
ஆதியிலேயிந்திரனு மங்கமெல்லாங்கண்ணானான்
சக்கரேசனைவரிச் சந்திரனும்பெண்டிரும்
மிக்கதொருநாடிழந்து விலைபட்டுத்துன்பமுற்றார்
மன்னுநளராசன் மனைவிதனைப்பிரிந்து
தன்னுடையநாடிழந்து தன்வடிவுகுன்றினனே
ஐவராடவியுற்றா ராகையாலாரேனும்
வெய்யோன்விதிதனையே வெல்லயெவரால்முடியும்

பூபாரந்தீர்த்த புயல்வண்ணன்வேடன்கை
ஆபரணம்பட்டுழன்று வாதைக்குள்ளாகினனும்
ஆனைபறவையுட னுடரவமிம்மூன்றும்
சேனைமனிதர்கையில் சிக்கிமெலிவதுவும்
நல்லகதிர்மதிகள் ராகுகேதாற்றுயருறலும்
வல்லதர்மவானுக்கு வறுமைவந்துசூழுவதும்
பாக்கியமுள்ளானுக்கோர் பாலகனில்லாததுவும்
போக்கற்றவேழைக்குப் புத்திரருண்டாவதுவும்
நல்லோர்க்கும்பொல்லாத லண்டப்பெண்டாவதுவும்
பொல்லார்க்குநல்லகுணப் பெண்மனைவியாவதுவும்
ஓரொன்பதொன்பதிது வூழ்விதிப்பயனும்
வீரர்க்குமேலவர்க்கு மின்பதுன்பஞ்சமமாகும்
ஆகாச்செயலுக்கு மயலார்பொருள்தனக்கும்
வாகாகவாசைமிக வைத்தால்வருவதில்லை
வாழ்வதுவுந்தாழ்வதுவு மன்றுவரும்நின்றுவரும்
ஊழ்வினையின்வாறன்றி யுத்திபுத்தியாலாமோ
ஏலவேவந்துபோ மின்பதுன்பமதுபோல்
ஞாலமிசைப்பின்னு மிவையிரண்டுமனுபவிப்பார்
காலத்திரளிலொரு கன்றுனதைவிடுத்தால்
பாலித்தேயீன்ற பசுவறிந்துசேருதல்போல்
ஓடியொளித்தாலுமங் குற்றபழவினைதான்
தேடிப்பிடிக்குமென்று செப்பினார்முன்னோர்கள்
எக்காலஞ்சென்றாலு மிறவாதபேரில்லை
மிக்கவதிசயத்தை வெல்பவர்களாருமில்லை

[சுகபோசனம்]

தாளாண்மையென்னுந் தகைமைதனைச்சீர்தூக்கில்
வேளாண்மைக்கேயதிக மில்லையென்றுசொல்லினரே
வேந்தர்தமையடுத்தோர் வேளாண்மைசெய்பவர்கள்
சார்ந்தவனமலைகள் தன்னருகில்சஞ்சரிப்போர்
மருவாருஞ்சந்தன மரம்வனத்திற்சமுத்திரத்தின்
அருகேயிருப்பவர்க ளாவின்பாலுள்ளவர்கள்
சகடுடையாக்கீரை தன்னைப்பயிரிடுவோர்
மிகவுமிந்தவெண்மருக்கு மேலானபஞ்சமில்லை

[நற்சகோதரர் துற்சகோதரர்]

தம்பியர்மேலன்புடையோன் தர்மரகுராமர்
தம்பியர்மேல்சத்ராதி தசக்கிரீவன்வாலியுமாம்
நற்றுணையாந்தம்பியர்கள் லட்சுமணன்பரதன்
உற்றதொருதர்ம ருடன்பிறந்தார்நால்வர்களாம்
சுக்கிரீபனுனவனுஞ் சுயோதனன்விபீஷணனும்
தக்கபுகழ்பூவுலகில் தமைபனுக்குச்சத்ராதி
பண்பாவுடன்பிறப்பிற் பகையுறவிதாகுமென்று
முன்பாகநீதிநூல் முறையினுரைத்தனரே

[அரசரில் புகழ் பெற்றோர்]

மனுவிட்சுவாகுவுடன் வாகானஅம்பரீஷன்
கனதைபெறுமாந்தாதா கார்த்திகார்ச்சுனன்பரதன்
விருத்தச்சிபியுடனே விருந்துசசிவந்தவுடன்
மருத்தப்பகீரதனும் வாணன்முசுகுந்தனுடன்
தீராப்புகழ்யயாதி தேவேந்திரனுடனே
பாசிற்றசாதனும் பாண்டவர்களைவர்களும்
சத்தியவரிச்சந்திர னுடதாதைதிரிச்சங்கு
உற்றநளன்விதுர னேகோபுரூரவனும்
அந்நாளிலேபிரகலாதனுடன்மாபெலியு
மன்னுஞ்சடாயுகுகன் வாகாம்விபீஷணனும்
ஆறைந்துபேரு மதிகபூசாபலராய்
பாரிற்புகழ்நிறுத்திப் பரமபதமுற்றவராம்
ஏற்கைபெருந்திருளி வெழில்விஸ்வாமித்திரமுனி
மார்க்கமுடன்மாணிக்க வாசகருமாபெலியு [பன்
வின்னமில்லாவள்ளுவரும் வேடனென்னுங்கண்ணப்
தன்னுலெழுவர்களும் தானவராய்ப்பேறுபெற்றார்
தீயினாற்சுட்டபுண் தீருஞ்சிலமருந்தில்
வாயினாற்சுட்ட வடுவொன்றுமாறாதே
ஏற்கையுடன்புகழோ டெய்தாதசென்மமவன்
தீர்க்கமுடனேமறு ஜென்மமெடுக்காமைநன்றாம்
மண்ணிற்பிறப்பதெல்லா மாறிவதுவேகாட்டு
தண்ணமுள்ளவாய்ச்சொல்லாற் சாதியறிந்திடலாம்
சிறியோரிணக்கம்விட்டுத் தீங்கொன்றுஞ்செய்யாதே
பெரியோர்தமையடுத்தாற் பேதமொன்றும்வாராதே

துய்யகிருகம் நித்திய சோபனத்தினுல்விளங்கும்
வையகத்துராசாக்கள் மனு நீதியார்கெலிப்பார்
நாரியர்கள்சற்குணத்தி னுலேவிளங்குவார்கள்
கூறும்விதரணனுங் கொடையால்விளங்குவனும்
பாரிலெந்நாளும் பகல்விளங்குமாவிரவில்
காரிருளையும்விளக்குங் காந்தியுமாமதியாம்
பதிவிளங்கும்பொன்னுலே பார்விளங்குமேகமதால்
சதுராம்பகைவிளங்குந் தங்கள்புயவலியால்
குடியேவிளங்குவது கொற்றவர்களால் நீதி
நெடியதலம்விளங்கும் நெஞ்சிலுற்றநல்லறிவால்
புகழாற்கொடைவிளங்கும் போசனத்தா லுயிர்வழங்கும்
புகழறியநன்னூலாற் புத்திமிகவேவிளங்கும் [ண்ணு
சொந்தமென்று துற்சனரைத் தோழமைகள்செய்யவொ
சந்தேகமுற்றதொரு தையலரைச்சேரவொண்ணு
சார்பில்லார்க்கில்லை நிலை தயவிலார்க்கறமுமில்லை
ஊரில்லார்க்கரசுமில்லை ஊணில்லார்க்குறுதியில்லை
மாடில்லாதார்க்கிந்த வையகத்தில்வாழ்வுமில்லை
கூடுமுதலில்லார்க்குக் கொள்ளல்விற்றல்லாபமில்லை
துற்சனர்க்குநேசமில்லை சுகமில்லார்க்காசையில்லை
இச்சகத்தினன்மைதனுக் கெப்போதழிவுமில்லை
மனதின்குறிப்பை வதனத்தாலறிந்திடலாம்
அனைவோர்குணநடத்தை யதனுலறிந்திடலாம்
சமர்முகத்தின்சூரன்வலு தன்னையறிந்திடலாம்
தமர்சேரும்வல்பிணியைத் தாதாலறிந்திடலாம்
கல்விப்பிரசங்கத்திற் காணலாங்கவிஞர்திறம்
சொல்வண்மையாற்சாதி தோற்றமறிந்திடலாம்
மானிலத்தில்பூண்டுகளை மறையாலறிந்திடலாம்
தானுநல்லார்பொல்லாரைச் சந்ததியாற்கண்டிடலாம்
கண்ணிரண்டாம்யாவருக்குங் கற்ருேர்க்குமூன்றுகண்
எண்ணுந்தியாகிகளுக் கேளுகண்ணுகுமல்லோ [ணும்
மனங்குவிந்துஞான மகிமையறிந்தவர்க்கு
அனேகங்கண்ணுகுமென் றருளினுர்முன்னேர்கள்
தர்மவான்றன்னிடத்திற் றங்காதுபாவமுந்தான்
கர்மிதுன்மார்க்கரிடங் கனத்ததர்மம்நில்லாது
நெருப்புக்குமுன்னிருளு நில்லாதுதான்மிகுந்த

கறுத்தவிருள்மணியுங் கதிரோன்முன்னில்லாது
சத்தியத்தையெந்நாளு மசத்தியமும்வெல்லாது
கெட்டதுகோபம் பொறுமைதனைவெல்லாது
புண்ணியத்தைபாவமொரு போதுமேவெல்லாது
மண்ணில்விஷங்கெருட மந்திரமுநில்லாது
சந்தனங்கஸ்தூரி தாம்பூலமாடைமுதல்
விந்தைசேராபரண மிவற்றையெவர்ந்தாலும்
ஏற்போரொருகையா லேற்றுரேயாமாகில்
கூர்ப்பாய்கொடுப்பவர்க்குக் கிறையாதவாயுளுண்டாம்
செகமுழுமையுந்தானே தேவாதீனமாகும்
பகவான்தெய்வமது மந்திராதீனமாகும்
மந்திரமாமதுவே மாமறையோராதீனம்
சந்ததஞ்சேர்மறையோர் சகலருக்குந்தெய்வமென்பார்
பாலன்னமானாலும் பண்பில்லாக்கூழெனினும்
மேற்சுத்தமாய்க்கால மிகவறிந்துண்ணனன்று
நல்லோருக்குற்றதுயர் நன்மைசற்றுமில்லாத
பொல்லாதான்வாழ்வுமொரு போதுநிற்கமாட்டாதே
பாம்புசுடுநெருப்பிற் பழகிப்பிழைப்போர்கள்
மேன்பாடுக்கொப்பாகு மென்றார்மநுநூலோர்
ஊமைக்குத்தோன்ற உபாயங்கள்சொல்லுவதும்
காதுக்குஞானக் கதையையடுத்துச்சாற்றுவதும்
துட்டனுக்கெத்தனையேசொல்லி நன்மைசெய்ததுவும்
முட்டாளுக்குற்றநிச முள்ளதைச்சொல்லுவதும்
இன்பக்கவிகடனை ஈயார்மேல்பாடுவதும்
அன்பில்லாசோரஸ்திரீ யாசையால்மெலிவதும்
நலத்தைக்கொடுப்பதில்லை நன்றாகதிவ்வாறும்
மலைக்கல்லிலேயெறிந்த மண்பாண்டமாகுமல்லோ
ஐந்தானபாவத்தி லாறுலிரண்டுநலம்
ஐந்திலேமூன்றை யவ்வைசொன்னாளாகாதாம்
தெய்வத்தாலாகா தெனினுமுயற்சியிலே
மெய்வருந்தக்கூலிதரு மென்றனரேமுன்னூலோர்
இத்தனைநாள் நம்வீட்டிலே ஏற்றும்விளக்கென்றணுகி
முத்தமிட்டாற்கன்ன முடையெழும்பச்சுட்டுவிடும்
உற்றகுலதெய்வம் நமக்கொன்றுஞ்செய்யாதென்றுபோ
சத்தியும்பண்ணினாற் றுன்விடவுமாட்டாது [ய்

தூங்குவதுபோலுந் தூங்கிவிழிக்கின்ற
பாங்கதுவுமாமிந்தப் பாரிற்பிறப்பிறப்பு
கூட்டினுள்ளேயிருந்து குருவிபறப்பதுபோல்
தேட்டமுடம்பினிலே சீவனிருந்தேதுசெயல்

[கொல்லாமை]

கொலையென்றுநெஞ்சங் குறியாதான்வாளுள்மேல்
மலையாயுயிருண்ணு மறலிவரமாட்டானே
நல்லோர்பெரியோர்க்கு நாயகமேயாவரெனில்
கொல்லாமையென்பதனைக் குறித்தறிந்தவுத்தமராம்
தாளுதிபதிதூதன் தந்தைதாய்சற்குருவு
மர்ளுர்மனையாட்டி மறையோர்புராணிகரை
சுத்தமுள்ளவீரர் துலங்குகவிவாணர்
உற்றதபோதனர்களுயர்குலத்தோர்பாலர்கள்
சாலவிகடப்ர சங்கிபிணியாளர்
ஞாலமிசைவறுமை யாளர்பதினெண்மரையும்
எப்பிழைகள்செய்தாலு மிராசாமுதலானவர்கள்
சர்ப்பனையுந்தண்டனையுந் தான்செய்யலாகாதே

[கொடுமை நரகடைவோர்]

நீதியுள்ளராசர்களை நீதிவழக்குரைப்போரை
ஆதிகுருவானவரை யவருடையசீஷரையும்
சோதிடஞ்சொல்வேதியரைத் துன்பங்கள்தீர்த்தவரை
ஓதரியபண்டிதரிவ் வோரெழுவர்தங்களையும்
தீதானவஞ்சங்கள் செய்தாரேயாமாகில்
தீதாய்க்கொடுநரகில் சேர்வார்கள்திண்ணமதே
அன்னமளித்தவருக் கவகேடுசெய்தவர்கள்
மன்னர்தமையடக்கி வைத்தவமைச்சர்களும்
நன்றிமறந்தவரும் ராசாக்களைச்சமரில்
ஒண்டியாய்விட்டே யொளித்தோடிப்போனவரும்
மாதாபிதாகுருவை வசையாய்நிந்தித்தவரும்
வேதாந்தமாதவத்தோர் மெய்நோகவைத்தவரும்
தெய்வமிகழ்ந்தவரும் சின்னமுதலாக
பொய்சொல்வோரனியாய பொருட்காசைப்பட்டவரும்
பாரில்விசுவாசப் பாதகமேசெய்தவரும்

நேருண்டவீட்டுக்கு ரண்டகங்கள்செய்பவரும்
பன்னிருவர்தானும் பரிதிமதியுள்ளளவும்
நன்னயமில்லாத நரகிற்குடியிருப்பார்
சோதிடஞ்சொல்வோருந் தொடுவழக்குத்தீர்ப்போரும்
பேதமில்லாப்பண்டிதரும் பிராயச்சித்தம்விதிப்போர்
நீதியுரையாம லிரண்டகமாய்ச்சொல்வாரேல்
ஆதீனமும்பாழாம் பாழ்நரகமெய்திடுவார்
பார்க்குமலைகடலின் பாரமதுபாரமல்ல
பாருக்குவிசுவாசப் பாதகனுமென்பவனும்
கற்றதுரோகியுடன் காணுமிவரிருவர்
உற்றசுமையேயென் றுலகமாதஞ்சுவளாம்
அக்கினியிலேயழிந்தோ ராறுபோமிவர்க்கு
மிக்கதொருகொடிய வியாதிவரும்பின்னரகம் [தோர்
தண்ணீரிலம்மணமாய்த் தான்போவோரதிற்புணர்ந்
உண்ணீரிலேயுமிழ்ந்தோ ருறுமலமும்நீர்விடுத்தோர்
அசுத்தமுடனேதா ஞலயத்திற்செல்வோர்கள்
நிசமாகச்சந்நிதியி னோராய்க்குடியிருப்போர்
போற்றுகின்றதேவதையின் பூசைக்கெனக்கொணர்ந்து
சாற்றுதபுட்பந் தனையெடுத்துச்சூடினவர்
தீராப்பிணியடைந்து செகத்திலிம்மூவர்களும்
மாறுவறுமையுமாய் வன்னரகஞ்சேர்வார்கள்
மேற்குலத்துக்கீழ்குலத்து மின்னுருடன்பிறந்தோர்
ஆகுலமுண்டாகி யழிவார்குலவிர்த்தியற்று
கண்காதுக்கெய்தாக கடுஞ்சொல்லைச்சொன்னவர்கள்
மண்மேல்குலத்தோடு வன்னரகஞ்சேர்வார்கள்
கெடுமதியாலடுத்தவர்க்குக் கேடுநினைத்தவர்கள்
குடும்பமேநாசமாய்க் கொடுநரகஞ்சேர்வார்கள்
மன்னர்நிருப மதுதனையேதள்ளிவிட்டோர்
அன்னைதந்தைசுற்றத் தவர்கள்தனையடிப்போர்
எளியர்தனையடைந்தோர் இன்னல்புரியும்வஞ்சகர்கள்
பழியாளர்கோளர் பழிபுனையரெண்மரையும்
மண்டலத்தில்மூன்றுபிழை மட்டும்பொறுத்தப்பாடல்
தெண்டனைகள்செய்வனவே தேசமன்னர்நீதியதாம்
உரியவிவகாரம்வந்தா லுற்றூர்பகைஞரென்னும்
பாராமல்நீதியாய்ப் பாங்காய்விசாரித்து

கூராய்ச்சமன்செய்த கோல்போலிருதலையும்
நிறையா நிறைத்தவர்க்கு நீடூழிகாலம்வரை
குறையாமல்வாழ்வுமவர் குலமுமிகவிர்த்தியுண்டாம்

[துஷ்டசங்கிரகம்]

சாதிமுறைதவறுஞ் சண்டாளர்கற்புடைய
மாதைவிரும்பும்விசு வாசமில்லாபாதகர்கள்
கோள்கள்மிகுந்தவர்கள் கொலைஞரொடுமூர்க்கர்
நாளும்பகையாளர் நாயனத்துரோகிகளை
ஏழைதமையடுத்தோ ரிகல்வினையுஞ்சண்டைகளை
சூழும்பிணிகளொடு துஷ்டமிருகந்தீய
கொண்டமைதீராத கோபப்பதினாறு
மண்றடங்குவதல்லா லதிகரித்தால்வெல்லரிதே
துற்சனரும்பொன்னுந் துரகதமுந்தோற்கருவி
மிச்சமுறுநரம்பின் வெங்கலமாமுக்கருவி
மானமில்லாமுளிக்கு மானூரவர்களையும்
ஈனமில்லாக்கருப்பு எள்ளுடனேயீரைந்தும் [றை
தெண்டித்தார்க்கெல்லாஞ் செயங்கொடுக்குமென்றிவற்
பண்டுவட நூலில் பகர்ந்தாரேமுன்னோர்கள்
தந்தைதாயானாலும் தன்குலமெல்லாம்விளங்கும்
மைந்தனேயானாலும் மனையாட்டியானாலும்
மந்திரியேயானாலும் மரபுள்ளோரானாலும்
பந்தமுடனமக்கு பகையாளியென்றறிந்தார்
அன்றேயகற்றிடினு மாக்கினைகள்செய்திடினும்
கொன்றாலும்பாவங் கொலையுமில்லையென்றனவே
கோழைமிஞ்சும்வஞ்சகரை சொற்கேளாமைந்தர்களை
மீளாச்சமர்முகத்தில் விட்டோடுஞ்சேவகரை
மன்னர்க்குவஞ்சகஞ்செய் மந்திரியோடிவ்வறுவர்
தன்னைகொடுந்தண்டனையுஞ் சதியுமிகச்செய்திடலாம்

[நல்லறிவு]

பூமிக்கரசர்தெய்வம் புருஷனேபெண்கள்தெய்வம்
காமிக்குமாதர்தெய்வங் காசுபணமேலோபிதெய்வம்
தரித்திரனுக்குத் தனங்கொடுப்போர்தெய்வமிந்த
தாரணியில்துஷ்டருக்குச் சவுக்கடியேதெய்வம்

நீதியுடையோனுக்கு நேயரேதெய்வமதாம்
ஆதிபராபரமே யனைவோர்க்குந்தெய்வமதாய்
அன்னைதந்தைசுற்றத்தை யடர்ந்துமுனியவொண்ணு
பின்னொன்றுமின்னொன்று பேசித்திரியவொண்ணு
வஞ்சகரை நம்பவொண்ணு வாக்கிரண்டுபேசவொண்ணு
தஞ்சிப்பொறுமையிலாச் சண்டையிற்போகவொண்ணு
வேணவித்தைக்கற்றாலு மேதினியிலேவிளங்க
ஆணவமாய்க்கொஞ்ச வாடம்பரம்வேணும்
நீந்திநதிகண்மிக நீந்தியறிந்தாலும்
ஓடந்தனையகற்றி யுதகத்திற்செல்லவொண்ணு
ஞானமறிந்தாலும் நாடொப்பனைகளிது
வானமதுபோலே நடந்து மகிமைபெறவேணும்
செம்பொற்குபேரனெனினுஞ் சீவனத்திலேமுயற்சி
பண்புடனே நாளும் பண்ணியிருக்கவேணும்
வாசமுடனேவெகுவாய் வல்லமையுண்டாயினும்
ராசாக்கள்சேர்வை நலம்பெறவேணுமல்லோ
உரித்தானபுத்திமதி யூகியேயானாலும்
பெரியோர்கள்சொற்கேட்டுப் பின்சென்றிருக்கநன்று
பெற்றபிள்ளைதான்மூடப் பிள்ளையேயானாலும்
சற்றாகிலுங்கல்வி தான்வரவுசெய்யநன்றாம்
மெலிவாகியேயதிர்ஷ்ட மில்லாதிருந்தாலும்
சலியாமலேமுயற்சி தன்னைவிடவொண்ணாதே
தீராதரோகமதால் தேகமெலிவுற்றாலும்
வீராயவித்தையை விட்டுவிடலாகாதே [ல்
தனியேபொருள்தேடித் தனித்துண்ணும்பாற்சோற்றி
அனைவோர்கிளையோடே யன்றுண்டகூழதிகம்
ஏதோர்மருங்கு மில்லாரிடத்திலே
பேதைகளாய்சேவித்துபெரும்பொருள்கள்வாங்குவதில்
மானமரியாதையுடன் வையகத்தில்நல்லோராய்த்
தானுள்ளபேர்கொடுக்குந் தாம்பூலமேயதிகம்
வீணிற்பலவித்தை மெத்தவிரும்புதவி
லாணியாம்வித்தைகளறக்கற்றாலொன்றுநலம்
சின்னமுயல்மான்கள் சிற்சிலதைவெல்லுவதில்
உண்ணும்புலிக்குட்டியொன்றைவென்றால்கீர்த்தியுண்
அவிவேகியுடன்வெகுவா யானவுறவாகிலும் [டாம்

விவேகிபகையிருந்தால் மெத்தவது நன்ருகும்
தன்னுயிர்க்குவந்தலயந் தப்புவிக்கவேண்டுதற்கும்
பின்னும்பிறருரைப் பேணிடவேண்டுதற்கும்
மையல்கொண்டமாதருக்கும் வையத்திலஞ்சாமல்
பொய்யுரைத்தால்பாவம்ஒரு போதுமில்லைஎன்றனரே
பின்ஞல்வெகுபொருளைப் பேராயளிப்பதிலும்
மூன்ஞல்தருணத்தில் வீய்ந்தவரைக்காசுநன்ரும்
நாளைஎன்றும்பின்னைஎன்றும் நாட்கெடுவுகூறுவதில்
வேளையிதுவல்ல போவென்ருல்மிடுவுநன்று
தெளிவானகல்விகற்ருல் தேசம்வசியமதாம்
பழியாமரியாதை பாவலர்கள்தன்வசியம்
சித்தமதில்பத்தியே தெய்வவசியமதாம்
உற்றபெருஞ்செல்வ முறவோர்தன்வசியம்
வேண்டுபொருள்கொடுப்போர் வேசையர்தெய்வமதாம்
மாண்டுகத்திகாத்திருந்தா லரசர்வசியமுண்டாம்
சாந்தமொழுக்கஞ் சகலஜனவசியம்
வாழ்ந்தகமும்நல்ல மனையாளுக்கேவசியம்
கூடியேவாழ்ந்தாலும் குழந்தைமிகப்பெற்ருலும்
தேடிப்பிதிர்களுக்குந் தெய்வத்துக்கிட்டாலும்
தானதர்மஞ்செய்தாலுந் தாழ்ந்தவர்க்குச்சொன்னுலும்
மானமுளநல்லோர்க்கு வணங்கிநடந்தாலும்
செய்தபிழைபொறுத்துத் தேசமதில்வாழ்பவர்க்கு
ஐயமில்லைவாழ்வதிக மப்பாலுங்கெற்பமதாம்
துய்யவயித்தியங்கள் சோதிடங்கள்தங்களிட
மருங்காயெவையுமங்கே வைத்துவணங்கநன்ரும்
வெறுங்கையாற்போனுல் விழலாங்கருமமெல்லாம்
பாரிலொருதாயார் பலபிள்ளைபெற்ருலும்
சீருபழகுந் திறங்குணமும்வெவ்வேரும்
பயிரிடுவோர்தங்களுக்குப் பாரில்வறுமையில்லை
தயிரியமுள்ளவர்க்குத் தானேர்பயமுமில்லை
உற்றசெபஞ்செய்வோர்க் கொருநாளும்பயமுமில்லை
நித்திரையில்லாதார்க்கு நேரும்பயமுமில்லை
தன்னவனுயிருந்து தப்பிதங்கள்செய்தாக்கால்
அன்னியனுமென்றெண்ணி யன்றேயகற்றநலம்
அன்னியனுனு மன்புள்ளோனுனக்கால்

தன்னவனுமென்றவனைத் தாபரித்துக்கொள்ளாமல்
நல்லோர்க்குமுன்னுளோர் நன்மைசெய்தாலதற்கு
பொல்லாவொருநூறு பிழையும்பொறுப்பார்கள்
அற்பர்க்கெழுநூ றதிகநன்மைசெய்தாலும்
சொற்பவொருபிழைதான் செய்தால்பொறுக்காராம்
செய்ததவத்தளவே செல்வமதுவுண்டாகும்
எய்துங்குலத்தளவே யிருக்குமவர்கள்குணம்
கற்றோர்நலஞ்சிறந்த கன்னியர்களன்புடையோர்
நற்றவங்களுற்றவர்க்கும் ராசாக்களானவர்க்கும்
சாதிவாம்பெண்ண தனுசரிக்கவேண்டுமதே
நீதிமுறையென்றுமநு நீதிநூலோதிடுமாம்
இன்பக்கவிமூட ரிடத்திற்படித்தாக்கால்
பண்பில்லைசற்று மதற்கும்பழுதுசொல்வார்
கற்றோருமைதனைக் கற்றோரறிவதல்லால்
சுத்தமலடிபிர சூதியறிவாளோ
பஞ்சரித்துவேண பரிசுபெறுவதிலு
மின்சொல்லாற்பிச்சை யெடுத்துண்ணநன்றாகும்
வீம்பானசத்ராதி மெய்யென்றிருப்பதிலும்
பாய்போடுறவுமிகப் பண்ணுவதேநன்றெனலாம்
கண்ணென்றுரைப்பாிரு கண்ணதுவுங்கண்ணுமல்ல
எண்ணப்படுதவனை எழுத்தென்பதுவேகண்
கைப்பொருளேமெய்ப்பொருளாங் காவலரை நில்லாது
மெய்ப்பொருளாந்தான்கற்ற வித்தை நீங்காப்பொருளாம்
வாழ்வுமிக்வந்திடினும் வம்மிசத்தின்மார்க்கம்போல்
தாழ்ந்துநடப்பவர்க்குத் தாழ்வுசற்றும்வாராதே
யானைதனதென் றடாதுசெய்யப்போகாது
தீனைதைமிகுந்து தின்றுலுங்கேடெய்தும்
இராசருரியரென்று நடத்தைபொறுமைசெய்தால்
ஆசாரமேன்மையும்போ யவதியும்வந்தெய்திடுமே
இல்லாரையுள்ளவர்க ளேசியிழுக்குரைத்தால்
நல்லநல்லநஷ்டநயம் ராட்டினம்போற்சுற்றிவரும்
தேசமதிலேலழைபர தேசிமறைவேதியரை
ராசர்க்காவாவிட்டால் நன்றல்லோபாவமுமாம்
சாகாவரம்பெற் றவர்க்குப்பயமில்லை
வாகாகப்பேசாத மௌனிக்குச்சண்டையில்லை

வித்தைகற்றால்தந்தையால் மேதினியெல்லாம்புகழும்
கற்றதொருவித்தையது கற்பகத்துக்கொப்பாகும்
மெத்தவழகுடையோர் மேற்குலமேயானாலும்
வித்தையொன்றில்லாவிட்டால் விரையில்லாப்பூவாகு
திருந்துமயிர் நகமுந் தேசமன்னர்பலநான்கும் [ம்
இருந்தவிடம்பிரிந்தா லிவைகளுக்குமேன்மையில்லை
மின்னாரில்தாசி வேசியர் நாய்கோழியுடன்
மேன்மைசேர்பண்டிதர்கள் யாருமொத்துவாழார்கள்
ஓங்குபொருட்சேத முயிர்ச்சேதம்வந்தணுகில்
சாங்கமுடன்சிரித்தாற் றயிரியம்வந்திடுமாம்
தர்மசிந்தையுள்ளோர்க்குந் தயாளபுருடனுக்கும்
எம்மாத்திரம்பொருளு மில்லாளுமோர் துரும்பு
வீரமிகுசூரனுக்கு மேலவர்சேனைத்துரும்பு
பாரிற்றுறவிகட்குப் பார்த்திபனுமோர்துரும்பு
பெரியோருக்கற்பர்பகை பிரயோசனம்துரும்பு
அரியகலைவாணியரு ளடைந்தோர்க்குக்கவி துரும்பு
நூற்றிலொருசேவகனும் நூற்றுப்பத்தாயிரத்தில்
பார்த்தாலொருவன் பாவாணனென்பவனும் [வன்
பாங்கானவார்த்தைசொல்வோன் பதினாயிரத்திலொரு
நீங்காதகொடையாளி இலட்சத்திலேயொருவன்
சினமென்பதொரு சிக்கமதையறுத்தால்
மனமென்பதுற்ற வாறேமுடித்திடலாம்
அரிதானமாதவங்க ளனேகமாய்ச்செய்தாலும்
பொறுமையென்பதில்லாதேல் போமேவிழலாக
எத்தர்மமானாலு மெண்ணித்துணிதனன்று
மிக்கத்துணிந்தபின்னர் மேலெண்ணினாலிழுக்காம்
பட்சிக்கரசுபலம் பாலருக்கழுகைபலம்
மச்சத்துக்கோர்பலமாம் மன்னர்க்குத்தேர்பலமாம்
வாகனங்கள்தானுடையான் வழிநடைதனக்கஞ்சான்
வாகுடனேபாலுடையான் வந்தவிருந்துக்கஞ்சான்
வஸ்திரமுள்ளான்சபையில் வரப்போகவஞ்சானும்
உற்றபணக்காரனென்றுக்குமஞ்சானும்
மானிற்கவரி மயிர்தடுத்தாலேகாது
மானபரனவ்வாறாய் வசையணுவுங்கேளானும்
மேஷத்துந்தனக்கு மிரண்டுசெவியுமறுத்து

பாசிபடத்தேகம் மயிர்முழுதையுங்களைந்து
சூடுசூட்டியும்பின்னை தொடர்ந்துவரும்வாறதுபோல்
கேடுகெட்டமாண்பர் கீர்த்திகளுக்கஞ்சாரே
மச்சுவீடால்நிழல் மானுர்தனக்கோடு
நிச்சயமாய்க்கிணற்று நீருமிவைநான்கும்
கட்டாகச்சீதளக் காலத்திலுஷ்ணமதாய்
திட்டமுடனுஷ்ணத்திற் சீதளமுமாகுமல்லோ
சாதித்தொழில்செய்வார் தனக்குக்கெடுதியில்லை
மாதவமாய்க்கால மறிந்துசெபஞ்செய்பவர்க்கு
ஏதேதுபாவங்க ளில்லையொருநாளுமென்று
நீதிமநுநூலில் நிகழ்த்தினுர்முன்னோர்கள்
பொன்னைத்தரிசித்தாற் போகமதுசப்பவிக்கும்
வன்னமலரைச்சேர்ந்தால் வாசமதுசம்பவிக்கும்
பெரியோரைச்சார்ந்தவர்க்கு பெருமைமிகவுண்டாகும்
சிறிதானதுற்சனரைச் சேர்ந்தவர்க்குக்கேடுவரும்
விண்ணதிலேயிருந்து வீழும்மழைத்துளிதான்
மண்ணிற்சுடுமிருப்பில் வந்துவிழுமுன்சுவறும்
தாமரையிற் வீழ்ந்தாற் றழாதுயாரது
சேமத்திரைகடலின் சிப்பிலேவீழ்ந்தாக்கால்
விலைமதிக்கவொண்ணுத வெண்முத்தையீனும்
தரைமீதிலிவ்வாறு சற்பாத்திரமறிந்து
கொடுப்பதேதர்மமிந்தக் கூறறிந்துசெய்யாவிட்டால்
விருப்பாய்க்கொடுப்பதெல்லாம் வீணுகுமென்றனரே
காரிருளில்மரத்தடியிற் கண்டபழுதைதனை
சீருமுயர்பாம்பென்று செப்புவார்தப்பாமல்
உத்தமர்கள்தாசிவீட் டோரமாய்ப்போனாலும்
சத்தியமாயுத்தமரைச் சமுசயமாய்ச்சொல்வார்கள்
வீணுகப்போகா விடந்தனிலேபோகவொண்ணு
தோணுமற்போனுக்காற் றுன்பம்வரும்பின்னிழுக்காம்
தேசிவந்தாற்பசுவைத் தேடாரதிமோக
தாசிவந்தாற்றனது தாரமதைத்தேடார்கள்
ஆசையாலெப்பொருளும் அபகரிக்கவேண்டுவர்க்கு
ரோஷமில்லைகேடுகெட்ட உலுத்தரிலுலுத்தர்களாம்
அன்னைபிதாமூத்தோ னுசானரசனுடன்
பின்னைப்பெரியோர்கள் பிராணசினேகிதர்கள்

ஆகயெழுவர்களு மழையாதிருந்தாலும்
போகலாமேவலியப் பிழையொன்றுமீனமில்லை
மலைகானஞ்செல்லநன் றல்லாதுதான்தரித்த
கலைகிழித்துக்காவியிட்டுக் கௌபீனங்கட்டநன்று
ஓடெடுத்துவாங்கியே யுண்ணலன்றியாவர்களும்
நாடாவனத்திற்போய் நாடுவதுநன்ருகும்
ஈயாதலோபியிட மேற்கும்புலவருக்கு
ஞாயமிதுவென்று நவின்ருரேமுந்நூலோர்
வெள்ளாட்டியானவளை விரகத்திலணைந்தால்
உள்ளகுலமும்போ பொழுக்கமெல்லாங்கேட்டுவிடும்
வேசையரைசேர்ந்தாக்கால் வெட்கமில்லைபெண்சேதம்
ஆசையாலேவிதவை யானவளைச்சேர்ந்தாக்கால்
ஆயுசுமேதான்குறையு மகல்வாளிலட்சுமியும்
தூயபிறர்தாரத்தைச் சோரத்திற்சேர்ந்தாக்கால்
வன்னரகஞ்சேர்வரிசை யாகாதுநாலுமென்று
முன்னோர்வடநூலில் முறையாயுரைத்தனரே
செல்லுமிடமானாலுஞ் செல்லாவிடத்தினிலும்
பொல்லாதகோபமொரு போதும்வைக்கலாகாதே
இன்னவகையின்னை வெய்துமெய்தாதெனவே
தன்னிலறிந்துசெய்யா தாராஇனஷ்டம்வரும்
கள்ளுண்டாலுற்ற காரணமெல்லாம்வெளியாம்
கொள்ளைவிரும்பிற் கொலைகள்வந்துநேரிடுமே
சூதாடியிம்மையிலே துன்பம்வருமல்லாது
சேதாரமாகுந் திரவியங்களுள்ளதெல்லாம்
ஆகாயவீதிக்கு ஆதித்தன்ரத்தினமாம்
வாகானகல்விகற்ருேன் மகாசபைக்குரத்தினமாம்
சயனம்தனக்குரத்னஞ் சார்ந்தவழகுள்ளபெண்கள்
நயமானவீடதற்கு ரத்தினஞ்சற்புத்திரராம்
ஏமனைவென்றுசய மேற்பவரானாலும்
மேன்மைசெறிபெரியோர் வெம்பகையொன்ருகாது
ஆருக்குந்திருமா தனுக்கிரகமுள்ளளவும்
பாருக்குளெந்தப் பகையும்நெருங்காது
கூடாதகாலங் குறுகிவருங்காலம்
வீடானதிலிருந்தும் வினைவிளையுந்தன்னாலே
தரித்திரர்பசி தாங்குவதேமிக்ககொடை

ஏற்றபணக்காரர்க் கீவதுவேவட்டியுமாம்
எளியோருடனெதிர்த்தே எண்ணுமல்வைவதிலும்
விழிகாணுதோடென்று விரட்டுவதேநன்ருகும்
அன்பில்லாதாரிடத்தி லதிகவரவதிலும்
பின்புமவருடைய பெருத்தபகைநலமாம்
வேண்டாப்பெண்டீரை வீணுவைத்தேசுவதில்
வேண்டாம்நீயென்று விரட்டிவிட லுத்தமமாம்
சாலவேவாழ்வுடையோர் சாவதற்கஞ்சுவராம்
சாலவறுமையுற்ருேர் சாவதற்கஞ்சாராம்
பாரிலேயீகையுள்ளோன் பாக்கியமெவ்வாறெனில்
பூருவபட்சப் பிறைபோல்வளர்ந்திடுமாம்
ஈயாதான்செல்வமது எத்தனையுண்டாயினுஞ்
சாயுமமரபக்ஷ சந்திரன்போற்றேய்ந்திடுமாம்
என்னவறுமையுறினு மேற்பதொன்றில்லாவிட்டால்
அன்னவனேபாக்கியவா னுகுமென்றுசொல்லிடலாம்
பாரித்தசெல்வர்கள்தான் பலர்க்குதவியில்லாவிட்டால்
தாரித்திரரென்று தப்பாமற்சொல்லிடலாம்
கையானதுநமது கண்ணிலேகுத்திவிட்டால்
கையைத்தரிக்கின்ற காரணமுண்டாவதுபோல்
இளையோர்தமையடைந்தோ ரேதுகுற்றஞ்செய்தாலும்
பிழைபொறுக்கவேண்டுவதே பெரியோர்முறைமையதா [ம்
அழகிளமைமூப்பு மயிஸ்வரியமிந்நான்கும்
வளமுடனேநம்முடைய மரணவரைநில்லாது
நன்னயஞ்சேர்பாலுடனே நல்லதண்ணீருங்கலந்து
அன்னத்தின்முன்னவைத்தா லாவின்பால்மட்டுமுண் [ணும்
தண்ணீரைத்தள்ளுந் தகைமைபோலேயுலகம்
விண்ணனமாயுரைத்தா ரிந்நூலைப்பாராமல்
எண்ணியேநுண்ணியநூ லென்பதனைக்கற்ருக்கால்
மண்ணில்சுகமும்வரும் மறுமையிலேசொர்க்கமுறும்
இட்டமுறுமோகஸ்திரீ யேதிகழ்ச்சிசெய்தாலும்
திட்டியடித்தாலுஞ் சினம்வரமாட்டாது
இன்பம்பொருளுமிக வெய்துவதானுலுமதில் [ண்ணு
துன்பம்வருமென்றறிந்தால் சொற்பனத்திலுக்கவொ
பயனில்லா வார்த்தைசொல்லிப் பலநாளுங்கோளுரைத் [தால்
தயவாயுவர்செய்யுந் தர்மம்பலியாது

ஊரார்பகைதுன்ப மோயாமகாவறுமை
மாறுமெனமுன்னாள் வள்ளுவனார்சொன்னாரே
வாழ்வுள்ளோராலு மாஞானியாலும்
தாழ்வுள்ளோராலுந் தைரியவானாலும்
நாடொப்பனநெகிழ வாகாதொருநாளும்
மூடத்தனமாக முன்பின்னாய்செய்பவரும்
அருபியுமான அலகையோடொக்குமென்றும்
பிறகவரைச்செத்த பிணத்தோடேசேர்க்கவென்றார்
பொருளில்லாதார்க்கிந்தப் பூமியிலேகீர்த்தியில்லை
அருளில்லாதார்க்கு அவ்வுலகத்தேதுமில்லை
ஊன்தின்பவர்க்கு மொருபோதருளுமில்லை
தானதர்மஞ்செய்தாலும் சாம்பரிலேவிட்டநெய்யாம்
வாக்கிலொன்றுபேசி மனதிலொன்றுவைப்பதுவும்
காமக்குரோதமுற்றுங் கன்னியரைக்காதலிப்பார்
மேன்மைச்சடைவளர்த்து வெண்ணீற்றைப்பூசிடுவார்
தாடிவளர்ந்து தலைமொட்டைசெய்திடுவார்
மகத்திவருமல்லவல்ல வாய்பிழைப்புக்குத்திரியும்
செகச்சாலக்காரரிவர் சித்தியொன்றுமில்லையென்பார்
ஆவென்றபாவமொன்று மற்றூற்பிறவியறும்
சீவன்முத்தனாகுமென்று செப்பினார்மூந்நூலோர்
பிறவுயிரைக்காத்தல் பேதமில்லாமற்றனது
விரதபங்கமில்லாமை வெகுளாண்மையிந்நான்கும்
தவமிதுவாமென்றுந் தங்குமெஞ்ஞானமென்றும்
சிவயோகியாமென்றுஞ் செப்பினார்வள்ளுவரும்
மன்னவரேயானாலும் மற்றெவர்களானாலும்
என்னவிதமாயோ ரிடறுவருமென்றேயறிந்தால்
கைத்தானயமதனைக் காவாமற்போனக்கால்
மகத்தானவாழ்வுகெடும் மானிலத்திற்றுன்பமுண்டாம்
மாறி நிலையும் வல்பிணியுந்தீக்கோளும்
வேறுபகைவர்வர மேலுமேவற்பகையும்
வாராதுதற்கால வகையறிந்துதீர்ப்பவரை
ஆராய்ந்தறிந்து அவரைத்துணைக்கொள்வதும்
ஈகையில்லாமாந்த ரிருந்தென்னிறந்தென்ன
ஆகையாலேமிக மதனிலேசேர்க்கவென்றார்
தலமீதில்மிக்கான சாத்திரங்கற்றாலு

மூலகவியற்கைதனை யொன்றும்விடலாகாது
இல்லாதாரானாலு மிருந்துமூலகவளம்
வல்லமையாய்ச்செய்தவரே மாதவருக்கொப்பாகும்
வலியாரெளியாரு மானவன்மூவரிட
மலிவானகோபங்கள் வைத்தாரேயாமாகில்
நாடாளாம்லட்சுமியும் ராசர்பகைநேரும்
கேடாய்முடியுமென்று கிளர்த்தினளவ்வையுந்தான்
எப்போதுங்கீர்த்திசற்று மில்லான்றனைச்சுமக்கும்
வெப்பினால்பூமி விளைவுகுன்றிபோய்விடுமாம்
குற்றமில்லாமல் கொடுத்துபுகழ்தேடாரை
செத்தபிணத்தோடே சேர்க்கவென்றார்வள்ளுவரும்

[காலம்]

தந்தைதாய்புத்திசொன்னாற் றள்ளிமுனியுங்காலம்
நிந்தனையாய்ச்சற்குருவை நிகழ்த்துங்கொடுங்காலம்
பெரியோரை தூஷணித்துப் பேய்க்குதவுமில்லாமல்
அரிசிவனை நிந்தனையா யகப்பேசுமிக்காலம்
மெய்யேபொய்யாங்காலம் மேலோர்கீழாங்காலம்
பொய்யேமெய்யாக பொருந்துமிதுகாலம்
வன்சமரிலோடினவர் வரிசைபெருங்காலம்
அஞ்சியேயாளடங்கி யரியவர்மேலாங்காலம்
இன்பமுறு நூல்படித்தா லிகழ்ச்சியுறுங்காலம்
பண்பில்லாநையாண்டிப் பாட்டையெய்துந்துற்காலம்
இனிதானசற்குணருக்கொன் றீயாக்கலிகாலம்
அனியாயக்காரருக்கு மடிக்குதவுந்தற்காலம்
பெண்டாட்டிவைதாலும் புருஷன்குறியாமல்
கொண்டாடிகொண்டிருக்குஞ் சூலாமருக்கேயாங்காலம்
ஆனகலிகாலத் தடைவிதுவேயானாலு
மானபரனைவனும் வையகத்திலுண்டெனலாம்
இருப்பார்க்கொருகடனு மெய்தாதகாலமுமாம்
ஒருக்காலுமீயார்க் குதவுவாரிக்காலம்
ஆசாரந்தர்மங்க ளங்கசுத்திமூன் றுமில்லார்
வேசைவெள்ளாட்டிகளே மேல்வட்டமாங்காலம்
தேடியிடுவார்களுக்குத் தேவியர்கிட்டாக்காலம்
பேடிப்பயல்களுக்குப் பெண்டுகள்வாய்க்குங்காலம்

சுகமாய்க்குடிபிறந்த சுகாதரார்க்குமேன்மைகொஞ்சும்
விபசாரத்திற்பிறந்தோர் மேலவராமிக்காலம்
கொண்டபெண்ணைவிட்டுக் கொடிதானலவ்வாடி
முண்டைகளைக்கொண்டலையு மூடர்மேலாங்காலம்
சொந்தமணவாளனையுந் தூஷணித்துச்சோரத்தில்
அந்திப்பகலூர்சுற்றும் அவிசாரிக்காங்காலம்
மேற்குலமுங்கீழ்க்குலமும் விபசாரத்தில்மிஞ்சி
வாகுபெறும்வேசையர்கள் வறுமைக்குள்ளாங்காலம்
பிள்ளைவயதில்மிகுந்தாற் பிதாவினதுசொற்கேளான்
தெள்ளியதோர்வித்தைகற்றால் சீஷன்குருவைத்தேடா
பெண்டானவள்ளியவள் பேச்சில்மிகுந்தாக்கால் [ன்
கொண்டுமணவாளனையுங் குறியாகவெண்ணாளாம்
பாரோர்கணோய்தீர்ந்தால் பண்டிதரைத்தேடார்கள்
தீதானசெல்வம்வந்தால் தெய்வமதைப்பேணார்கள்

[மாதா]

தன்னுடையமாதா தமையன்மனையாட்டி
மன்னவர்கடன்றேவி மாமியாரானவரும்
தெய்வம்நிகரான தேசிகனார்தேவி
ஐவரையுந்தாயென் றருளினார்மூந்நூலோர்
பெற்றபெண்போலே பேணிமருமகளை
வைத்தாதரித்து வரும்மாமியேமாதா
தந்தைதனக்கிளைய தாரமந்தக்கைகேசி
பிந்திவருஞ்சித்ராங்கி பிள்ளைகட்குச்சத்ராதி
பின்தாரப்பிள்ளையென்று பேதகமில்லாமனக்
குந்திதனக்கொப்பான கோதைமுதல்மாதாவாம்

[பிதா]

தன்னையேபெற்றவஞ் சற்குருவுமன்னவரும்
மன்னுந்தமையனுடன் மாமன்வளர்த்தவரும்
வித்தைவருவித்தோர் வெங்கலியைத்தீர்த்தவரும்
மற்றுமொருவாபத்து வரும்போதுகாத்தவரும்
ஓரொன்பதுபேரு முற்றபிதாவென்று
கூறுமநுநீதிக் கொள்கையிதுவேயாகும்
கல்விவருவித்துக் கடனொன்றுமில்லாமல்
செல்வமுடன்வைத்த திறவானோர்தந்தையுமாம்

[மைந்தர்]

அற்பராம்நூறுபிள்ளை யானாலும்பெற்றுமென்ன
சற்புத்திரனென்றால் தலைமுறையெல்லாம்விளங்கும்
தந்தைதாய்வாக்கியந் தமையன்குருவாக்கியம்
சிந்தைதனில்சத்தியமுந் தெய்வவிசுவாசமுடன்
இத்தகைமையாருடையோ னினியதசரதன்றன்
புத்திரனுக்கொப்பான புத்திரனேபுத்திரனும்
எத்தனைதான்செல்வத் தியல்போடிருந்தாலும்
புத்திரனில்லாவாழ்வு போசனமும்நஞ்சாகும்
தந்தைதாய்வாக்கியமது தன்னைப்பரிபாலித்தோர்
நந்தாதசரதனும் இராஜகுமாரனென்பார்
பிதாவுடையவாக்கியம் பிசகாதுகாத்தவன்றான்
சுதாகரரில்மிக்க சுதன்பரசுராமனென்பார்
ஆசான்றன்வாக்கிய மனுவுந்தவருதான்
வாசாலன்சத்தியமுள்ள வாய்மையரிச்சந்திரனும்
தமையனுரைதட்டாத சற்புத்திரானோர்
தமையுமங்கேசீர்தூக்கில் தருமனுக்குநேரிளையோர்
தந்தைபேருந்தன்பேருந் தாரணியிலேவிளங்கித்
தந்தைதாய்சொல்தட்டாத் தன்மையோன்புத்திரனும்
தந்தைக்கிசைந்தமறு தாரமேதன்றாய்ப்போல
வந்தனைசெய்மைந்தர் மனுகுலத்துமைந்தரொப்பார்
நல்லார்பொல்லாரென் றிரண்டுவகையாயுலகஞ்
சொல்லுவதைவிந்திலுற்ற சுதாலறிந்திடலாம்

[ஜோசியம்]

உற்பவித்தநாளும்பின் னென்பதுடனென்பதுவும்
வைப்போதும்வைக்கவொண்ணு வழிபோகலாகாது
வல்பிணியுந்தீராது மருந்துண்ணலாகாது
கல்யாணப்பெண்ணைமயிர் களைந்திடவுமாகாது
இல்லம்புகுத லினிதுண்ணலும்வைக
ணல்லவங்கள்செய்திடவு நற்பணிகள்நற்றூசு
தானுந்தரிக்கவிது சார்ந்தநாளாகுமென்று
மேநாட்கணித விதியாலுரைத்தனரே
திங்கள்முதனாளுமது சென்றகடைநாளுடனே
மங்கையர்கள்பூப்புநாள் வாசியமாவாசியிலும்

சென்மநாள்மூன் றிலுஞ் சேயிழைப்புணர்ந்தால்
தன்மமல்லவாழ்நாளுந் தான்குறையுநோய ணுகும்
தலைக்கெண்ணைபோசனமுஞ் சவரமுடனித்திரையும்
நலத்தைக்கொடுக்குமந்த நற்கிழக்குத்தெற்கதுவும்
மற்றவிருதிசையு மாகாதுமத்திபமாம்
அந்தமழிவதல்லா லாயுள்விர்த்தியில்லையென்றார்

[இலட்சுமி இருப்பிடம்]

மாயன்றன்மார்பினிலு மன்னரிடத்தினிலும்
தூயதொருவில்வந் துளவங்கடப்பமலர்
தாமரையின்மீதினிலுஞ் சாகரத்தில்கங்கையிலும்
சேமமுறும்யானை தேசிமுகத்தினிலும்
ஊதுகின்றசங்கடமு ருத்திராட்சஞ்சாமரத்தில்
கேதனத்தில்தேரினிலே கெட்டபோதுண்ணூர்பால்
சுத்தமுள்ளவீரரிடஞ் சுத்தமாகியமனையிற்
சத்தியஞ்சேர்வாக்குடையோர் தர்மபரிபாலனர்கள்
அழகுஞ்சுசிகரமு மமர்ந்தகுணப்பெண்ணிடத்தில்
வளமைதரும்பசுக்கள் வாழுமிடந்தனிலும்

[மூதேவி இருப்பிடம்]

சோரஸ்திரீயிடத்தில் சூதகப்பெண்ணிழலில்
பராக்கிடாவில் பல்விளக்காப்பேரிடத்தில்
சூளைப்புகையிற் சுடுகாடெரிபுகையில்
காளையாங்காமுகர்பால் கழுதையிடத்தினிலும்
கள்ளிநிழலதிலுங் கைம்பெண்கடன்னிடத்தில்
கொள்ளிக்கரியுமியற் கொட்டைநூற்பாரிடத்தில்
நீசர்நிழலில் நிட்டையில்லாரிடத்தில்
பேசுங்கடுஞ்சினத்தோர் பேடியிடந்தனிலும்
சுத்தமில்லாமனையில் சுராபானரிடம்இரவில்
வெற்றிபெரும்வேல் விரைவீணிழல்தனிலும்
என்றுஞ்சுசிகரங்க ளில்லார்விதவைகள்
மொன்றியனைவோர்பா லுதயந்துயில்வோர்பால்
மூதேவியாளுநித மோடிக்குடியிருப்பாள்
மீதாணருந்துவர்பால் மேன்மைசற்றுமில்லாத
பாங்காகநாளும் பகற்புணர்ச்சிசெய்பவரும்
தாங்காதிடக்கையாற் றம்பூலந்தின்பவரும்

போசனங்கள்செய்கின்ற போதில்சிரசினிலே
தூசுபுனைந்துண்ட துன்மார்க்கரானவரும்
காலையிலுமாலையிலுங் கண்துயில்வார்தன்னுடனே
நாலுபேரானவர்பால் லட்சுமியும் நில்லாளே

[பகை]

பாரம்பெரியகத்தி பஞ்சுதனக்கேநாணும்
சூரியனுஞ்சந்திரனுந் துட்டரவினால்மறையும்
சிற்றெறும்பால்யானை திகைக்குமதுபோல
அற்பரால்மேலோர்க் கவதிகளும்வந்தெய்தும்
தந்தைதாய்சொற்கேளார் தடுப்பார்கொடுப்போரை
அந்தக்கொடியோரு மட்டமத்திலேசனியாம்
சபையிற்பிரசங்கத் தன்னிற்பழுதுரைப்போர்
அபயமின்றிப்பேச்சில் மிச்ச மானதொருபெண்டிரும்
தாமாய்விரோதியுடன் றுனிவர்கள்மூவருந்தான்
சேமத்திலேவந்த செவ்வாய்க்கிளையெனலாம்
தன்னைமீறுமடிமைச் சந்திராஷ்டப்பங்குக்காய்
தன்னைச்சபையேற்றுந் தம்பிசென்பச்சூரியனும்
சகோதரற்குவஞ்சனைசெய் தமையனுமென்பவன்றன்
மாபாவிமூன்று மிடத்துவியாழமதாம்
பார்த்திபர்கள்மெச்சவென்று பழுதுகூறிகொடுப்போர்
ஏற்றமிடும்பொல்லாத இராகுவுடன்கேதுவுமாம்
சாலக்கடன்பட்ட தந்தையருயார்க்குமனு
கூமொயுட்பட்டுக் கொண்டுதிரிந்ததாயும்
விந்தையில்லாப்பிள்ளைவெகு ரூபமுள்ளமனையாட்டி
சத்துருவாம்நால்வரென்னு சாற்றினார்முந்நூலோர்
வேங்கைபதுங்குவதும் வேழம்பின்வாங்குவதும்
பாங்காய்ப்பகையுறவும் பாம்புசாய்ந்தாடுவதும்
நல்லோர்பெரியோர்க ணயந்துவணங்குவதும்
மெல்லிடைச்சிரிப்பும் விழிமகிழுமின்னொளியும்
மிக்கானவில்வளையும் வேழமுறங்குவதும்
உக்கிரதளஞ்சமரி லொன்னலார்க்கொதுக்கும்
இத்தகையமீரைந்து மொளிதாய்நினைக்கவொண்ணா
மத்திபமாயுயிர்க்கு வாதைகளுமுண்டாகும் [ல்
சொற்குற்றம்பாராட்டி தொழுவழக்கைச்செப்பவர்போ

பற்காட்டிச்சீவனங்கள் பண்ணித்திரிவதுதான்
வலிதானவாடரவின் வஞ்சப்படத்திலுள்ளே
எழிலாழ்ந்ததாரென் றியம்பினார்முந்நூலோர்
பண்பாய்க்கடுவுறவும் பண்ணவந்தநாமமிது
பின்பவரையும்பிரிந்தார் பிணக்காம்பகைநேரும்
அங்கபங்கமானாலு மசூசியங்களானாலும்
தங்ககுலத்தேது தாழ்வுற்றிருந்தாலும்
நிந்தைகள்சொல்லி நெகிழ்ந்துரைக்கலாகாது
எந்தக்குலமும் இழிவில்லாதில்லையில்லை
துன்பம்பழிபகையுந் தொடருப்பழிபிழைகள்
பின்பவர்க்குமெய்தும் பெருமைசற்றுநில்லாது

[பகை வெறுப்பு]

நேர்ந்தவினைவலியும் நேர்வார்கடன்வலியும்
சேர்ந்ததுணைவலியுஞ் சீர்தூக்கிச்செய்வதுமாம்
கூடாதகாலமடைக் கொக்கதுபோலேயிருப்பாம்
கூடுமந்தகாலமடைக் கொக்கதுபோல்வெற்றிகொள்
நுட்பவெறும்பெலாங்கூடி நோக்காமலேயேற [வாம்
ஒப்பிருங்கல்குழிந்த வுவகைபலவெல்லுதலாம்
மெள்ளமெள்ளப்பாய்ந்த நீர்முகக்கடுமலையின்
கல்லைக்கரைக்குங் கதைபோற்பகையறுதல்
காலமதுவழிந்து காக்கைவெல்லுங்கூகைதனை
காலமதுதப்பினால் காக்கைதனைகூகைவெல்லும்
சிலநாளாயானையொரு தேங்காயினோடடக்கி
பலிதமுள்ளவேளைகண்டு பாகனையேவென்றதும்
பண்பாகக்காலமது பார்த்துப்பகைசெலுத்தும்
பண்பிதுவாமென்று பகர்ந்தாரேமுன்னோர்கள்
உற்றபகைவரென்று லுள்ளாக்கிக்காரியங்கள்
பெற்றபிறகுமதை பேதமதைக்காட்டுவதாம்
காலத்தின்சீலங் கண்டறிந்துகொள்ளாதார்
கோலமழிந்து குரங்காவார்தப்பாது

[சேரிடம்]

சந்தனவிருட்சமதைச் சார்ந்தமரமவ்வாசம்
அந்தமகமேரணைந்த வக்காகமன்னிறமாம்

பாலில்கலந்தநீர் படிகமணிக்குள்வடமும்
சாலகமரகதக்கல் சாய்கைபட்டதிம்மூன்றும்
தன்னிறங்களைக்கொடுக்குந் தன்மைபோல்நல்லோரை
நன்னயமாய்ச்சேர்ந்தோர்க்கு நற்குணமேயுண்டாகும்
நல்லாரைக்காண்பதுவும் நல்லார்சொற்கேட்பதுவும்
நல்லார்குணமுரைத்தா னன்மையுண்டாகுமென்பார்
ஆசாரமன்பு வறிவடக்கமுள்ளோரை
தேசத்திற்கண்டு சேர்ந்தால்பெருமைவரும்
கதிரோனுதிக்கையிலே கண்டபெருஞ்சாய்கை
மதியமதிலேகுமது வாறுசிறியோறிணக்கம்
மதியந்திரும்பினபின் வாதிக்குஞ்சாய்கையைப்போல்
சதிராய்ப்பெரியோரைச் சார்ந்தாலேநன்மைதரும்
கற்றபெரியோருறவு கருப்புநுனியிலிருந்து
உற்றதன்வேர்வரைக்கும் உண்டருசிபோலாகும்
சிறியோருடனுறவு தின்கருப்படியிலிருந்
துதியநுனிவரைக்கும் உண்டருசிபோலாகும்

[செல்லாவிடம்]

கடலிலோடுங்கப்பலது கடையிலேயோடாது
புவியிலேயோடுந்தேர் புனலிலேயோடாது
தண்ணீரில்முதலையதைத் தந்திவெல்லமாட்டாது
நண்ணுபுலிகாடன்றி நாடுற்றால்கேட்டையுறும்
செல்லுமிடமிவ்வாறு திறஞ்செலுத்தவேண்டுமன்றி
செல்லாவிடந்தனிலே திறஞ்செலுத்தக்கூடாது

[யோகம்]

மன்னர்மெச்சிக்கும் வரிசையதிகாரம்
பன்னும்சாம்பிராச்சியமும் பட்டாபிஷேகமென்பார்
நல்லகுணமாகுமுன்னால் நாடிவலியவந்து
புல்கிடிலேயோகம் புத்தமிர்சித்தமுமாம்
மண்ணிற்புதைத்தபொருள் வாதமுறைக்காசையுற்று
நண்ணுவார்க்கெய்தாம னண்ணார்கட்கெய்துவதும்
மிஞ்சும்பயிர்விதைத்து விளைவுகுன்றிப்போவதுவும்
கொஞ்சப்பயிரிடுவோர் கூடிவந்துவாழ்வதுவும்
கப்பல்வியாபாரங் கனங்குறைந்துப்போவதுவும்

சொற்பமாய்வாணிபஞ்செய் தோர்களுக்குக்கூடுவதும்
காணாமற்காணாமற் காவலர்கள்கேள்வியினால்
தோணுதலாய்வலியத்தொழில்கொடுத்துவாழ்வதுவும்
மேனாளிற்றந்தைதாய் விட்டகுறையாகுமென்று
தானுமுன்னாள்செய்திருந்த தர்மமாவதென்றும்
அந்நாள்நற்பூவெடுத்து அர்ச்சனைகள்செய்ததென்றும்
இந்நாட்பெரியோருக் கீய்ந்துவரம்பெற்றதென்றும்
லட்சுமிகடாட்சமிந்த நான்குவகையோர்க்குமென்று
உச்சிதமாய்முன்னோ ருரைத்தாருலகோர்க்கென்று
திருமடந்தைசேரில் சிறப்புங்கனமுமுண்டு
பொருளுந்துரும்பாகும் பொல்லாருநல்லோராம்
செல்லாதவார்த்தைச்செல்லுஞ் செய்யுமரியாதையுண் [டாம்
எல்லோருமேபுகழ்வார் எதிராளியுமுறவாம்
கீழோருமேலோராய்க் கிளையுமிகவிர்த்தியுண்டாம்
தாழப்பெருங்காற்றுத் தண்ணீர்போற்குடித்தும்

[மன ஊக்கம்]

வீரப்புலியுயிரை விட்டாலேதோல்கொடுக்கும்
சூரனுயிர்போமளவுந் தோல்வியென்றுபின்வாங்கான்
உத்தமியேயெந்நாளும் உயிர்க்குலயமில்லாமல்
சற்றாகிலும்பிறர்க்கு தன்னியத்தைத்தான்கொடுக்காள்
ஏற்கைபோய்ச்சாலவுந்தா னென்னதுன்பமுற்றாலும்
ஊக்கமதுகைவிட்டா லுயிர்க்குலயம்வந்தெய்தும்
உள்ளஞ்சிதறாமலொன்றினையேகைப்பிடித்தால்
தெள்ளிமருளுஞ் சித்திமுத்திரண்டுமெய்தும்
பலவாய்நினைக்கவொரு பலனேதுமெய்தாது
அலைவாய்த்துரும்பதுபோ லலைந்துகெடுஞ்சித்தியில்லை
ஐம்புலனையும்உரியோ ரடக்குவதுவேயருமை
செம்பொன்னெலாந்தேடித் தினங்கொடுப்பதேயருமை
தெண்டிக்கவல்லவன் சினம்பொறுப்பதேயருமை
கொண்டகணவற்கிசைந்த கொம்பனையுமேயருமை
நேசமொன்றில்பேதைமன நிற்பதுவுமேயருமை
தேசத்திலிவ்வைவரையுந் தெய்வப்பிறப்பெனலாம்

[அளவிலாமை]

பெருங்கடலாழம் புருஷயோகஞ்சூது
மங்கையர்கடன்மனமும் வஸ்துவின்றன் நிணமும்
வானளவுமாற்று மணலுமழைத்துளியும்
வானிலுறுகணமு மண்ணுண்டராசரையும்
உற்றபெரியோர்க ளுள்ளக்கருத்தளவுங்
கற்றோர்கருத்துங் காமன்கணையகலும்
மானிடர்கள்சென்ம மனுத்தொகையுமாமனையு
மானபருவதங்க ளனைத்துமதினிறையும்
பார்க்குள்ளேயிந்தப் பதினாறுவல்லபத்தை
பார்க்குமளவிடவு மாகாதறிவீரே
இறந்தார்பிறந்தார்க ளிவ்வளவாமென்றாலுந்
துறந்தார்பெருமைகளை துகையறிந்துகூறவொண்ணா
ஆயுள் நிதானங்க ளாறிரண்டிலேகிரகந்
தூய நிகரான நிலை சொல்லயெவராலுமில்லை
சூரியன்முன்னிற்காலஞ் சுடுமணலில் நிற்கவொண்ணா
ஆறணியுமீசர்முன்னே யஞ்சாமற்பேசிடினும்
தேசமதில்முக்கியச் சிவனடியார்முன்புநின்று
பேசவரிதென்று பெரியோருரைத்திடுவார்
வாரியினீராழம் வானளவுமாமலையும்
ஆறின்கரைமணலு மாகாசத்தேயுதவும்
அன்பாமிவ்வைந்து மளவுகண்டுசொன்னாலும்
கொம்பனையார்நெஞ்சக் குறிப்பறியவொண்ணாதே
வெள்ளம்பறவைகளும் விலங்குடனேவேசையர்கள்
உள்ளமிவைநான்கு மொருவழியாய்நில்லாதே

[உதவி]

வாவிநீரம்பலத்தில் வைத்தமரநிழலும்
தாவுமணலூற்றுத் தண்ணீரின்பந்தலுடன்
பாங்கானசந்நிதியில் பழுத்தமரமானதுவும்
தாங்கும்விபசாரி தனமும்நிலவினொளி
பார்க்குள்விவேகியர்கள் பாக்கியமிவரொன்பதுவும்
ஆர்க்குமுபகார மல்லாதுவீணலவே
நல்லோர்தேடும்பொருள்கள் நாவலர்க்கும்வேதியர்க்கு
வல்லகுருவானவர்க்கும் மாதாபிதாவினர்க்கும் [ம்

புத்திரர்கடன்றனக்கும் போற்றுமித்தேவதைக்கும்
உற்றசகோதரர்க்கும் உண்டென்றுநம்பியவர்க்கும்
தர்மமேசெய்பவர்க்குஞ் சார்ந்தவறிஞருக்கும்
இம்மாத்திரம்பேர்க்கு மெய்துமிவர்பொருளே
இல்லந்தனக்குத்தன் ஏந்திழையாளே துணையாம்
நல்லதேகந்தனக்கு நற்றுணைவரோ துணையாம்
தேசாந்திரனுக்குச் சீர்துணையாங்கற்றகல்வி
மாசற்றிகபரத்தில் வருந்துணைதான்செய்ததர்மம்
வர்த்தகர்பால்வைத்தபொருள் மன்னவர்கடன்பழக்கம்
உற்றவிவேவிகட் குபகாரஞ்செய்ததுவும்
பருவத்தில்பெற்றபிள்ளை பக்குவத்தில்கற்றவித்தை
தருணத்திலீரைந்துந் தானுதவுந்தப்பாதே
என்னபகையாளு மிடர்க்குதவிசெய்தல்நலம்
பின்னக்கவிசொல்லி மேன்மைசெய்வரேபெரியோர்

[உதவாமை]

நாய்பால்சுரந்துமென்ன நாணல்மிகப்பூர்த்துமென்ன
பேய்பொன்னைக்காத்துமென்ன பேடிகையிலாயுதமேன்
எட்டிப்பழுத்துமென்ன ஈண்டுதழைத்துமென்ன
பட்டுபணிசித்திரத்தில் பண்ணியிருந்துமென்ன
சற்குணமில்லாப்பெண் தங்கநிறமாகிலென்ன
மிக்கசபைக்கோழை மிகுகல்விகற்றுமென்ன
ஆட்டின்கழுத்தில் அதரமதுநீண்டென்ன
காட்டினிலெரித்தென்ன கானலில்நீர்கண்டுமென்ன
வேசைக்குப்பொன்கொடுத்தேன் வீணருக்குநன்றிசெய் [தேன்
மாசுடையவற்பருக்கு வந்தென்னவதிகாரம்
காட்டுக்கரடிமயிர் கறுத்தநிறமாகி
நீட்டியிருந்தாலுமென்ன நெடுகக்குறையிலென்ன
இத்தனையாய்ச்சொன்னவிரு தெண்ணிரண்டுமீயாத
உலுத்தர்கள்தம்வாழ்வுக்கு ஒத்திருக்குந்தப்பாதே
தேகியென்போர்க்கீயாத தேடாதவர்க்குப்பொருள்
ஆகிவந்தாலுமென்ன அழிந்துபோனாலுமென்ன
பேடியழகுகண்டு பெண்கள்மகிழுவதும்
நீடுவஞ்சகர்சொல்லை நிசமென்றிருப்பதுவும்
கானல்கண்டேயோடுங் கலைமானுஞ்சாலவுயிர்ப்

பாயிலவுகாத்திருந்த பச்சைக்கிளியதுவும்
தேனருந்தத்தானழலர் சென்றசுரும்பினமும்
தானுயர்ந்ததேன்கண்டு சப்பாணிமெய்ப்பதுவும்
புல்லர்களின்வாழ்வுகண்டு புகழ்பாடிப்போம்புலவர்
வல்லமைக்கொப்பென்று மருநூலுரைத்திடுமே
கல்லாதவேட்டினிலே கண்டெழுதிவைத்தவித்தை
உல்லாசவேசையர்கள் உறவுசதமென்றிருந்தும்
மறுதேசம்போனபிள்ளை வஞ்சருடனேசம்
வருமென்றேயன்னியர்பால் வைத்தபொருள்பலனும்
தன்னைப்பெறுததொரு தந்தைதாயானவரும்
பின்னுடன்பிறவாப் பின்னவர்கள்முன்னவர்கள்
பேறுகத்தம்வயிற்றில் பெற்றுவளர்க்காதபிள்ளை
ஊராருடையசெல்வ முள்ளன்பிலாதபெண்டீர்
சத்தியமாயீராறுந் தருணுதருணமென்று
உற்றசமயத்துக்கு உதவாதுகண்டீரே
ஆற்றில்கரைத்தபுளி அனலிலேபோட்டவெண்ணெய்
காற்றில்பறந்தபஞ்சு காட்டிலெரித்தநிலா
பிரித்தசமரினிலே வீழ்ந்ததொருபெண்பாலும்
பரித்துகடற்சுழியில் பாய்த்தடைந்தகப்பலுந்தான்
சுட்டமண்ணுனதிலே தெளித்திட்டபந்நீரும்
இட்டமுடன்விழலுக் கிறைத்ததொருநந்நீரும்
வீணருக்குச்செய்தநன்றி வேசைக்களித்தபொருள்
காணுமிவையைந்துங் கைகூடாக்காரியமாம்
சற்பாத்திரமறிந்து தானஞ்செய்யாத்தருமம்
உப்புக்கால்தனிலு முவர்நிலத்தில்பெய்தமழை
பாம்பின்வாய்த்தேரைப் பாத்தைக்களித்தபொருள்
மேன்பாடுபெற்றபுவி வேந்தரிடஞ்சேர்த்தபொருள்
போனபொருள்நமன்கை புகுந்ததொருமன்னுயிரும்
ஆனைவாயின்கரும்பு மணைகடந்துபோனவெள்ளம்
மானிலத்தில்கொள்ளைப் பற்றிவரவையிலும்
வையகத்திலொன்பதுவும் வாருதுவந்தாலும்
ஐயோவுலுத்தன் அரைக்காசுமீயானும்
கவரிமானின்மயிருங் கற்புடையாள்ஸ்தனமும்
அமையாதவேங்கையின்தோல் அதிசூரன்கைவேலும்
ஆறுலும்லோபிபொருளைந்தும்வரவுயிர்கள்

போனாலேயன்றியொரு போதிலுமேகிட்டாது
கண்ணுக்கழகெங்குங் கனிவாழையின்கனியும்
வன்னமுருக்கின் மலரிவைபாலே துபயம்
தாழைமடலேபெரிது சன்னமலமெடலாம்
சன்னமகிழமலர் சருகாகக்காய்ந்தாலும்
வின்னமில்லாத்தன்மணமும் விட்டகன்றுபோகாது
ஆழியில் நீரதிக மள்ளியுண்ணலாகாது
ஆழியருகூற்றுவரு மன்னீருநன்னீராம்
இங்கிவற்றையொப்பாக ஈகைசற்றுமில்லாத
அங்கம்பெரிதா யழகாயிருந்துமென்ன
தேசமதுவில்லாவிடினுஞ் சிறியவுருவானாலும்
பாசமறுசற்குணமும் பவர்க்குதவியேபெரிதாம்
வேசையர்கள்நட்பும் விளக்கினதுவொளியும்
மோசவலையிவ்விரண்டு மொன்ருகுமென்றனரே
கைப்பொருளற்ருல்வேசி கடுகளவுநட்புமில்லை
மெய்ப்பாகஎண்ணையற்ருல் விளக்கொளியுசற்றுமில்லை

[நற்சிறப்புத்தமர்]

பாவபுண்ணியமறிவார் பலபொருளுமிச்சியார்
பூவைபவனைக்கார் புராணநெறியுணர்வார்
மாதவங்கள்செய்வார் வன்கொலைகண்டஞ்சுவார்
சூதாடார்ராயாது துன்பத்துக்குள்ளாகார்
உய்யவேயிவ்வாறு டையவர்கள்சற்குணராம்
தெய்வத்தின்றத்துவமாய்ச் செப்பினூர்முன்னோர்கள்
மாதாபிதாகுரு வானவரைத்தெய்வத்தை
மீதாய்பணியும் விசுவாசமுள்ளவர்கள்
தன்தாரமன்றிமறு தாரந்தனைநோக்கார்
புத்திமகிழ்ந்துதிதி பூசைபுரிவோரும்
சத்யமொழிபூர்வ தர்மபரிபாலனர்கள்
சுத்தமுறுநந்தவனச் சோலையதுவைத்தவரும்
யார்க்குஞ்சகாயமதாய்ப் பாட்டைதனைச்சீர்திருத்தி
மார்க்கந்தண்ணீர்பந்தல் மண்டபங்கள்கூவம்வாவி
செய்யுமகாபுண்ணியத் தேகானவுத்தமர்க்கு
எரியுமலைபோலே யாதுதுன்பம்வந்தாலும்
வெய்யில்தனைக்கண்டு வில்குபம்பனியெனப்போம்

கைலாசநற்பதமெக் காலுமிவர்க்குண்டாகும்
தாமரையின்மாமலருஞ் சவ்வாதுபுனுகுடனே
பூமருகுதேனும் புணரியுறுசிப்பிமுத்தும்
பொன்னுங்கவரிமயிர் புகழ்சேர்கோரோசனையும்
நன்னயஞ்சேராவின்பால் நற்றூசுபட்டதுவும்
ஈதுபத்தானவகை எங்கேபிறந்தாலு [ன
மேதைபற்றூர்போல்நல்லோரெக்குலத்தோராயிலென்
உப்புங்கற்பூரமது ஒன்றுபோலேயிருந்தும்
உப்புக்குங்கற்பூர மூயர்ந்தவிளையாகுமன்றோ
எல்லோருக்கும்ரூப மொன்றாயிருந்தாலும்
நல்லோர்தமக்குரிய ராவரோபாவிகள்தான்
பங்கமுற்றமூடர் படபடத்துப்பேசுவது
வெங்கலத்திலோசை விதமாகுங்கண்டீரே
நல்லதங்கத்தி னதைப்போல்சீராக
மெல்லமிருதுச்சொல் விளப்புவாருத்தமர்கள்
பன்றியைக்கண்டால்யானை பாதைவிடுதல்போல்
நன்றியற்றபேதையர்க ளானோர்வரவுகண்டால்
அந்தவழிவிலகி யப்பாலேபோகுவது
சிந்தைதெளிமேலோர்கள் செய்கையென்றுசொல்லி
நன்னயஞ்சேர்பொன்னும் நற்பாலுஞ்சந்தனமும்
கன்னல்தேனையுமென்ன தண்டனைகள்செய்தாலும்
மூக்குணமேகாட்டு முறையோர்பெரியோர்க்கு
தக்கயிடர்வந்தாலுஞ் சற்குணம்போகாதே
சிவயோகியானவர்க்குச் சென்மமொருக்காலுமில்லை
தவஞ்சேர்பசவாதி தனக்கனுவும்பஞ்சமில்லை
காலைதுயிலொழிதல் காணுமலேபுணர்ச்சி
மாலைமுழுகி மனைதனிலேசெல்வதுவும்
உற்றோரோடுண்மை உயிரோம்பலிவ்வாறும்
இத்தலத்தில்வாழ்வோர்க் கியல்பென்றுரைத்தனரே
உற்றபசுவானதுவு மோர்கன்றையேயீனும்
பத்தனேகுட்டிகளைப் பயிலும்பெரும்புலிதான்
கோரமதுசெய்வதற்குக் கொம்பிருந்துமேபசுதான்
வீரமில்லாசற்குணத்தால் மேன்மைமிகவுண்டாகி
வங்கிஷமும்விர்த்தியாம் வன்புலியின்கோரத்தால்
பங்கமுறுகுட்டியது பத்தினின்றும்விர்த்தியில்லை

நன்மைதீமைஇரண்டுமிந் நாட்டினுக்கத்தாட்சியதாய்
உண்மையிதுவென் றுரைத்தார்மநுநூலோர்
தெய்வதரிசனங்கள் தெய்வவிசுவாசம்
பொய்யாததானதவம் புத்திரர்களோடுணவு
பெரியோர்கள்சேர்வைகுலப் பெண்ணுளனுபோகம்
குறையாதசெல்வமுநோய் கொள்ளாததேகவிர்த்தி
தன்மைரிடனீன்ற தாய்தந்தைசெய்தவமும் [த்தார்
முன்னோர்செய்தபுண்ணியத்தின் முக்கியமென்றேயுரை
வித்வான்களானவரு மெய்ஞ்ஞானமுள்ளவரும்
வெற்பபுலிநகமு மேன்மையுள்ளபூனைமதம்
காரானைதங்கள் கவரிமான்றன்மயிருஞ்
சீரானவாறுமெங்கே சென்றாலுமேன்மையுண்டாம்
நாயானதுசினந்து நமைக்கடித்தால்நம்முடைய
வாயாலதைக்கடிக்கும் வாறுண்டோவையகத்தில்
அறிவில்லாமூட ரனேகமாய்வைதாலும்
பெரியோர்கள்வாய்திறந்து பேசாரொருக்காலும்
சற்குணத்தாலே தர்மமதுவந்தெய்தும்
துக்கம்வராதவர்கள் துடங்கினதுங்கைவசமாம்
தரித்திரமுமில்லை தக்கோர்பயமுமில்லை
பாரிற்புகழ்விளங்கும் பரகதியுமுண்டாகுங்

[நற்பிறவி துற்சனர்]

எண்ணுமல்யாதொன்று யார்க்குமிடர்செய்வார்
எண்ணுமற்கொலைகளவுக் கிறைச்சிமுதலானதுபார்
பொய்யுரைக்கவஞ்சார் போசனமுஞ்சாலவுண்பார்
மெய்யிற்பசியில்லா ரிராட்சதக்கணமாகும்
அஞ்சார்தனிவழக்கு யாவரையுமேமருட்டி
வஞ்சனையில்லார் வலியாரையானாலும்
ராப்பகலுமாறுமல் நாரியர்தமைப்புணர்வார்
சாப்பாட்டொழுக்கமுடன் தம்முடம்புசுத்தியில்லார்
மாதலத்திலிந்த வன்னெஞ்சுடையவர்தான்
பூதகணப்பேய்க்கும் புறப்பாகுமென்றனரே
கொப்புளதுக்கைந்துமுழங் குதிரைக்குப்பத்துமுழம்
அன்பானயானைக்கோ ராயிரமுழத்தினப்பால்
வண்டிகண்டாலைந்துமுழ மப்பாலாற்றுற்சனரை

கண்டவுடன்காதவழிக் கப்பாலேயோடல் நலம்
பாம்புமுதலானதற்குப் பல்லதனிலேவிஷமாம்
வீம்பானதேள்தனக்கு விஷமதுவும்வாலினிலே
துற்சனரானவர்க்குத் தேகமெல்லாம்விஷங்கள்
மிச்சமென்றுசொல்லி விதித்தார்மநுநூலோர்
வேம்பிற்கசப்பும் மேலாமருக்கொழுந்திற்
சோம்பாமணமிரண்டுந் தோன்றும்போதுண்டான
வாறுபோல்துற்குணமும் வாய்புகழ்சற்குணமும்
மீளாப்பிறப்பிலன்றி யிடையிலொன்றும்வாராது
நாய்க்குநல்லபோசனமும் நற்பணியுந்தான்பூட்டி
ஏற்கவேதண்டிகையி லேற்றிவைத்துப்போனாலும்
கண்ணில்மறுநாயைக் கண்டவுடனேகுலைக்கும்
வண்ணம்போல்துற்சனர்க்கு வாராதுநற்குணந்தான்
எல்லாருந்தூஷணிக்க வெல்லாருங்கோளுரைப்போம்
பொல்லாதகாற்றில் பிடித்தெரியுமக்கினியாம்
பொல்லாரைக்காண்பதுவும் பொல்லார்சொல்கேட்பது
பொல்லார்க்குணமுரைத்த போதிலேதீதாகும் [வும்
தர்மந்தனைநினையார் தக்கபழிக்கஞ்சார்
காமியவர்வாழ்வுவெகு காலம்நிற்கமாட்டாது
தலங்கள்தனைத்துதியார் தர்மகதைகேளார்
துலங்குநதியாடார் சுவடிவாசித்தறியார்
வாசமிகுகீர்த்தியுள்ள மானிடசென்மங்களிலே
நீசப்பிறப்பிவரை நேத்திரத்தில்பார்க்கவொண்ணு

[நிறை]

தங்கமுருக்கிடினுந் தன்னொளியுமங்காது
சங்கதனைச்சுட்டாலுந் தன்னிறமும்போகாது
சந்தனத்தையுரைத்துச் சலத்திற்கரைத்திடினும்
விந்தையுறுமணமும் விட்டகன்றுபோகாது
சாணையிலேமாணிக்கந் தகர்த்துமிகத்தேய்த்தாலும்
காணுமொளிவுமொருக் காலுமதுமங்காது
பால்முறியக்காய்ந்தாலும் பண்புசுவைகுன்றாது
ஞாலமிதையிவ்வாறு நல்லோர்பெரியோர்க்கும்
ஆதாரமின்றியென்ன வாபத்துவந்தாலும்
நீதிவழுவார்கள் நிறையுந்தவறாரே

ஊராார்பொருள்மே லொருபோதுமாசைவையார்
பூராயமான புருஷோத்தமரிவராம்
தன்னிடபொருளைப்பிறர் தானெடுத்துக்கொண்டாலும்
சின்னமொன்றுங்கூருதார் தெய்வப்புருஷனென்பார்
சார்ந்தவரைக்காப்பார்கள் தன்புருஷன்மேருவாம்
ஏய்ந்தமனமறிந்து ஏவார்புருஷாத்னம்
வாராவறுமைமிக வந்தாலுமற்பர்களை
பாராரேசேரார் பண்பாம்புருஷசிங்கம்
தாய்தந்தையாளுலுஞ் சமன்செய்தகோலதுபோல்
ஞாயமுரைப்போர்புருஷ நாயகமென்றேயுரைப்பார்

[ஈகை]

ஆறுவற்றிலூற்றூறும் அண்டம்விளக்கிவருஞ்
சூரியனொராகுவந்து சூழ்ந்திடினும்வெய்யிலுண்டாம்
நல்லமதிதேய்ந்தாலும் நல்வெளிச்சங்கொஞ்சமுண்டு
கொல்லைப்பாழாலுங் குருவிக்கிரையுமுண்டு
இவ்வகைபேர்யீவோருக் கேதிடர்கள்வந்தாலும்
எவ்வளவுமீவதல்லா லில்லையென்றுசொல்லாராம்
எடுக்கெடுக்கவூறு மிசைந்தமணற்கேணியைப்போல்
கொடுக்கக்கொடுக்கவல்ல கூடும்பெருஞ்செல்வம்
வந்தவிருந்துக்களித்து வரும்விருந்துபார்த்திருக்கும்
சிந்தையுடையோர்கள் தேவரிலுமேயதிகம்
தரித்திரத்தார் தயவில்லார்தம்மிடத்தில்
கூறிலேதுங் கொடுக்காரிகழ்ச்சிசெய்வார்
ஈயுமுதாரனைத்தா னெப்போதுவும்வேணுமென்று
வாய்திறக்கவேண்டா மனதறிந்தேயீவாளும்

[ஈகைக்கிடையூறு]

தேனிடத்திலீயுமுண்டு சலத்தில்முதலையுண்டு
மானிலத்தின்வீடுகளி லண்டவிடாநாய்களுண்டு
சந்தனவிருட்சத்தி னடியிலேசர்ப்பமுண்டு
கெந்தமிகுதாழம்பூ கிள்ளவென்முல்முள்ளுமுண்டு
கொடுக்குந்தியாகிகள்பால் கொடாமலிடையூறுகூறி
தடுக்கும்குலாமரங்கே தானுமுண்டேகண்டீரே
குற்றமுரைத்துக் கொடுப்போர்தமைக்கெடுப்பார்
சுற்றமழிந்துடையுஞ் சோறுநஞ்சாகிவிடும்

[சினேகம்]

மதியிலுருமுயலு மதிவளர்ந்தால்வளருஞ்
சதிராகத்தேயுநாள் தானுமதுதேய்ந்திடுமாம்
தாவிதனிற்கோடிகளும் தந்நீர்போற்ருழ்ந்துயரும்
மாவிதஞ்சேர்புற்பூடும் வளருமதிலேமடியும்
சேரும்பெரியோர் சினேகமிவ்வாருகுமென்று
கூறுமருநீதிக் கொள்கையிதுவேயாகும்

[சரீர சுகம்]

ஏற்றபுதன்சனியி லெண்ணெயிட்டேமுழுகி
காற்றுப்பனிவெய்யில் காயார்கள்மெய்வருந்தார்
ஓயாவழிநடக்கா ருண்டுபலகால்விரும்பார்
காயாவதுகிழங்கு கனியுமிகத்தின்ஞர்கள்
தன்வயதின்மேலான தையலுடனேசேரார்
உண்மைப்பசியன்றி யுணவுசற்றுமுண்ணுர்கள்
மலநீரடக்கார்கள் மடப்பளியிலேயிருந்தார்
நலமாய்ப்பழங்கறியை நாடார்பலநாளும்
காய்ச்சுபால்நெய்மோரெக் காலமுந்தான்சேர்ப்பார்கள்
ஏச்சில்லாவழுக்கை யிளநீர்மிகுந்துண்பார்
ஆறுதிங்கட்கொருவிசைதா னுனவிரோசனமும்
நாரியரைமாதமொன்றிற் கிரண்டுவிசைபுல்குவராம்
உண்டபின்புலாவி யுதகம்வருத்துவதும்
ரெண்டுபத்துரெண்டுமிந்த நெறிநிலையுள்ளார்தமக்கு
ஏர்க்குமுடல்தனிலே யெப்பிணியும்வாராது
தீர்க்காயுசுண்டாகும் சேமமென்றுசெப்பினரே
மாறுபாடில்லாமல் வயிறறிந்துண்பவர்க்கு
நூறுவரையுடலி னோயணுகமாட்டாதே

[நோயணுகல்]

கல்லால்மயிராலுங் கடுகிநடையாலும்
நெல்லாலுமியாலும் நித்திரையில்லாதாலும்
ஒழியாவிசாரத்தா லுண்டபின்புமுழ்கையினல்
கழியுமலசலங்கள் கக்கஷமாய்வீழ்கையினல்
பின்னுமடக்குவதால் பெருத்தசுமைசுமத்தல்
மின்ஞருடன்புணர்ச்சி மிகவும்விரும்புவதால்

வெய்பவனம்வேளேயினுல் வேர்வைபனிக்காற்றில்
வெய்யவிளவெய்யில் விரும்பல்கனியுணவு
ஏர்க்குங்கிழங்குசரு கிலேவிரும்பியுண் ணுவதால்
பார்க்குள்வியாதிவரும் பாதையிதுவென்றுரைப்பார்
காலேயிடம்வெற்றிக் காய்வோர்பிணமதனின்
மேலேவருப்புகைதன் மேலேபடுவார்கள்
தன்வயதுக்கேமூத்த தையல்தனேப்புணர்வோர்
தன்மையுடனிரவில் தயிர்வார்த்தேயுண்பவர்கள்
நால்வரிடந்தனிலே லட்சுமியும்நில்லாளாம்
மேலுமவராயுள் விழலாகப்போகுமென்முர்

[இறந்தும் இறவாதவர்]

பார்க்குள்விளங்கப் பலதர்மஞ்செய்தவர்கள்
மார்க்கமிகுகற்புடைய மாதைமணஞ்செய்தவர்கள்
தேவாலயமுதலாய்த் திருமடங்கள்கட்டினவர்
பூவானதுவிளங்கப் புனலாறுண்டாக்கினவர்
வறியோரிருக்க மனேகட்டிவைத்தவர்கள்
தரையாண்ட நீதிமன்னர் சற்புத்திரரைப்பயின்முேர்
காவியஞ்செய்கவிஞர் கவிமாலேசூட்டினவர்
பூவுலகிலோயாமல் பொருள்கொடுத்தமாந்தர்களும்
சீராளகோபுரங்கள் செய்துமுடித்தவர்கள்
சூராதிசூரர் துலங்குபதின்மூவர்களும்
வாகாயிருந்தாலும் வையகத்திலூழிமட்டுஞ்
சாகாதபேர்சொற்பத் தலமீதுறைபவராம்

[இருந்தும் இறந்தவர்]

நெடுநாள்மருகன்மனே நீங்காதிருந்தவரும்
அடைவாய்மருமகன்று னம்மான்மனேதனிலே
சதமாயிருப்பவனும் தமிழறியாமூடருமே
இதமாய்க்கவிபாடி இரக்கப்போம்வாணர்களும்
மெய்போலப்பொய்பேசி பொருள்வாங்கித்தின்றவரும்
பொய்பேசிகடன்வாங்கிப் பிழைத்துத்திரிபவரும்
மாருவறுமையுற்ருேர் வல்லமருந்துசெய்தும்
தீராப்பிணியாளர் சிவிகைசுமந்தேபிழைப்போர்
மனேவிதனேவணங்கி வயிறுவளர்ப்பவரும்

நினைவுதடுமாறிச்சற்றும் நீங்காக்கவலையுற்றோர்
சொற்சோர்வுபட்டோருஞ் சொந்தமில்லாப்பொருட்கு
மிச்சமாய்ப்பேசி வீண்வழக்குசெய்பவரும்
மனைவிதனக்கஞ்சி வந்தவிருந்துக்கொளிப்போர்
முனையானராசசபை மூடராய்ப்போனவரும்
ஈரேழுபேரும் எண்சாணுடல்படைத்தும்
சீர்கெட்டுயிரோடே செத்தபிணமாவார்கள்
சம்பத்துடன்பிணியில் தான்மெலிந்துவாழ்வதிலும்
துன்பமற்றேறையமெடுத் துண்ணல்மிகவு நன்றாம்
ஆனதிருமா தகன்றுவறுமைவந்தால்
ஞானம்போங்கல்வியும்போம் நாடும்பழித்திடுமாம்
தாய்பழுதுசொல்வாள் சபையேறவெட்கமுமாம்
தூயமனையாளுந் துரும்பாய்மதித்திடுவாள்
மெய்ச்சொன்னாற்பொய்யாகும் மேன்மையுறும்வீரமும்
உய்யவிருந்துவரில் உயிரோடேசெத்தபிணம் [போம்
மேன்மையறிவுகுலம் வித்தைநலமற்றுளதும்
போமேயிதற்கிசைந்து போவதுவேமெத்தநலம்
வேணமருந்துசெய்துந் தீராவியாதியுற்றால்
மானிலத்திற்றனக மாளுவதேயுத்தமமாம்

[பொருளின் பலன்]

பொருள்தேடதுக்கமதைப் போற்றிவைக்கதுக்கமதாம்
பொருளைச்செலவழிக்கப் போம்போதுந்துக்கமதாம்
காகத்தின்கூட்டில் கருங்குயில்கள்முட்டையிட [போல்
மோகமுடன்காகமுந்தன் முட்டைஎன்றேஎண்ணுதல்
ஈய்க்கள்தேன்கூட்டில் எடுப்பார்க்கிடங்கொடுத்து
போயலைகின்றதொரு புத்தியீனம்போலும்
சோரத்திற்பெற்றபிள்ளை சொந்தமென்றுமுத்தாடி
பேரிட்டழைக்கின்ற பேடிதனைப்போலும்
மயலாகத்தேடியே மண்ணிற்புதைத்தபொருள் [ர்
அயலார்பொருளுமல்ல அவன்பொருளுமல்லவென்ப
உற்றபொருள்தேடமன முற்றாலுலகமுமே
நற்றாகஞானிக்கு நாடெல்லாந்தன்னடிமை
பொன்னறியாமூடரிடம் பொருளதுவுஞ்சேர்ந்தாக்கால்
மன்னுங்குரங்குப்பூ மாலைபோல்கொண்டலைவார்

நாடுதனில்வந்து நல்லவித்தையாலேபொருள்
தேடுகின்றவல்லவர்க்குச் செம்பொன்னுருமசகம்
பொன்னுசையுள்ளவர்க்குப் போசனத்திலிச்சையில்லை
அன்னைசுற்றந்தர்ம மானதிலுமிச்சையில்லை
வெட்கமில்லைபோகலாம் வேளையின்னதென்றுமில்லை
இக்குணமுள்ளோர்பேய்க் கிணையாகுமென்றனரே

[பொருள் வகை]

மெத்தவுந்தானேகுவித்து வீட்டில்வைத்தநெல்லதனை
நித்தமெடுக்கிலந்த நெல்லுமாகிபோவதுபோல்
ஏலநமக்கும் எழுத்தினளவாக்குஞ்
ஞாலமிசையிரவி நாழிகைபோல்நாளாகி
மாசவருடமென்று மாதத்துகையாகி
மோசமாய்க்கொல்லு முறைமையறியாமல்
இன்னநெடுநாளிருப்போம் இதுவேசதமென்று
பொன்னைமிகத்தேடிப் புதைத்துவைக்கும்மாந்தர்களை
சீதேவிபூதேவி சிரிப்பாளிவன்றேனியாம்
மூதேவிசன்மமென்று மொழிந்தார்மநுநூலோர்
மிக்கதர்மம்பொருளாம் இன்பமென்றமூன்றினிலே
நற்குணத்தால்தேடுபொருள் நல்லயமுமின்பமுறும்
வஞ்சனையாய்த்தேடுபொருள் அத்தனையுமாகாது
மிஞ்சுபழிபகையா மென்பதனையுண்டாக்கும்
கூத்துப்பார்க்கவந்து கூடுஞ்சனம்போலும்
ஆற்றுக்கால்போல் ஐஸ்வரியங்கூடிவரும்
கூத்துமுடிந்தவுடன் கூடுஞ்சனங்கலைந்த
மாற்றம்போலாய்விடுமாம் ஐஸ்வரியமுள்ளதெல்லாம்
புண்ணியமெந்நாளும் புகழாகநிற்குமல்லால்
மண்ணினிலென்றைக்கும் வாழ்வுநிற்கமாட்டாது

[நல்லறிவு கயவர்]

தன்னைப்புகழ்வோருந் தாய்தந்தையைப்பேணார்
அன்னைசுற்றம்விலக்கி அயலார்க்குதவுபவர்
மேலோர்சொற்கேளாதோர் வேசிசதமென்றுரைப்போர்
பூலோகத்தொப்பனையைப் பொய்யென்றுரைப்பவரும்
கண்டாலுறவாடிக் காணுவிடஞ்சலிப்போர்

கொண்டபெண்செய்யுங் குறையைவெளிசொல்பவரும்
பொய்ச்சாட்சிகூறுபவர்போற்றி வைத்துபிச்சைகொள்
தையல்சொற்கேட்பதுவும் சபையில்பயனில்லா [வோர்
வார்த்தையுரைப்பவரு மற்றுமிந்தப்பன்னிருவர்
பார்த்தால்மனுஷப் பதராம்பசாசிவரே
அக்கினியைக்கட்டல்லா மகலாநோய்த்தீர்த்திடலாம்
மிக்கதொருகஷ்ட மிருகமிணங்கிடலாம்
வல்லவிஷந்தீர்க்கலா மாண்டோர்க்குயிர்தரலாம்
வெல்லரியபேய்தனையு மிரட்டியேயோட்டிடலாம்
பறவைமிருகம்பேசப் படிக்கவுமேசெய்திடலாம்
வரப்போகவுஞ்செய்திடலாம் மறலியிடதூதரையும்
மணலைக்கயிறுக்கி வைக்கலாங்கயவர்களின்
குணமதனைத்திருப்பக் கூடாதுகண்டீரே
வெல்லமிதக்குவித்து வேம்பின்விதையைப்பதித்து
நல்லதொருபாலூற்றி நாளும்வளர்த்தாலும்

[புல்லறிவு கயவர்]

சாதிகுணங்காட்டுந் தகைமைபோல்புல்லருக்கு
ஏதுரைக்குஞ்சற்குணங்கள் எள்ளளவும்வாராது
செல்வமதுவந்தவுடன் தெய்வந்தனைநினையார்
சொல்வரம்புசற்றுமில்லை சுற்றந்தனைநோக்கார்
தர்மந்தனைநினையார் தக்கப்பழிக்கஞ்சார்கள்
கர்மியிவர்வாழ்வுவெகு காலம்நிற்கமாட்டாதே
உண்டென்றுநாளும் உலகமுரைப்பதனை
திண்டுமிண்டாயில்லையெனச் செப்புமவர்பேயெனலாம்
தோலெலும்புதின்னு நாய்சோறுநெய்யுமுண்டாக்கால்
சீலமுடன்வயிற்றிற் செறியாதவாறதுபோல்
சண்டாளரானவாக்குத் தர்மநூலானதனை
விண்டாலவர்செவியில் வீழாதொருநாளும்
புலிக்கஞ்சியோர்வேடன் போய்மரத்திலேயேற
வலுக்குரங்குகண்டு வந்தவனையாதரிக்க
ஞானிக்குசுகமுமில்லை நாட்டிலோர்சாதியில்லை
ஈனமிலேச்சர்களுக் கெப்போது நிறையுமில்லை
காமிக்கொருவரம்பு கருத்துமுறையுமில்லை
மாமிக்கயோகிக்கு வஞ்சர்வினையரில்லை

சித்தசுத்தபூசைக்குத் தானுமங்கசுத்தியில்லை
வித்தைபுகல்வாணருக்கு வேற்றுமைகளாருமில்லை

[புல்லறிவு]

கள்ளருக்குற்றாருமில்லை கபடருக்குஞானமில்லை
எள்ளளவும்துன்பங்க ளேதுசுத்தவீரனுக்கு
பொய்யனுக்குச்சாட்சியில்லை புலையருக்கிரக்கமில்லை
ஐயோவிரோதிக்கு ஆயதொருநேயரில்லை
தான்பிடித்தபிடியாய்ச் சாதிப்பவன்குரங்கு
ஆனசபையிற்குறிப்பு அறியாதான்பட்டமரம்
எளியாருடனெதிர்ப்போ னேற்றதடிநாயாம்
பழிபாவத்துக்கஞ்சான் பசாசாகுமென்றிடலாம்
வந்தோர்முகம்பாரான் வனத்திலிருக்குங்கரடி
பந்தமுறுசபையில் படுப்போன்கிடாமாடு
அடுத்தோர்க்கிடர்விளைக்கு மவனேகொடுந்தேளாம்
பிடித்தபிடியைவிடப் புலவன்வலிசான்ற
சற்றெனினுங்கல்விகற்றுச் சபையிற்படிக்கறியான்
புற்றாய்விழுந்துபட்டுப் போனதொருகாட்டுமரம்
தன்புத்தியன்றிபிறர் சாற்றுபுத்திகேளாதான்
வன்புற்றுவானரமாம் வாய்பேசாவூமையென்பார்
அம்புவியையாளு மரசர்பகையைபெற்றோர்
கொம்பிழந்தமந்தி கூகையுறவானபட்சி
கொட்டுந்தேள்போல்தீராக் கோபமுடையவன்றான்
குட்டியிட்டநாய்கரடி கொடியவனமிருகம்
மருங்காய்பெரியோரை வந்தனைகள்செய்யாதான்
கருங்கல்லிலையடித்து கைகால்வகுத்தசிலை

[பண்டிதாள் பரிட்சை]

முக்கியஞ்சேர்நூலின் முறையும்நிறையறிந்து
பக்குவமில்லாநாடிப் பரிட்சைதனையறிந்து
தேடியழைத்தபின்போய் தேகங்குணங்காலம்
பாடுகின்றநாடிகெட்டுப் பரிட்சைகளுந்தானறிந்து
சிந்தாதவாதபித்தச் சிலேற்பனத்தின்கூறறிந்து
வந்தபிணியும் வலுவுமிகத்தெரிந்து
கற்பங்கியாழுங்கள் கனகுளிகைபற்பமுடன்

நக்கதொருசெந்தூரத் தயிலமுடன்சூரணமும்
இவ்வகையாய்லேகியமும் இதமறிந்துதான்கொடுத்து
அவ்வகையில்பத்தியமெத் தாகவேவையாமல்
எளிதானபத்தியத்தி லெப்பிணியும்நீக்குவித்து
தெளிவானவாரோக்கிய ஸ்நானமிகச்செய்வித்து
தந்ததேபோதுமென்று தான்மகிழும்பண்டிதனே
சந்ததஞ்சேர்தேவர்பதி தன்வந்திரியெனலாம்
மிக்கபிணிவந்தால் வேணபொருள்தாரேனென்று
மிக்ககுலதெய்வம்போல் மேன்மைமிகச்செய்வார்கள்
உற்றபிணிதீருமென்று உறுதிசொன்னாலேகுருவாம்
சற்றேமருந்துசெய்யில் தந்தையென்றுசொல்வார்கள்
பாதிலகுவானால் பண்பிற்றமையனும்
பாதியுந்தீர்ந்துவிட்டால் பரிகாசமைத்துனனும்
ஏதுபொருளானாலு மீவதுமுன்னேயனும்
காதலுடன்பற்றுநாள் கடனுளியாவானே
அப்பாற்பகையாளி யாவார்கள்பண்டிதர்கள்
இப்படிசெய்லோப ரிருப்பாருலகினிலே
தீராதநோயருமை செப்பாதபொய்யரிடம்
வேறானபண்டிதரை மேல்மருந்துகேட்பவர்கள்
மூர்க்கரிடத்தினிலு மொய்குழலார்பிரியா
நோக்குமவரிடத்தில் லோபியர்கள்தம்மிடத்தில்
கத்ததுரோகியர்கள் கண்டதெல்லாமுண்போர்கள் [ன்
பத்தியத்தைத்தாழ்வுசெய்யும் பண்பில்லாமாந்தருந்தா
மட்டில்லாப்பொன்னையள்ளி மாரியெனயீந்தாலும்
எட்டியடிவைப்ப தியல்பல்லபண்டிதர்க்கே

[சுத்தம்]

வெண்ணீறுடன்துளசி வில்வமருச்சுகந்தம்
பண்ணும்புதுப்பாண்டம் பழவர்க்கங்காயிலைகள்
செந்நெல்கவசமுடன் செம்பிரும்புவெண்கலங்கள்
பொன்னுடன்வெள்ளிமுதல் பூணுநவமணிகள்
கோதில்லாவேணபட்டுக் கோடித்துகில்யாவும்
பாதாட்டையாவதுடன் பத்தென்பதிவ்வகைகள்
கீழோர்பாலூற்றிடினுங் கீழோர்களீந்தாலும்
தாழ்வில்லாமேலவர்கள் தானிதனையேற்றிடலாம்

ஆசைமிஞ்சுமின்ஞர் அதரபானத்திற்கும்
பேசறியாப்பாலர்கள் போந்தசிறுநீரதற்கும்
வேட்டையிலேநாய்கடித்து விட்டிட்டமாமிசமும்
தேட்டமுடன்பட்சிகள்தான் தின்றபழங்களுக்கும்
இந்தவகைநாலுக்கு மெச்சிலிலேயென்றுசொல்லி
முந்தமநுநூலின் முறைமையுரைத்தனரே
எத்தொழிலுமெக்குலமும் இழிவுண்டேயல்லாது
சுத்தமதுவென்றவருஞ் சொல்லுதற்குநாவுளதோ

[ஆகாமை]

மன்னர்பகையு மாதவத்தோர்தன்பகையும்
வின்னக்கொலேஞர் விகடப்ரசங்கிபகை
ஊரார்பகையு முற்றுருடன்பகையும்
வீரானமந்திரிபகை மிகுந்தபணக்காரர்பகை
வல்லவர்கணக்கர்கவி வாணர்குருபகையும்
வல்லமைசேர்பண்டிதர்கள் மந்திரவாதிபகை
பெற்றபிள்ளைபெண்சாதி பின்னவர்கள்முன்னவர்கள்
உற்றபதினேழி லொருபகையுமாகாதே
ஆறடுத்தவூரதுவு மரசரிடஞ்சேவகமும்
நீரில்விளையாட்டும் நீர்மிகுந்தபோராறும்
தாசியுறவும்பிறர் தாரமதுநேசமதும்
நேசமில்லாத்தாயாதி நேசமாகாதுற்சனர்கள்
தன்னேடிணங்குவது சத்ராதிநட்பதுவும்
பன்னகத்தையாட்டுவதும் பகடுநடத்துவதும்
மெய்விளங்குப்போதினிலே மின்ஞருடன்புணர்ச்சி
மையிருளிலேதனித்து வழிபோகும்வல்லமையும்
நஞ்சுடனேதீமருந்தால் நாளுப்பழகுவதும்
அஞ்சாமலெப்போது மலைகளையோட்டுவதும்
ஆர்க்குங்கடலோட மதிலேதான்சஞ்சரித்தல்
பார்க்குமதுவுண்ணல் பலநாள்களவுசெய்தல்
இத்தகையாய்ச்சொன்ன திருபதையுமேமனதி
லுற்ருலிடறு முயிர்க்குலயமாம்இதுவே
சாரார்பயிடுவோ ரில்லாரிரண்டுடையோர்
ஊரார்போப்பாதையந்த வோரம்பயிரிடுவோர்
பிணைப்பட்டுப்பொய்ச்சாட்சி பேசுமிவர்நால்வர்கள்

சுணைகெட்டபேரிவர்கள் துன்பத்திற்குள்ளாவார்
சிற்றூர்குடியிருப்போர் சீர்கெட்டபெண்டுடையோர்
பெற்றபிள்ளையிற்றிரளாய்ப் பெண்ணாகப்பெற்றவரும்
அற்பனைச்சேவிப்பவரு மலக்கழிந்துபோவதல்லாற்
சொற்பச்சிலநாளில் தொந்தரைக்குள்ளாவார்கள்
அத்திக்காய்கோவைக்கா யைவிரலிதேற்றுங்காய்
சுத்தவெள்ளைக்கத்திரிக்காய் சோற்றுக்காந்தலிவைகள்
தின்பாரொருநாளுந் தேவபக்தியில்லையென்று
முன்பாகநூலோர் மொழிந்தார்மநுநூலில்
தூரந்தோரடங்காதார் துன்னிபிணியோர்களையும்
புறம்பேசும்வஞ்சகர்கள் பின்னவர்கள்பெண்டுகளும்
கல்லாதவனெஞ்சில் காணுமிவரெண்மரையும்
நல்லசபையிலொரு நாளும்வைத்துப்பேசவொண்ணு
ஆசனங்கள்தான்போட்டு வாயுசதுவிர்த்தியில்லை
போசனமுந்தான்சமைத்தால் போமேஜஸ்வரியம்
தனக்கெண்ணைதான்தேய்த்தால் சந்ததிகட்காகாது
அனர்த்தமிதுமூன்றென் றருளினார்முன்னோர்கள்
யோகியொருபோதே யுண்பானிருபோது
போகியுண்பான்மூன்றுபோ துண்பான்வியாதியஸ்தன்
உடனொருநான்குபோ துண்ணுமவன்றனக்கு
இடையூறுண்டாகுமென் றியம்பினார்முன்னோர்கள்
வீரத்திலொப்பில்லா விக்ரமனேயானாலும்
வீரியமும்வல்லமையும் விளம்பிடவுமாகாது
வேந்தர்குருபொய்யர் மேன்மையுள்ளகோபிகட்கு
வாய்ந்தகடன்கொடுத்து வாங்குவதுநீதியல்ல
நாட்டுக்காகாதவரை நமக்கடங்காப்பெண்டீரை
மீட்டுமந்தராஜனுக்கு மேலானமந்திரியை
துற்சனர்சினேகமதை தொட்டால்அசையுப்பல்லை
இட்சணமேயைந்து மெடுத்துவிடவேணுமென்பார்
கடன்பட்டுத்தரித்தோர் கைசீட்டிலேசேஷம்
விடந்தீண்டி மீண்டதிலே யெவ்வளவுமேசேஷம்
அக்கினியில்வெந்த அகந்தனிலேசேஷம்
மிக்கானசத்துருவை வெல்லுவதிலேசேஷம்
தெய்வப்பிரார்த்தனைகள் செய்துமதில்சேஷம்
உய்யபிணிமருந் துண்டதிலேபின்சேஷம்

காணிபோய்மீண்டதிலே கடுகளவுசேஷமுடன்
ஆணியாம்பத்து மனுவும்வைக்கலாகாது

[பலனில்லாமை]

சந்திரனில்லாவானஞ் சற்சனரில்லாதவூர்
மந்திரியில்லாவேந்தன் மதகரியில்லாவெம்போர்
மக்களில்லாச்செல்வம் மதுரம்இல்லாதகவி
தக்கசேனுபதிகள் தானில்லாவெஞ்சேனை
பெண்ணுரில்லாதமனை பிறவியில்லாதவுடல்
விண்ணுளப்பாடல் வினயமில்லாவேசி [ணழகும்
கோப்பில்லாக்கூத்துடனே கொங்கையில்லாப்பெண்
தாப்பில்லாச்சீவனங்கள் தந்திகளில்லாவீணை
பக்தியில்லாப்பூசை பார்த்திபரில்லாதபுரம்
சத்தியமில்லாதவாய் தானறியாவாணிபங்கள்
சந்தமில்லான்பாட லுதாரணஞ்சொல்லாதகவி
தந்தபுனல்சேர் நதிவளம்இல்லாநாடு
தேசிகனில்லாவித்தை தியானமதில்லா தீட்சை
பேசறியநல்லறிஞர் பெரியோரிலாதசபை
குடிநலம்இலாநாடு குணமிலாப்பெண்ணுசை
வடிவுற்றுவாசமில்லா வானமிகுமலரும்
சேகரமில்லாக்கதை தீபம்இல்லாதமனை
சூகரம்போலுண்ணுகின்ற சுசியில்லாப்போஜனமும்
கல்வியிலாத்தேகங் கற்பனையில்லாதகவி
வல்லவிவ்வெண்ணுன்கில் வரும்பயன்களொன்றுமிலே
தந்ததேபோதுமென்று தான்வாங்காவேதியனும்
வந்ததேபோதுமென்று வாங்குகின்றராஜாவும்
வெட்கத்துக்கஞ்சுகின்ற வேசையரும்வெட்கமில்லா
மிக்குலப்பெண்டீர் மேன்மையில்லைகஷ்டம்வரும்
அன்னையிறந்தாலுண வானதெலாம்நட்டமாம்
பின்னைப்பிதாவிறந்தால் போரானவித்தைநட்டம்
உற்றதுணையிறந்தா லுடலிலேபாதிநட்டம்
மற்றுமனையாளிறந்தா லன்றுதனைபோனதென்பார்
பருவம்போய்ப்பாடம் பண்ணுவிக்கும்வித்தைகளும்
பெரியகிழவனுக்குப் பெண்டிளமைப்பெண்ணுளும்
அத்தரித்திருக் கழகுடையபெண்டீரும்

இத்தன்மைமூன்றிலு மெய்துப்பலனில்லையே
வாரியிலேபெய்ந்தமழை வயிறுபசியில்லாத
பேர்களுக்கிடுஞ்சோறு பிசாசுக்கிடும்பூசை [லும்
பொன்னுள்ளோர்க்கீய்ந்த பொருள்பேதவிந்நான்கினி
என்னபலனும்இல்லை என்றனரேமுந்நூலோர்
அந்தணர்க்குமாவிற்கும் ஆபத்திலுதவாதார்
இந்தவுலகி லிருந்தென்னிறந்துமென்ன
யார்க்குமுரையாதவித்தை யனேகவிதமாக
பார்க்குள்படித்தென்ன படியாதிருந்துமென்ன
என்னகறிசுவைக ளினிதாயிருந்தாலும்
பின்னுமதில்நெய்யில்லாப் போசனமுந்திருப்தியல்ல
தன்னால் நிருவகிக்கத் தகாதவிரதமூற்றால்
என்னபலனும்இல்லை யிடறுவருமுத்தியல்ல
தருணமறிந்துதவாத் தன்மைசேர்நண்பாளர்
அருமையாய்ப்பின்னு லுதவியுதவாமலென்ன
வாலிபத்திலெய்யாத வடிவுடையபெண்ணும்
சாலவிர்த்தாப்பியத்திற் சார்ந்தென்ன நீங்கிலென்ன
புருஷனில்லாவிதவை பொன்னுடையாபரணம்
வரிசையுடனணிந்தால் வையகத்தோரேசுவார்கள்
பெற்றதாயில்லாத பிள்ளைதனையெவ்வாறு
வைத்துவளர்த்தாலும் வளங்கொடுக்கமாட்டாது
பல்லில்லாதோருமற்றப் பசியுள்ளோரானவரும்
நல்லருசிகாணாரென்று நவின்றார்மறுநூலோர்
தெய்வதவங்குருமுறையுந் திருஞானசாஸ்திரமும்
வையகத்திலேமருந்து மந்திரமோடிவ்வைந்தும்
மெய்யென்றுரைப்பவர்க்கு மெய்யாய்விளங்கிநிற்கும்
பொய்யென்றுரைத்தாக்காற் பொய்யாகிப்போய்விடுமே
பாடுபடாமற் பலன்கொடுக்குநற்பனைபோல்
நாடிக்கொடுப்பதுவே நன்றுகுமுத்தமமாம்
சிலதுநாள்பாடுபட்டால் தென்னைமரம்பின்பு
பலந்தருதல்போல்கொடுக்கும் பண்பதுவேமத்திபமாம்
வருடமெல்லாம்பாடுபட்டால்வாழையொருவிசைதான்
தரும்பலன்போல்கொடுக்குந் தர்மமுமேயதர்மமுமாம்
தெண்டனையில்லாவேலை சேயரில்லாமனைவி
கொண்டவர்க்குளடங்காக் கொம்பனையாளில்வாழ்க்கை

வண்டரிணக்கம் வறுமைதனிற்சேர்க்கும்
மண்டலத்திலிவ்வைந்தும் வளந்தரவுமாட்டாதே
மாரிகாணுதபயிர் மக்களில்லாயில்வாழ்க்கை
ஏரிகுளம்இல்லாவூர் இரவிகாணுவனசம்
அன்னைகாணுதபிள்ளை ஆவினைக்காணுதகன்று
பொன்னிப்பூஷணங்கள் போசனமுண்ணுதவுடல்
காவுகாணுதவண்டு கலைகள்காணுக்குமரன்
மேவுகொழுனனில்லா மெல்லியர்களானவரும்
தோழர்காணுநேசர் சோடுகாணுப்பேடு
மீனுமதிகாணுத வெண்குமுதமானதுவும்
பெரியோரில்லாதசபை பெண்கள்தனில்மூத்தாள்
உரியதியாகியில்லா வூர்பதினேழாம்இவைகள்
தாழ்வுதருமல்லாது சாந்தவளமாகாது
வாழ்வுகாணுவிளமை வாருகுமென்றிடுவார் [தாம்
நல்லோர்க்குச்செய்தநன்றி நாட்டிவைத்தகையெழுத்
பொல்லார்க்குசெய்தநன்றி பொய்கையுறுநீரெழுத்தாம்
சுற்றமுண்ணுயில்வாழ்வுஞ் சுதியில்லான்பாடுவதும்
கற்றறியான்பாடுகவி கைம்பெண்ணிலேயழகும்
துற்குணப்பெண்சாதி சொற்கேளாதவடிமை
மிக்கவிவையாறும் வீணுய்ப்பலனிலையே
ஊமைசெவிடருக் குறைத்தவுபதேசம்
சேமமென்றுபாவிகட்குச் செய்தவுபகாரம்
மேதுமுவர் நிலத்தில் விதைத்ததொருநல்விதையும்
சாலயிவைமூன்றுற்றுத் தண்ணீரிற்கரைத்தபுளி
குதிரைக்குருவுத்தன் கூறுவிதப்புலவன்
சதிரானவாயுதங்கள் தனக்குச்சிலம்பியுமாம்
வேசைக்குநட்டுவனும் விளங்குபலராகமதற்
காசையாய்ப்பாடுபவனு மைவருந்தானில்லாவிட்டால்
ஏத்தமுடன்மதிலி லெழுதிவைத்தபெண்ணழகை
பார்த்துமகிழ்ந்துபோம் பண்பாம்பயனிலையே
தேவாலயஞ்சுற்றித் திரும்பாததாள்தாளோ
தேவதரிசனங்கள் செய்யாதகண்கள்கண்ணோ
பகவான்தியானமதைப் பண்ணுதசிந்தையென்ன
ஜெகமீதுபகவானைச் சேவியாச்செங்கையென்ன
சிவன்மாலையுந்துதிகள் செய்யாதவாயென்ன

சிவன்மாலையும்வணங்காச் சென்னியுமேசென்னியதோ
தினமும்புராணகதை கேளாததென்னசெவி
மூனையானபுண்யநதி மூள்காததென்னவுடல்
மேவும்இவையெட்டும் இல்லாதோன்பாழ்ஜெனனம்
பாவியிவனிருந்தும் பலனில்லைவீண்பிறப்பாம்
ஞானமறிதல்கொடை யாளிதனவானாய்
ஆனதொருபூவலஞ்செய் வானாகிவிவேகியுமாய்
மிக்கதொருவித்துவான் விளங்குகின்றகீர்த்திவான்
உக்ராணவீரன் உபகாரியாவருக்கும்
இவ்வகையிலோர்பே ரெடுக்காதசென்மமவன்
இவ்வுலகிலேமனித னென்றவனைசொல்லவொண்ணு
சீர்படைத்தஓர்மனுஷச் சென்மமொருயோசனைக்குள்
பேர்யெடுக்காப்பேர்மனுஷப் பிறப்பிற்கழுதையுமாம்

[லோபத்தனம்]

தேன்றுளியொன்றூற்கடலைத் தித்திக்கச்செய்தாலும்
மேன்மையுடன்மலையை மெழுகாகச்செய்தாலும்
பூவினால்வச்சிரத்தைப் பேர்த்துத்துளைத்தாலும்
மேவுங்கபடருக்கு மெய்ஞ்ஞானம்வந்தாலும்
ஊமைபடித்திடினும் ஊக்கம்இல்லாப்பேடிக்கு
தாமோதரன்வீர்ய தைரியமுண்டாயிடினும்
நித்தங்கயவருக்கு நீதிமுறைவந்தாலும்
இத்தலத்தில்லோபர்களுக் கீகைசற்றும்வாராதே
தின்னுமலுண்ணுமற் றேடிமிகச்சேர்த்து [பொருள்
புண்ணியமுஞ்செய்யாமற் புதைத்துவைக்குமுலுத்தர்
தெண்டம்பெரும்பிணிக்கும் தீக்குந்திருடருக்கும்
வண்டமனைவேசைகட்கும் வலுவந்தக்காரருக்கும்
இதம்இல்லாப்பேடிகட்கு மெல்லாப்பிசாசுகட்கும்
உதவுமேயீயா வுலுத்தர்பொருளதுதான்
ஆகாபதரெனினும் அரியவிபூதிவிளக்கும்
வாகாம்பழஞ்சுவரு மாடுரிஞ்சிமுள்மரமாம்
மாடுகடாவதுவும் வையகத்திலேயுழவாம்
கூடப்பொதிசுமக்குங் கூடிவருமேயதனால்
செத்தபிணமானாலுஞ் சிறிதுவுபகாரமுண்டு
புற்றதுவுமண்ணாகும் பொங்கரவுக்கேமனையாம்

கல்லாலேயாலயங்கள் கனத்தபணிதியுண்டு
அல்லற்கழுதையென்றால் அழுக்குப்பொதிசுமக்கும்
வாறுகோலாலு மாளிகையெல்லாம்விளக்கும்
பேராய்க்குரங்கு பிடித்தார்க்குதவிசெய்யும்
ஈயாதலோபிகளா லெவர்க்குமுபகாரம்
வாயாதவர்கொடுக்க மாட்டாரொருநாளும்
நெல்லின்பதரென்ன நீரினிலேபாசியென்ன
நல்லமரத்தில்மொக்கு நன்றாயிருந்துமென்ன
சீதேவியாருடனே சீர்கோடியானதொரு
மூதேவிதான்பிறந்து முக்கியமுண்டோவதனால்
தயவாயொருவயிற்றில் சார்ந்தவிவேகியுடன்
கயவர்பிறந்துமென்ன காரியமெல்லாஞ்சிதையும்
உச்சிதமாயார்க்கும் உதவியில்லாதார்வாழ்க்கை
நச்சுமரம்பழுத்து நடுவூரில்நிற்பதொக்கும்
செத்தபிணமதனைச் சிங்காரித்தாவதென்ன
கைத்தலத்திலேயிழுத்துக் காட்டிலேபோட்டுமென்ன
நாயானதுகொழுத்தால் நாட்டிலதையார்புசிப்பார்
ஈயாதலோபியர்க்கு எல்லாம்இருந்துவென்ன
ஈயாதமாந்த ரிருந்தென்னிறந்துமென்ன
ஆகையால்மிருக மதனிலேசேர்க்கவென்றார்

[இகழ்ச்சியீனம்]

கற்பனையில்லாத கவிதனையேகேட்பதுவும்
விற்பனமில்லாரிடத்தில் வேண்டுங்கொடைபலவும்
ஆதரவில்லாபெண்டீ ரருமையில்லாச்சேவகமும்
பேதமின்றிப்பேர்விளங்காப் பிள்ளைதனைப்பெற்றதுவும்
ஊழின்வினையு முதிர்கொடுமையல்லாமல்
வாழ்வல்லவீரைந்தும் வகையாகுங்கண்டீரே
நீர்நுழையாவிடத்தில் நெய்நுழையுய்நெய்நுழையாச்
சார்பிலேபால்நுழையுந் தானதுபோகாவிடத்தில்
மீறிப்புகைநுழையும் வெம்புகைபோகாவிடத்தில்
தரித்திரனுமது தன்னில்நுழைவானும்
தக்கதராதரங்கள் தானறியாப்பேரிடத்தில்
மிக்கவிருந்துண்பதிலு மோடெடுத்திரத்தல்நன்று
தூயவறிவில்லாச் சுதரைப்பெறுவதிலும்

பேயதனைப்பிள்ளையாய்ப் பெற்றுவளர்த்தல்நன்று
உள்ளன்பிலார்களுடனட்புகொள்வதிலும்
கள்ளுண்ணும்வம்பர் கழுதைதனைமேய்த்தல்நன்று

[வெளியிடக்கூடாதவை]

ஆசானுபதேச மரிவையர்கள்புணர்ச்சி
மாசானசோரம் மனதடக்கமுற்றபொருள்
மானம்பிறர்மான மறந்துடனே தான்கொடுத்தல்
தானுமகத்திருக்குந் தானத்தினால்விளையும்
இல்லறத்தின்சேவகர்கள் யாவரிடமீதுபத்துஞ்
சொல்லவொண்ணாதீனமென சொன்னார்மநுநூலோர்
தன்னகத்தாளன்றி மறுதாரமேலாசையுற்றால்
பின்னொருவர்தாரமது பெண்டீரைச்சேராரோ
பறையன்பறையனல்ல பகர்ந்தமொழிதப்பிதமாய்
வறையோன்பறையனென்று பகர்ந்தாரேமுந்நூலோர்
ஞானமுற்றசற்குண நாளுமில்லான்கற்றகல்வி
ஈனப்பறையர்வீட்டி லிருக்குங்கங்காசலமாம்
தண்ணீரின்நன்மை தரையுவற்றினால் அழியும்
பெண்ணோர்கள்நன்மை பிறர்கமனத்தால்அழியும்
கோதில்லாமாதவங் கோபத்தினால் அழியும்
வேதகுலநன்மை விபசாரத்தால்அழியும்
மன்னவர்கள்நன்மை மநுநீதியால்அழியும்
இந்நிலத்திலுத்தமர்கள் யாவர்களுஞ்செய்தநன்றி
பொல்லாததன்னகத்துப் பெண்ணால் அழியுமென்று
நல்லோர்கள்முன்னால் நன்றாயுரைத்தனரே
பருவதமும்பாற்கடலும் பார்வதியும்லட்சுமியும்
அரிதாய்ப்பிறந்திடத்தில் அரியானும்வாழ்வதுபோல்
பூமியிலேதங்கள்மனைப் பெண்ணாள்பிறந்தவிடம்
மாமியார்வீடே வளமென்றுரைப்பார்கள்

[கேடு]

காவலர்கள்யானை கெடுப்பதுவுமேயடங்கா
நாமமிகுகோபமுடன் நமதுரைகேளாவடிமை
ஆதாயமின்றி அதிகச்செலவுகளும்
காதாரக்கேளாச்சொல் கவியில்மிச்சங்கண்டெழுதும்

சாட்சிமிஞ்சும்வழக்குத் தயிரியமிஞ்சுங்கவலை
பேச்சில்சரசமிஞ்சிப் பேசும்பரிகாசமுமாம்
பத்தாவின்சொற்கடங்காப் பாவைதனைப்பெண்டாக
வைத்தான்படுந்துக்க மதனைவிட துன்பமுமாம்
ஓரவிகாரமா யுயர்ந்தோர்க்குச்சொன்னவர்கள்
ஊரழியுமேசுமக்க உலகமது நடுங்கும்
உப்பிட்டபாண்டமிலை யுதிர்ந்தமரம்போலாம்
ஒப்பில்லாவாழ்வும்போ மூற்றோர்பெற்றோர்பாழாம்
மாதேவியான மலர்மாதகன்றிடுவாள்
மூதேவிசேர்வாள் முடிவில்நரகமெய்தும்
என்னேரஞ்சண்டையு மட்டில்லாச்சிரிப்பதுவும்
சின்னஞ்சிறியாரிணக்கந் தீராக்கொடுங்கோபம்
வேசையுறவும் விவேகமில்லாரிடத்தில்
ஆசராய்ச்சேவகங்க ளாறுமிவைகேடெய்தும்
தேடாப்பொருளழித்தல் தீராதகோபம்ரண்டும்
கேடாய்முடியுமல்லால் கீர்த்திசற்றும்வாராதே
ஞானந்தனங்கல்வி நாடிவருங்கால்
மானூர்மேலாசைதரும் வாழ்வும்போந்துக்கமுமாம்
எந்நன்றியைமறந்தார்க் கெவ்வாறுமுய்வுண்டாம்
மனமறிந்துசெய்தநன்றி மறந்தார்க்கீடேற்றமில்லை
இமிசைப்பட்டாற்று தேழையமுதகண்ணீர்
வமிசத்தைத்தேய்க்கும் மரமுங்கூர்வாளெனலாம்
தீங்கானவாங்காரஞ் செல்லுமிடமானதன்றி
தாங்காவிடஞ்செலுத்தல் தப்பாமற்கேடுவரும்
தாழ்ந்தாருயர்ந்தார் சரியாமெனவறிவால்
ஆய்நதுமரியாதைசெய்யா தாராகிற்கேடுவரும்
சரியானபேரையன்றித் தன்னிலதிகபல
பெரியோருடனெதிர்த்தாற் பிராணபயமுண்டாகும்
இத்தலத்தில்யாரொருவர்க் கெந்நாளுமுற்பாதம்
புத்திப்பிரதானமாய் பொல்லாங்குசெய்பவர்கள்
புத்திரர்களில்லாமற் போவதுவுமல்லாமல்
அர்த்ததரித்திரர் அற்பாயுசாவார்கள்
ஏற்கையுடனிவரு மேதேதுகாரியமும்
தீர்க்கவிசாரணைகள் செய்யாரேயாமாகில்
பின்னாலேதுன்பம் பிணக்குமிகவுண்டாகும்

அந்நாளேகிரியினால் அலைந்துகுடிகெட்டதொக்கும்
சத்ராதிசொல்லைத் தாந்தாம்நினைப்பவரும்
உற்றமனையாட்டிக் குண்மையுரைப்பவரும்
கொடுத்தகடன்கேட்டால் கோபங்களுற்றவரும்
எடுப்பாய்பெரியோரை யெண்ணுமற்பேசினவர்
பெரியதனம்வந்தவுடன் பின்முன்னும்பாராமல்
இருவிழியாற்சற்று மேறிட்டுப்பாராதார்
இனியபரிதானத்தி லிச்சைவைத்தேயொருவர்க்
கனியாயஞ்செய்துபொல்லா வவதிவரச்செய்தவர்கள்
பரிதனைவிட்டுப் பரத்தையர்மேலாசைவைத்த
பேரெழுவருங்கயவர் பேய்நாய்ப்பிறப்பாகும்
கூடிப்பிரிவதனால் கொடியசூதாடுகையாற்
கேடுவருமிதற்குக் கெணிதமில்லையென்றனரே
கண்ணினாற்காண்பதுவுங் காதினாற்கேட்பதுவும்
திண்ணமுடன்முன்பின்னாய்ச் செப்பினாற்கேடுவரும்
பெற்றதன்னைஸ்வரியப் பெருமையாற்கிளைகூட்ட
மற்றும்பயமிழித லாலுமகிழ்ச்சியினால்
ஏர்க்குமெளியோர்கள் முதல்யாவரையுந்தூஷணித்தல்
தீர்க்கமிதுகேடுவருந் திண்ணமுடன்வள்ளுவனார்
நெஞ்சிற்பயமதுதா னேரிடயாவரையும்
அஞ்சவஞ்சச்செய்தா லவர்க்குக்கேடுவரும்
தினையளவுநன்றிமுன்னஞ் செய்தாரேயாமாகில்
அணிப்போதிலுமறக்க லாகாதுதான்மறந்தால் [தால்
அந்தணர்க்குங்கோவுகட்கு மடாதுபொல்லாங்குசெய்
நிந்தனையும்வந்தவர்க்கு நேரிடுமென்றேயுரைத்தார்
ஆவலுடன்தன்பிழைப்புக் காகவொருவருக்குத்
தீவினைகளெவ்வளவுஞ் செய்வாரேயாமாகில்
நீண்டதொருதன்னிழல்தா னின்றடியிலாவதுபோல்
ஆண்டுநூறானாலு மவரைவிட்டுப்போகாது
முன்னிலதிக மிடிமையதுவுண்டாகும்
பின்னாலேழுவேழ் பிறப்புவிட்டுப்போகாது
செய்ததொருதீவினைதான் செய்தார்கட்கெப்போது
மெய்துமென்றுசொல்லி விளம்பினார்வள்ளுவரும்

[அரிது]

அரிதரிதுமானிடர்க ளாகப்பிறப்பதுதான்
உரியதொருகூன்குருடு ஊமைசெவிடுபேடும்
நீக்கிப்பிறக்கரிது நோய்ப்பிறந்தாலும்
தீர்க்கமுற்றஞானஞ் சிறந்தகல்விநற்குணங்கள்
வாராதரிதரிது வந்தாலுந்தானதர்மம்
நோராதரிதரிது நெஞ்சிற்றரித்தாக்கால்
நீனிலத்திற்குன்றுமல் நெடுநாளும்வாழ்வுபெற்று
வானவர்கோன்றன்பதமும் வருமென்றுரைத்தனரே

[இனிது]

இனிதினிதுயேகாந்த மினிதினிதாமன்பருள்ளம்
இனிதினிதுகாணக்கண் ணேதுங்கேளாச்செவியே

[கொடிது]

கொடிதுகொடிதென்பதுதான் குவலயத்திலேவறுமை
இடருமதிற்கொடிது இளமையிலேவறுமை
அதிற்கொடியதாமருந்தி லகலாதவெல்வியநோய்
அதினிற்பெருங்கொடிது அன்பில்லாத்தம்பியுமாம்
அதினில்மகாகொடிது அடங்காதபெண்சாதி
அதினிற்கொடிதுண் டவளோடுறங்குவதே

[பெரிது]

பெரிதுபெரிதிந்தப் பேருலகுநான்முகன்றன்
வாரியப்படைப்பா மவன்மால்வயிற்றுதித்தோன்
மாலோகடல்துயின்றான் வாரிகுறுமுனிவன்
பாலொடுக்கமாமுனிவன் பண்டொடுக்கங்கும்பமதில்
கும்பமேபூமியதிற் குள்ளாம்பொடிமண்ணும்
தம்பமொருபூமியாந் தலைப்பாரஞ்சேடனுக்கு
சேடனுமையாள் சிறுவிரலிலாழியாம்
ஈடில்லாவுமையா ளிறையவர்க்குள்ளொடுக்கம்
தொண்டர்கடங்களிடத் தொடுக்கமிறைவன்றான்
தொண்டர்பெருமைதனைச் சொல்லமுடியாததுவாம்

[முக்கிய முள்ளது]

தலத்தினிற்சிதம்பரமாந் தாருவினிற்சந்தானம்
பிலத்திலேமாருதமாம் பிரணவமாமந்திரத்தில்

வேதத்தில்சாமம் விரதமேகாதசியாம்
மாதத்தில்மார்கழியா மலேதனிலேமாமேரு
நிலத்திலேகாஷ்மீரம் ரிஷிகளிலேவதிஷ்டர்
குலத்தில்மறையோராங் குதிரையிலுச்சிரவணம்
வாரத்திலாதித்த வாரமந்தகான்மீனில்
பேரிற்றிருவாதிரையாம் பெருமுனியும்நாரதனும்
தனத்திற்குபேரன் தானமேநிதானமுமாம்
மனுக்களிலேராசாக்கள் வாரியிலேபாற்கடலாம்
மேகத்திற்புட்கரமாம் விலங்குகளிற்சிங்கமுமாம்
யாகந்தனிற்சிரேஷ்ட மசுவமேதயாகமென்பார்
மாமணியில்மாணிக்க மலரிலேபத்மமலர்
காமதேனுப்பசுவில் கங்கைநதியாம்நதியில்
தமிழிலகத்தியராந் தந்தியிலைராவதமாம்
தமணியமாம்லோகத்தில் தானியத்தில்செந்நெல்லாம்
பட்சிகளிலேயுவணன் பாம்பிலேவாசுகியாம்
மச்சத்திலேமகரம் வடிவழகிலேரதியாம்
கற்பிலருந்ததியாங் கபிலராஞ்சித்தர்களில்
செப்புகின்றவாக்கில் ஸ்ரீராமச்சந்திரனும்
அசுரர்குலத்திற்பிரக லாதனனேயுத்தமனும்
வசியமுறுபடையில் வச்சிராயுதமாகும்
சங்கீதத்தில்பாஞ்சசன்யஞ் சந்திரனுங்கிரகந்தில்
தங்கும்பதவியிலே சாயுச்சியமாகும்
போகத்திலிந்திரனும் புஷ்பகேதநன்மலரில்
வாகொத்தவில்திறத்தன் வாழ்விலேமைந்தர்களாம்
உடையிலேபட்டாடை யுக்தியிலேயூகிமந்திரி
கொடையிலேதானகர்னன் குணமூன்றில்சாத்மீகம்
மன்னும்புராணத்தில் மாபாரதமாகும்
துன்னுஞ்சுடரொளியில் சூரியனேமேலொளியாம்
ஆடுமீனிராறி லதகந்துலாமாகும்
வாடாதேநுண்ணிய நூல் வள்ளுவனூர்சொற்குறளாம்
சுவையாறிலேலவணந் துணைவரிலிலக்குமணன்
சிவமணியிலக்குவடந் தேசத்தில்சோழதேசம்
பொறுமையிலேபூதேவி போரிலேராவணனும்
திருமாலாம்ராகவனுஞ் செய்தபோரேயதிகம்
ஓசையிலிடியேறு ஊரிலயோத்தியதாம்

ராசரிலேசாதி ராஜனும்விக்கிரமன்
அன்பாகச்சொன்னவிந்த வறுபத்துநான்குபேர்
முன்பாமுதன்மையென்று முன்னோர்மொழிந்தனரே

[கொடுமையால் அழிந்தவர்கள்]

தக்கவிரணியனுஞ் சக்கிரவர்த்தியாம்நிதியும்
மிக்கானவாகுலங்கள் மேனாளில்நகுலன்
பந்தமுறுகின்றசிசு பாலனறுவர்களும்
நிபந்தனையினாலே நிர்மூலமானார்கள்
கஞ்சன்துரியோதனனுங் காளமுனிவன்சகுனி
வஞ்சகஞ்செய்வாதாவி மாரீசனுங்கவந்தன்
பூதகியசோமுகியும் பொல்லாதசூர்ப்பனகி
வாதுபுரிதந்த வக்கிரனுமென்பவனும்
சகடனுடவில்வலனுஞ் சலேந்தியமகாசூரன்
விகடன்பிரலம்பன் மேனாளதாசூரன்
மஞ்சுகொடியோரா மிவர்கள்பதினெழுவர்
வஞ்சகத்தினாலிவர்கள் வம்மிசத்தோடேயழிந்தார்
சூரனுடன்தாரகனுந் தூர்ப்பானுகோபனுடன்
வீரமிகுசிங்கமுகன் மின்னாளேயோமுகமும்
தீயராமந்தத் திரிபுராளயனவரும்
மாயமதுகைடவர்கள் மாபாவிதுந்துமியும்
மாசுசுமாலியுடன் மகிடாசூரன்சம்பரன்
காலகேயநிவாத கவசருடன்தாடகையும்
இடும்பன்பகாசூர னிரணியாட்சனென்போன்
கடுங்கோபச்சத்ராள் காலகெதியாலழிந்தார்

[தாசியங்கம்]

புருவநெறியாமல்விழி புரளாமலேவெளியில்
தெரியாமலேயங்கச் சேட்டைகளுஞ்செய்யாமல்
அணுவளவுந்தலையை யசைக்காமலேமிடறு
தனில்பிறழாமல்சுருதி தந்திலயக்கியானம்
நீதியாய்த்தொனிவீணை நேராயதிற்றந்தி
நாதமிட்டுஓசை யிரண்டும்சரிபாகம்
அமுர்தசராதாளி யாய்மதுரசங்கீதம்
நவரசமாய்ப்பாடுமவள் தாசிமகள்தாசியென்பார்

காயமேல்விழியுமுயர் கண்மேல்மனமும்வைத்துக்
காயலபினயமுங் காட்டுமவளேபாதம்
பாதாளச்சுருதியங்கம் பாங்காகவேசெய்து
வாதாளஞ்செய்பவளே மத்தடியாமென்றிடலாம்
பலராககீதங்கள் பாங்கானதாளங்கள்
நலமாகப்பாடுமவன் நல்லதொருபாடகனும்
தாளத்திலேநினைவு தரித்துநடனமிடும்
வாளுற்றசம்பரத மறுவானநட்டுவனும்
தாளலயமார்க்கந் தப்பாமலிங்கிதமாய்
வீணும்பகைச்சேவை விழைவோன்பரிசனனும் [ல்
வேசையர்தம்மில்லம்விட்டு மேல்விடமுஞ்சென்றுக்கா
காசுபணமற்பமாய்க் கணிசங்குலைத்துவிடும்

[வேசையர்கள் வரலாறு]

மிக்கவிலைமாதர் வீடுசந்தைக்கடையாம்
பக்கல்பொதுவம்பலமாம் படுக்கைவீடென்பதுதான்
சந்தியிற்பாய்மெத்தையாந் தண்ணீர்ப்பந்தலதாம்
பந்தமுறுதேகம் படித்துறையதென்றிடலாம்
சூதாடுசோலைதுகில் துடைகள்தண்ணீர்ப்பந்தல்
மீதிலேகட்டிவைத்த மிக்ககதலிமரம்
மையாடுங்கண்ணியவள் வாரணிந்தகொங்கைரெண்டும்
கையாடும்பந்து கடையெலுமிச்சம்பழமாம்
பாசமுறுசெவ்வாய் படிகமதுக்கொப்பாகும்
ஏகுதவள்மோகமது எட்டிக்கனியெனலாம்
பாசமுடனிவ்வாறு பாங்குடையார்தீங்குபுரி [யல்ல
வேசையர்மேலாசைகொள்ளல் மேலவர்க்குமேன்மை

[பெண்களால் பங்கமடைந்தவர்]

சந்திரனுமிந்திரனுந் தன்னுடலிற்பங்கமுற்றார்
சந்ததஞ்சேர்வாலி சகடாசூரன்கீசகனும்
எண்ணரியவாழ்வுடைய இராவணனென்பவனும்
பெண்ணாலேபங்கமுற்றுப் பிராணலயமானார்கள்
சந்தோபசுந்தரென்னுஞ் சூரிருவர்களும்
அந்தமிகுமோகினிமே லாசைகொண்டுமாண்டார்கள்
வையகத்திலொப்பில்லா மயிலுமெழில்சேர

தையலரைக்கண்டால் சவுரியமும் நில்லாது
மாஞர்குணங்குறியில் வாறேதெரியாமல்
தானவர்மேல்மோகித்தால் தப்பாமல்துன்பம்வரும்

[புருஷன் வாக்கிய பரிபாலனஞ் செய்தவர்]

ஆதியருந்ததிமின் ஞளுங்கவுகிகையுஞ்
சாதுகுணச்சாலே சந்திரவதியென்பவளும்
உத்தமியில்மிக்காக வோதுநளாங்கினியும்
பத்தாவின்வாக்கிய பரிபாலனமேசெய்தவராம்

[நான்கு யுகத்திலும் யமனுேர்]

கிரேதாயுகத்தில் கெடுகாலிரே ணுகையாம்
திரேதாயுகத்தினிலே சீதையெனும்பெண்ணுகும்
துன்னுதுவாபாத்தில் துரோபதைக்கூற்றுவனும்
இந்நாள்கலியுகத்தில் இல்லைமெலாங்கூற்றுப்பெண்

[பெண்களுக்குச் சுவா தீனமில்லையெனல்]

பெற்றேூர்கள்பேதையிலும் பின்பருவத்தில்புருஷன்
மற்றுவருமூப்பினிலே மைந்தர்களேகாப்பவராம்
மூக்காலும்பெண்ணுக்கு முயற்சிஒன்றுமில்லாததால்
மிக்கானபெண்சென்மம் வீண்சென்மமாகுமென்முர்
புருடனேதெய்வமென்று போற்றுகின்றகற்புடையா
ளரிதானவாண்சென்மத் ததிகமென்றுசொல்லினரே
பத்தாவேதெய்வமென்று பணிந்தேற்றுங்கற்புடையா
ளூற்றமழைபெய்யென் றுரைத்தாலுமாரிபெய்யும்

[பெண்கள் வரலாறு]

மெத்தவழகுடனே மேன்மையுள்ளமின்ளுளோர்
புத்திரனைப்பெற்றவன்றே போமழகுமேன்மைகளும்
மேலானகன்னியர்கள் விரகத்திலேயழுந்திக்
கோலமெல்லாஞ்சீரழிந்து குரங்காகப்பேருமில்லை
சதிராய்த்தன்னில்லம்விட்டு தனிவழிபோமின்னூர்க்கு
பதிவிரதாதர்மமில்லை பங்கம்வந்துநேரிடுமாம்
சரசகுணமில்லாத தையலரைச்சேர்வதிலும்
விரைவாகச்சந்நியாச வேஷமுதல்நன்ருகும் [லும்
அன்பில்லாப்பெண்ணின்மே லாசைகொண்டுசேர்வதி

முன்பாகச்சற்குணப்பெண் முகங்கண்டாற்போதாதோ
பேரிளம்பெண்கள்பல பேர்களைச்சேர்வதிலும்
காரிகையாம்வாலையொரு கன்னிதனைச்சேர்தல்நன்று
துற்கந்தம்வீசுமுடல் தோகையரைச்சேர்வதிலும்
நற்கந்தம்வீசுமுடல் நாரியரைக்காணல்நன்றும்
பெண்ணொருத்திபேசினாற் பேருலகமும்நடுங்கும்
பெண்ணிருவர்பேசினாற் பெருவானின்மீனுதிரும்
அலைவாரியுஞ்சுவறு மாயிழையாமூவருக்கும்
பலபேர்தான்கூடியென்ன பாடுபடுமோபூமி
ஆசைகொண்டால்போலே யபினயித்துமேல்விழுந்து
பேசுகின்றவஞ்சப் பிரியமறியாமல்
அன்பில்லாவேசைநமக் கன்புள்ளாளென்றெண்ணி
நம்பினவரெல்லாம் நாயினுங்கீழாவார்

[கர்மகாண்டம்]

பூதலத்தோர்க்காகப் பொதிகைமுனிநாதனுமுன்
காதலுற்றுசொன்னகர்ம காண்டத்தியல்புசொல்வாம்
சமயமில்லாதார்க்குச் சமயமாகாநோயும்
கர்மவியாதிவந்த காரணத்தைச்சொல்லுகிறேன்
செய்புவுருவழித்தல் சீவசெந்தைவதைத்தல்
வைதுதந்தைதாயை மனம்நோகவேபேசல்
தந்தவனமழித்தல் நாதாக்களைப்பழித்தல்
நந்தவனத்தில்மல ராதவரும்பூகொய்தல்
திட்டமுடனிப்பாவஞ் செய்தகொடியோர்க்கு
குட்டநோய்வந்து கொடுமைசெய்யுமென்றனரே
நாகமுடனூர்வனவு நல்லபறவைபட்சி
சாகவேகொன்ற சண்டாளரானவர்க்கு
குதிலாவலிக்கைவலி குமரகண்டன்முசலி
சதிராகவேவந்து சாறுமெனவிசைத்தார்
உத்தமரைப்பழித்து உதாசனங்கள்பேசுவதும்
பத்தர்சித்தர்முத்தர்களைப் பழித்துத்திரிவதினால்
ஆதிசிவநலங்க ளானதனைப்பழித்து
கோபப்படச்சினந்து கொடுங்கோபம்செய்வதினால்
கற்புடையமின்னார்மேற் காதலதுகொண்டதினால்
தப்பிதமாய்ப்பித்தந் தலைக்கேறியேபிதற்றி

பண்பாய்பலகிரி பளனெட்டுமெய்துமென்று
முன்பாகதட்சணு மூர்த்திமொழிந்தனரே
பச்சைமரங்கள் தனைப் பட்டைவெட்டியேயுரித்தும்
மிச்சந்தளிர்கொழுந்து வேர்முதலாய்வெட்டுவதும்
குளிர்ந்தமரத்திலேக்காய் கொம்புதனை முறித்தல்
அருந்தமலராப்பூவை யனவரதங்கிள்ளினதால்
மண்டைக்கரப்பன் வாயுவொருதலேநோய்
மண்டையிலேகுத்து மகத்தானபீனிசங்கள்
மாருகக்கபாலத்தின் வாய்வானநோய்தானும்
வீருய்வந்தெய்துமென்று விளம்பினுர்மாமுனிவர்
வித்தானதையழித்து மேலுமிதைத்தின்றதினல்
பக்தியுடன்கன்றுக்குப் பால்விடாதோஷமதால்
பாலகரைப்பழித்துப் பால்கொடாத்தோஷமதால்
சாலயிளம்பயிர்கள் தன்னேயழித்ததினுல்
மானுர்க்குக்கெர்ப்பநோய் வருமவர்க்குமைந்தரில்லே
ஆனுலிப்பாவிகள்தா னந்தரங்கஞ்சொல்லவொண்ணு
சூரியனேத்தோத்தரியாத் தோஷமதனுலும்
நீரிலுயிரைப்பிடித்து நெருப்பிலிட்டுச்சுட்டதினுல்
மடிப்பாய்ப்பிராணிகளே மாளவேசெய்வதினுல்
துடிக்கவுயிரோடதனைச் சுடுமணலிற்போடுவதால்
நல்லநிழல்மரத்தை நாருரித்துக்கொண்டதினுல்
வல்லமையாய்ப்பச்சை மரங்கள்தனைவெட்டினதால்
பசித்தோரிருக்கவதைப் பாராமலுண்டதினுல்
நிசமாய்ச்சுரதோஷம் நேருமென்றேயுரைத்தார்
மாதாபிதாவை மனம்நோகச்செய்ததினுல்
வேதாந்தசற்குருவை மெய்நோகவைத்ததினுல்
வீம்பானபேச்சுகளும் விசுவாசபாதகமும்
நாம்பெரியோரென்று நல்லோரையும்பழித்தல்
தெய்வநிலேயழித்தோர் தினந்தினமும்பொய்புகன்ருேர்
வையகத்திற்பாண்டுநோய் வந்தேமெலிந்திடுவார்
ஊனுனதைத்தின்ன உயிர்வதைகள்செய்வதினுல்
மானுகன்கற்பழித்துப்பூ மரங்கள்தனைவெட்டினதால்
புண்ணியந்தான்செய்யாமல் புண்ணியர்களேக்கெடுத்து
தண்ணீர்குளமேரி தன்னேப்புதைத்துவிட்டும்
நிறப்பதளப்பதுவும் நிறைகள்குறையவிற்றும்

மாறுபட நீரில் மலமூத்திரங்கள்விட்டும்
துராகதமாயிவ்வாறு துன்பங்கள்செய்திடுவோர்
கிராணிக்கழிச்சல்வந்து கெடுவாரெனவுரைத்தார்
பொல்லாக்கடுங்கோபர் பொய்யேமிகுத்துரையும்
சொல்லுவதைமறுத்துத் தூஷணித்துப்பேசுபவர்
உண்டுமிகப்பேச்சுகளால் ஊராரைவைதவர்க்கும் [கும்
திண்டுமிட்டாச்சிவசெந்தை நிகைக்கவேகொன்றவர்க்
கன்னத்திற்புத்து கண்டேசிலவிப்புருதி
கன்னத்திற்சூலை கடிதானபல்லரணை
தந்தரோகங்கள் சகிக்கரியாவாய்ப்புத்து
தந்தரோகஞ்சூலை தப்பாமல்வந்திடுமாம் [தால்
சற்குருவைத்துஷணித்தோர் தன்மையில்லாக்கோபத்
முக்கியஞ்சேர்ப்பாதையிலே முள்ளதனைப்போட்டவர்க்
பச்சைமரமதனைப் பங்கமுறவெட்டினவர்க்கும் [கும்
உச்சிதமாய்ப்பூவிலைகா யுதிரவடித்தவர்க்கும்
வண்டுகடிகரப்பன் மகத்தானகுட்டநோய்
என்றுமிவர்கட்குவந் தெய்துமென்ருர்மாமுனியும்
பத்தர்சிவபத்தர் பரமசிவயோகிகளை
சித்தங்கலங்கவே செய்தகொடும்பாவிகட்கும்
வில்லாலுமம்பாலும் வெடிமருந்துகுண்டாலும்
கல்லாலும்பொல்லாக் கபடத்தாற்சிவசெந்தை
கொன்றகொடும்பாவிகட்குக் கொடிதானமார்பாணி
கண்டமாலைபிளவை கழல்வாதம்வந்திடுமாம்
காங்கிசையாப்பெண்களைக் கவனித்துப்பார்த்தவர்க்கும்
ஏங்கியவர்போகத்தி லின்பமுற்றபாவிகட்கும்
மின்னுரைக்கண்டு விலகாமற்போனவர்க்கும்
பின்பவரைத்தூஷணமாய்ப் பேசிப்பழித்தவர்க்கும்
தப்பிதமாகப்பொய்ச் சத்தியங்கள்செய்தவர்க்கும்
மெய்ப்பானதெய்வத்தை மேவிநிந்தைசெய்தவர்க்கும்
பலதரம்உயிர்வதைகள் பண்ணுவதைக்கண்டிருந்தும்
விலக்காமல்பார்த்திருந்த வேட்டைநாயானவர்க்கும்
கண்ணில்வியாதிவருங் கண்ணொளிதான்மறையும்
தொண்ணூற்ருறுநோய் துடருமென்ருர்மாமுனியும்
பேருனதேதுமுயிர்ப் பிராணிதனைத்தான்பிடித்து
கூருகத்தூக்கிவைத்துக் கொன்றகொடும்பாவிகட்கும்

கோவதனைக்கொன்றவர்க் கொடிதானகண்ணிவைத்து
சீவசெந்தைநீர்துறையிற் சேதமேசெய்தவர்க்கும்
அலரும்பிராணிகளை அழுத்தியதனுடைய
தலையறுத்துமிக்ககுடல் தன்னையெடுத்தவர்க்கும்
ஈனமிரக்கமற்ற யிராட்சதரையொத்தவர்க்கும்
ஆனந்தவாயுவுவந் தமுக்குமெனக்குரைத்தார்
திருந்தவேமுற்பிறப்பிற் சேயிழைமார்தங்களுக்கு
மருந்திடுசெய்து மயக்கிக்கிழிந்தவர்போல்
மயலானபெண்போலே மறுசென்மத்திலெவரும்
சயரோகமாவெந்து சார்குவாளெனவுரைத்தார்
மார்க்கமதிநிற்கு மரங்கள்தனைவெட்டினவர்
பூக்கமழுநல்மரத்தின் புறக்கிளையைத்தானுரித்தோர்
வீணிலேபூடுகளை விருட்சங்களைமுறித்தோர்
ஊனுகின்றகால்முறித் தோடாமற்செய்தவர்கள்
தம்பமாய்ச்சீவசெந்தின் சங்கங்களையுடைத்தும்
கொம்புகளையொடித்துக் கொடும்பாவம்செய்தவர்க்கு
காசங்கள்வந்து வழங்காமற்கால்கைகள்
கூசலுடனளிருங் குளிரும்வருமென்றனரே
பலபேர்வயிறெரியப் பண்ணிவைத்தபாவிகட்கும்
நலஞ்சேர்பெரியோரை நடுநடுங்கிப்பேசினவர்க்கும்
மாறுமனக்கபடு வைத்துவெகுபேரை
சீரழிவுசெய்தவர்க்குஞ் சிலர்பசிக்கவுண்டவர்க்கும்
சண்டாளத்துவங்கள் சதாகாலஞ்செய்தவர்க்கும்
மிண்டானகுன்ம வியாதிவந்துசூழுமென்றுர்
பட்சிமிருகங்கள் பாம்புமுதலானதனை
மெச்சிப்பிடித்தடைத்தால் விலங்கவர்க்கேஎய்துமென்
சாலப்பலவுயிரைத் தண்ணீரினண்டுகளை [றுர்
காலைமுறித்தவர்க்குக் கால்கைமுடங்குமென்றுர்

(ஒப்பனையானவை]

வெடுக்கென்றசொல்லாரை மேலோரகத்தில்வைத்தால்
மடத்தையுங்கட்டியதில் வங்குரங்கைவைத்ததொப்பாம்
எண்ணுமல்வஞ்சக பெண்ணின்சொல்லை நிச்சயித்தால்
மண்குதிரைதனை நம்பி யாற்றினிற்சென்றதொக்கும்
ஆகாமியமுள்ளாரெனினு மறிவாளரைச்சேர்த்தால்

மகாமேருவைச்சேர்ந்த மானதனை நிகர்ப்பார்
தன்னவரேயானாலுஞ் சார்பறிந்துசேர்தல்நன்று
துன்னுசுடர்விளக் கெனினுந்தூண்டுகோல்வேணும்
கடவுள்விதிவெல்லக் கடவரெவராருமில்லை
மடலிலேயிட்டாக்கால் குடலிலேதங்காதே
நிலையாய்நிமலனடி நேர்ந்தார்க்குறையுளதோ
மலைமேலிருப்பவரை வந்துபன்றிபாய்ந்திடுமோ
பெரியோர்திருவுளந்தான் பேதித்தாலார்தீர்ப்பார்
கரிமலைசாய்ந்தால்மண் கட்டியதுதாங்கிடுமோ
கடந்தெவருஞ்செல்லாத காலம்வெல்லப்போகாது
உடைந்தசங்கில்சற்றுமொரு வோசைபரியாது
மட்டிகட்குநல்லபுத்தி வர்ணித்துச்சொன்னாலும்
இட்டமுற்றதன்குணம்போ யெய்தாது நற்குணந்தான்
கடையரால்மேலோர்க்குக் கருமங்கள்விழலாகும்
மூடப்பதுதண்ணீரில் மூக்கலத்தையமூக்கும்
வலியோரைச்சார்ந்தவர்கள் மற்றெவர்க்குமஞ்சுவரோ
மலையேதான்லெக்கானல் குருடனெய்யமாட்டானே
தலையானோரைச்சேர்ந்தால் தாழ்வில்லைதாழ்வுவந்தால்
புலிக்கடுமைபட்டுக் கறிக்காசைப்பட்டதொக்கும்
மெலிவாகிலுமேலோர் மேற்செயலேசெய்வார்கள்
புலிபசித்தாலெப்போதும் புல்லருந்தமாட்டாது
விற்பனமேலோர்கள் மெலிவாகிப்போகிலென்ன
குப்பையிலேபோட்டாலுங் குன்றிமணிமங்காதே
நேசருடன்பிறந்தோ ரிரண்டுபேர்வேறுபட்டால்
ஊசியிலேகப்பாகி நூல்நுழைபாவாருகும்
ஏற்காதவைசெய்தா லிகழ்ச்சியென்றுபோகாது
ஊர்வாயைமூட உலைமூடிதானும்உண்டோ
எட்டாக்கனியதனுக் காசைப்பட்டுமென்ன
தொட்டுகாட்டாவித்தை சொட்டுப்போட்டால்வருமோ
நாட்டுச்சுரைக்காய்கறிக்கு நாட்டிலுலெய்துமது
ஏட்டுச்சுரைக்காய்கறிக் கெய்தாதொருநாளும்
மாறுபாட்டுக்காரன் வாக்குநிசமென்றறிந்தால்
ஏறிவிட்டஏணிதனை யெடுத்துவிட்டவாருகும்
வாழ்வுடையோர்முன்னே வறுமையுற்றோர்சொல்நிலை
ஏழைசொல்லம்பலமே ஏருதுகண்டீரே [யா

கொடையாளியேவறுமைக் குள்ளாகிலுமீவன்
கடுகுசிறுத்தாலுங் காரமதுபோகாதே
விற்பனக்குருமூடன் மேலாம்பரமானால்
குப்பையுயர்ந்து கோபுரமும்தாழ்ந்ததொக்கும்
இட்டமுறவாழ்ந்தோர்க் கியல்புதப்புங்காலம்
கெட்டவர்க்குற்றார் கிளைதனிலுமில்லையில்லை [தல்
இணக்கமுடன் நல்லபுத்தி எவ்வளவுங்கேளார்க்குரைத்
பணத்துக்கோரம்புகொண்டு பாழிலெய்தவாறுகும்
காலிபயிர்தின்னுமற் காப்பதுவேவேலியுமாம்
வேலிபயிர்தின்றால் விளைவதொருபோதுமில்லை
நிலையானகாரியமும் நில்லாதுமந்திரத்தால்
கலைப்பார்கலைத்தாக்கால் மூலைப்பால்மருந்தல்லவோ

[கூடாவொழுக்கமகளிர்]

பார்ப்பளவில்திரும்பிப் பாராளுரைத்தமொழி
கேளான்மறுவிடைகளேதுமேசொல்லாளாம்
கள்ளன்போல்மற்கட்டிக் கவிழ்ந்தாலுமல்புரிவாள்
உள்ளன்புக்காரருடன்போயுஞ்சண்டைசெய்வாள்
ஆசையுடனுபரண மடைக்காய்முதல்கொடுத்தால்
நாடாள்புறங்கையி னலதனைத்தட்டுவளாம்
அங்கையாற்றெட்டா லாலரவம்போற்சீறி
கங்கைகெடப்பேசிச் சத்துருவைப்போல்பார்ப்பாள்
அயலாவுடனேவிளை யாடியேநாடுவளாம்
மயலாய்க்கணவன்பிடித்து மகிழ்ச்சியுறச்செய்தால்
மெய்யதிலேநோய்கள் மிகவெனவுந்தர்க்கமிட்டு
பொய்யாணையிட்டுப் புறங்காட்டியேபடுப்பாள்
முந்தியுறங்கிப்பெரு மூச்சுவிட்டுயெத்தனையோ
சந்தோஷம்சொன்னாலுஞ் சற்றேனுமேயிரங்காள்
ஆரிடத்திற்போடாவென்றவன்கொடுப்பதையெறிந்து
சீறிச்சினந்து தெய்வமேயென்றழுவாள்
நாடானதிற்பெண்கள் நான்குவகைச்சாதியிலும்
கூடாவொழுக்கங் குறையிதுவாமென்றனரே

[அன்புற்றமகளிர்]

ஆடவர்களென்னுளு மாசைகொண்டபெண்குறிப்புங்
கூடுமொழுக்கக் குறிப்பதனைச்சொல்லுகிறோம்

பலநாளுமாடவனைப் பார்த்தகண்ணுயிருப்பாள்
தலைவனவனைப்பார்க்கில் தலைகவிழ்ந்துமேசிரிப்பாள்
உள்ளன்புகாட்டா ளோங்கிபெருமூச்சுவிட்டு
தள்ளக்குழந்தை தனைத்தழுவிமுத்தமிட்டு
பாங்கியரைத்தழுவுவாள் பாங்கனைப்பார்த்துநகைத்து
பாங்காய்தலையசைத்துப் பல்லைக்கடித்திருக்கி
பிறரெவரையும்நிறுத்திப் பேசுவதுபோல்பேசிப்
பிறகால்போய்மூக்கைப் பிசைந்துதும்மல்தும்மி
தலைவனன்புவைத்தாலுந் தன்னுடன்பொய்யென்று
தலைவன்மொழிகேட்டுமவள் தன்தொழிலையுமகிழ்ந்து
ஆடவன்வீட்டுக் கடிக்கடிதான்போவதல்லால்
ஆடவனைக்கண்டா லறக்கணிசிநாணுதலும்
கொம்பனையார்க்குள்ளன்பு குறிப்பறிதலாகுமென்று
மூன்பாகநூல்களிலே முன்னோருரைத்தனரே

[பெண்களுடைய தத்துவம் பத்துக்கும் விபரம்]

மிக்கயிந்தநூலின் மேன்மைகுறிப்பறிய
தக்கதொருபெண் கள்பத்துதத்துவத்தைக்கூறுகிறோம்
பொன்னிறமுமல்லிகையின் பூமணமுந்தாமரையும்
வன்னமலர்முகமு மாசற்றவமுர்தமொழி
தனதானியவாழ்வுஞ் சார்ந்தசனசேகரமும்
இனமோடுவாழ்பவ ளிவள்தெய்வதத்துமாம்
இரக்கம்வணக்கம் இன்பமுறுதேகம்
சிறக்கவேதானதர்மந் தெய்வவிசுவாசம்
வன்கொலைகண்டஞ்சுமவள் மானிடருள்தத்துவமாம்
மூன்சொல்லும்நூலதனில் முறையிலுரைத்தனரே
நித்திரைமிகுத்தல் நெடுமூச்சுசோம்பல்களும்
மெத்தவேகொட்டாவி வீடெல்லாம்போய்த்திரிதல்
சுத்தமில்லாதேகஞ் சுசியில்லாப்போசனமும்
நத்துகின்றமின்னாள் நரகத்தத்துவமாகும்
ஆற்றில்குளத்தில் அலைகடலிலேமனையில்
ஏற்றமிகுபெண்களுட னென்றும்விளையாடமனம்
நாணமில்லாமையென் னுளுங்கொடுங்கோபம்
வானுதலாலேயியக்க மாதென்றுசொல்லுவதாம்
பரிமளசுகந்தாதி பகிரத்தினவாபரணம்

சரசசங்கீதவித்தை தன்னில்வெகுவிருப்பம்
சார்ந்தஇனமுந் தர்மசிந்தைகற்புடையாள்
காந்தர்வதத்துவத்தின் கன்னியென்றுசொல்லிடலாம்
வெட்கமில்லாமை மிகுந்தபலபோசனமும்
துற்கந்தவாசந் துடியானவார்த்தைகளும்
ஊட்டினசரீரம் உடையமுக்குமாமிசமு
மூட்டமுதுவுண்ணல் முறையில்லாதுயர்நடத்தை
நித்திரையிலாமையிவை நேர்ந்தபெண்ணுமேபேயின்
தத்துவமாமென்று சாற்றினார்முன்னோர்கள்
அக்கினிகண்ணும் அழகுசற்றுமில்லாமை
வக்கணையாயாடவரை வலியப்பிடித்திழுத்தல்
மாறுபாடானமன மல்லுகட்டிச்சண்டையிடும்
நாரியவள்தானே ராட்சதரின்தத்துவமாம்
ஆரிடத்திலானாலும் அன்புசற்றுமில்லாமை
மாறிமாறிப்பார்த்தல் மயிர்தூவுதூறுதலை
வேறுமுகம்பசியு மிகுந்தபயமுடையாள்
காகத்தின்தத்துவத்தின் கன்னியவளாகுமென்றார்
கூடுகின்றவாடவரை கூர்நகத்தாற்பல்லதனால்
நாடிக்கடிப்பதுவும் நாணுஞ்சற்றில்லாமை
நிறமதுவும்பங்கமதாய் நேத்திரத்தால்மருட்ட நல்ல
குரங்கினுடதத்துவத்தின் கொம்பனையாளாகுமென்றார்
திண்டுமிண்டானசொல் தேககசுத்தமில்லாமை
மண்டிவெடுத்தகுரல் மல்லுகட்டிச்சேர்தல்
மழுமாரிகண்டவரை வலியப்பிடித்திழுத்தல்
கழுதையின்தத்துவத்தின் கன்னியவளாகுமென்றார்
வையகத்திலேமேலா மணவாளன்சொன்னபடி
மொய்குழலார்சாதி மூன்றின்குறியுரைப்போம்

[மான்சாதி]

மானை நிகர்த்தவிழி வனசமலர்முகமும்
தேனை நிகர்த்தமொழி தேமற்படர்ந்தவுடல்
சுருண்டுநெரித்தகுழல் துய்ப்பபடை நடையும்
திரண்டகோவைக்கனிவாய் செண்பகப்பூதேகமுமாம்
மின்னிடையுந்தென்ன மிளம்பாளைவாசமுமாய்
அன்னநடையும் அழகில்ரதியெனவும்

வட்டமாய்த்தங்கநிற மானவிளமார்பும்
இட்டமுறுகலவிக் கிசைந்திட்டசற்குணமும்
தர்க்கமிடுமுன்கோபி சாப்பாடுமற்பமதாம்
இக்குறியின்மாதவளும் இன்பமுள்ளமான்சாதி

[பெட்டைக்குதிரைச்சாதி]

உயர்ந்துகுளிர்ந்தயுச்சி உட்குழிந்தகன்றகண்கள்
உயர்ந்துபெருத்ததனம் உதடுபருத்திருக்கும்
சாலப்பருத்தமயிர் தந்தமோநீண்டிருக்கும்
தாலவிடைபருத்துத் தாருபோலேவுகிரும்
அடக்கமொன்றுமில்லாமை அரையும்பணைத்திருக்கும்
மடக்கொடியாள்பேசுகின்ற வாய்மைகுளறுதலாம்
போசனத்திலேபிரியம் புருஷன்மேலும்பிரியம்
வீசும்புலால்நாற்ற மிரவுபகல்நித்திரையும்
தீராவெறுப்புஞ் சிவந்தபெருவுநடும்
கூரானமாதுபெட்டைக் குதிரையென்றுசொல்லினரே

[பிடியானைச்சாதி]

சாலப்பருத்தநெற்றி தாடைசெவிநாசி
காலுடனேகைத்தாளுங் கழுத்துமிகப்பருத்து
சுருண்டுசிவந்தமயிர் தொங்குமதரமுமா
முரண்டுநிதஞ்சண்டை மொழியுமிடிபோலாய்
அல்லும்பகலும்கலவி யானதிலேசிந்தையுமாய்
பல்லுமிடையுளதாய் பாவத்துக்கஞ்சாமை
யார்க்குமனுகூவி யானைமதகாரி
பார்க்கப்பனிரெண்டு அங்குலமாமரையுடையாள்
விடியளவுஞ்சண்டைவிடாள் வெட்கத்துக்கஞ்சாமை
பிடியானைச்சாதியென்று பேசினார்முன்னோர்கள்
இன்னச்சிலநீதி யெடுத்துமேகூறவென்றால்
வண்ணமாயிந்நூல் வளருமெனமுடித்தேன்

[வாழி]

ஐங்கரனும்வாழி ஆறுமுகன்வாழி
மங்கைபாகன்வாழி மாயன்பிரமன்வாழி
தூயமுனிவோர்வாழி சுத்தசைவர்வாழி
தேயசெங்கோல்செலுத்தும் நிருபர்மிகவாழி
கற்புடையமாதர் கவிவாணர்தாம்வாழி
விற்பனமாயிதைப்படிக்கும் வித்தகரும்வாழி
கற்றவரும்மற்றவரும் களிப்புடனேவாழி
திருமகள்விலாசயச்சியந்திர சாலையும்வாழியவே.

மருநீதி காதல் - முற்றிற்று.

---

திருமகள் விலாச அச்சகம், சென்னை—1955.

# தமிழ்ப் புத்தக விளம்பரம்

**ஸ்ரீமத் கம்பராமாயண வசனம்** **விலை ரூ. 12-0-0**

பெரிய எழுத்தில் ராயல் 1X8 அளவில் 1600-பக்கங்கள் கொண்டது. 7-காண்டங்கள் : 2-வால்யம். 18-ஆப் டோன் படங்களுடன் அழகாகவும் சுத்தப் பிரதியாகவும் அச்சிடப்பட்டு உயர்ந்த காலிகோ பைண்டு செய்யப்பட் டிருக்கிறது.

“நாடிய பொருள் கைகூடும் ஞானமும் புகழுமுண்டாம்
வீடியல் வழியதாக்கும் வேரியங்கமலை நோக்கும்
நீடிய வரக்கர்சேனை நீறுபட் டழியவாகை
சூடிய சிலையிராமன் தோள்வலி கூறுவோர்க்கே.”

—**கம்பர் வாக்கு :**

ஸ்ரீ ராமபிரான் சரிதையை விரித்துக் கூறும் இந்த இராமாயணமானது மிக்க புண்ணிய கதை யென்பது உலகறிந்த விஷயம். இதனைப் பாராயணஞ் செய்வதாலுண்டாகும் பயன்கள் அளவிடற் கரியனவாம் ; இதனைப் பக்தி சிரத்தையுடன் படிப்பவர்க்கு உலகத்தில் விரும்பக்கூடிய பொருள்களெல்லாம் கைகூடும் ; உயர்ந்த அறிவுண்டாகும் ; கீர்த்தி அதிகரிக்கும் ; மோக்ஷத்தை அடைவிக்கும் ; இலக்குமி கடாக்ஷ முண்டாகும்.

இன்னும் இந்த இராமாயணத்தைப் பக்தியுடன் படித்து முடிக்கு மிடங்களில் கலியாணம் முதலிய மங்களகாரியங்கள் நிறைவேறும் ; புத்திரபாக்கிய முண்டாகும், பசு பால் தானியம் முதலியன விருத்தியாகும் ; பில்லி சூனியம் தீராத நோய் பூத பைசாச உபத்திரவங்கள் முதலியவை நீங்கும் ; பகை நீங்கும் ; விஷ ஜெந்துக்கள் அணுகமாட்டா ; பஞ்சம் நீங்கும் ; நல்ல மழை பெய்யும் ; துக்கமான சம்பவங்கள் நீங்கி மிக்க ஆனந்த முண்டாகும். இவை யெல்லாம் உண்டாவது நிச்சயம். இராமாயணம் படித்த பற்பல இடங்களில் இப்பயன்கள் உண்டாகி யிருக்கின்றன. இவற்றை ஒவ்வொருவரும் அனுபவத்தில் உணர்ந்து கொள்ளலாம்.

---

**கிடைக்குமிடம்:—** **B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,**
57, வெங்கட்ராமய்யர் தெரு, சென்னை—1.

**ஸ்ரீ மஹா பாரதம் வசனகாவியம்** விலை ரூ. 25-0-0

**ஷை உயர்ந்த கிளேஸ் கடிதம்** விலை ரூ. 30-0-0

பெரிய எழுத்தில் அச்சிடப்பட்டு டெம்மி 1x4 பெரிய அளவில் 2083 பக்கங்கள் கொண்டது. 50 படங்களுடன் 18-பர்வங்கள் ; 4-வால்யங்கள் ; உயர்ந்த காலிகோ கட்டிடம் செய்யப்பட்டிருக்கிறது.

இதிகாசங்களி லொன்றாகியும், தர்மார்த்த காம மோக்ஷங்களை அளிக்க வல்ல ஐந்தாம் வேதமென ஸ்ரீ வேதவியாச முனிவரால் வகுக்கப்பட்ட ஸ்ரீ மஹா பாரதத்தை, சைவ வைணவ ஸ்மார்த்த சமயிகளுக்கும் உபயோகமாகும்படி ஆதிபர்வம், சபாபர்வம், ஆரண்ய பர்வம், விராட பர்வம், உத்தியோக பர்வம், வீஷ்ம பர்வம், துரோண பர்வம், கர்ண பர்வம், சல்லிய பர்வம், சவுத்திக பர்வம், ஸ்ரீ பர்வம், சாந்தி பர்வம், அனுசாசனிக பர்வம், அஸ்வமேத பர்வம், ஆசிரமவாச பர்வம், மஹாப்பிரஸ்தானீக பர்வம், சொர்க்காரோகண பர்வம் என்னும் 18-பர்வங்களையும் பாரதப் பிரசங்கியாகிய **த. சண்முகக் கவிராய**ரால் தமிழில் வசனரூபமாகச் செய்தருளியது. இதற்குச் சமான மான நூல் உலகத்திலில்லை என்பது மேதாவிகளின் அபிப்ராயம். இதனை வாசிப்பவர் சுருதி, ஸ்மிருதி, இதிகாச புராணங்களின் இரகஸ்யார்த்தங்களை இனிதுணர்வார்களென்ப துண்மை.

**அத்யாத்ம ராமாயண வசனகாவியம்** விலை ரூ. 5-0-0

ஸ்ரீயஃபதியாகிய நாராயணன் ஸ்ரீ ராமனாக அவதரித்து துஷ்ட நிக்ரக சிஷ்ட பரிபாலனம் செய்த சரித்திரத்தைக் கூறும் இந்த அத்யாத்ம ராமாயணம், பார்வதி தேவியாருக்கு பரமசிவனால் உபதேசிக்கப்பட்டது. இதில் ஸீதாராமர்களின் சரித்திரத்தை வியாஜீகரித்து ஆத்மஸ்வரூபம் கூறப்பட்டிருக்கிறது. கலியுகத்தில் கொடும்பாவம் செய்தவர்களுக்கு பரகதி கிடைக்கும் மார்க்கம் எந்த நூலில் கூறப்பட்டிருக்கிறதென்று வினவிய நாரதருக்கு பிரம்மதேவர் இந்த அத்யாத்ம ராமாயணம் ஒன்றே அப் பரகதி செல்லும் மார்க்கத்தைக் கூறுகிறதென்று சொல்லியிருக்கிறார். இவ்வித மகிமைவாய்ந்த இந்த அத்யாத்ம ராமாயணம் ஏழு காண்டங்களுள்ளது. இது தகுந்த ஸம்ஸ்கிருத பண்டிதரைக்கொண்டு தமிழில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. இதை பண்டிதரேயன்றி பாமரரும் படித்துப் பயன்பெறுமாறு எளிய தமிழில் எழுதப்பட்டுள்ளது. உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சிட்டு உயர்ந்த காலிகோ கட்டிடம் செய்துள்ளது. 550-பக்கங்கள் கொண்டது.

---

கிடைக்குமிடம்:— **B. இரத்தின நாயகர் சன்ஸ்,**
**57, வெங்கட்ராமய்யர் தெரு. சென்னை—1.**

# புத்தக விளம்பரம்

☞ இதேமாதிரி பெரிய எழுத்தில் அச்சிடப்பட்ட புஸ்தகங்கள் :—

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| ஸ்ரீ மஹா பாரதம் வசனம் 18-பர்வம், 4-வால்யம் படங்களுடன் | | 25 | 0 |
| ஸ்ரீமத் கம்பராமாயண வசனம் படங்களுடன் | | 12 | 0 |
| ஸ்ரீமத் கந்தபுராண வசனம் 2-வால்யம்; 42-படங்களுடன் | | 12 | 0 |
| ஸ்ரீ மஹா பாகவதம் படங்களுடன் | | 12 | 0 |
| ஆதிபர்வம் | | 5 | 0 |
| ஸ்ரீ மகா பக்தவிஜயம் 6-தாசர்கள் அடங்கியது | | 5 | 0 |
| ஸ்ரீராமர் அஸ்வமேதயாகம் படங்களுடன் | | 5 | 0 |
| விக்கிரமாதித்தன் கதை | ,, | 4 | 0 |
| விராடபர்வம் | ,, | 3 | 8 |
| தருமர் அஸ்வமேதயாகம் | ,, | 1 | 8 |
| பஞ்சபாண்டவர் வனவாசம் | ,, | 1 | 4 |
| மதனகாமராஜன் கதை | ,, | 1 | 4 |
| அல்லியரசாணிமாலை | ,, | 1 | 0 |
| அபிமன்னன் சுந்தரிமாலை | ,, | 1 | 4 |
| வைகுந்த அம்மானை | ,, | 1 | 4 |
| காத்தவராயசுவாமி கதை | ,, | 1 | 0 |
| கிருஷ்ணன் தூது | ,, | 1 | 0 |
| நளச்சக்கிரவர்த்தி கதை | ,, | 1 | 0 |
| பவளக்கொடிமாலை | ,, | 0 | 12 |
| ஆரவல்லி சூரவல்லி கதை | ,, | 0 | 12 |
| புலந்திரன் களவு மாலை | ,, | 0 | 12 |
| மரியாதைராமன் கதை | ,, | 0 | 12 |
| கோவிலன் கதை | ,, | 0 | 12 |
| சித்திராபுத்திரன் கதை | ,, | 0 | 12 |
| மயிலிராவணன் கதை | ,, | 0 | 12 |
| புரூரவச்சக்கிரவர்த்திகதை | ,, | 0 | 12 |
| கர்னமகாராஜன் சண்டை | ,, | 0 | 8 |
| தேசிங்குராஜன்கதை | ,, | 0 | 8 |
| பொன்னுருவிமசக்கை | ,, | 0 | 8 |
| மதுரைவீரன் கதை | ,, | 0 | 8 |

கிடைக்குமிடம்:— B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,
நெ. 57, வெங்கட்ராமய்யர் தெரு, சென்னை—1.